# பேரறிஞர் இருவர்

மா. ரா. அரசு
சென்னை-600001

டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
எம்.ஏ., எல்,டி., எம்.ஓ.எல்., பிஎச். டி.,
சென்னை.

மலர் நிலையம்
133. பிராட்வே... சென்னை-1

முதற்பதிப்பு : 1959
இரண்டாம் பதிப்பு: 1960
பதிப்புரிமை உடையது.

[24 பவுண்டு வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டுள்ளது.]

Approved by the Madras Text-Book Committee for class use. Vide page 36 of Fort St. George Gazette Supplement to Part I-B dated 18-5-60.

விலை ரூ. 1-00

லெட்சுமன் பிரிண்டர்ஸ், 133, பிராட்வே, சென்னை-1.

# முன்னுரை

'பேரறிஞர் இருவர்' என்னும் இந் நூலில் கிரேக்க நாட்டுப் பெரியார்களான சாக்ரடீஸ், பிளேட்டோ என்னும் இருவர்தம் வரலாறுகளும் தொண்டுகளும் கூறப்பட்டுள்ளன. கற்கின்ற இருபாலோர்க்கும் இத்தகைய வரலாறுகள் வருங் காலத்தில் சிறந்து வாழவேண்டும் என்னும் விருப் பத்தை உண்டாக்கும் என்னும் எண்ணத்தின் விளைவு இந்நூலாக உருக்கொண்டது.

*மா. இராசமாணிக்கனார்*

# பொருளடக்கம்


## I. முன்னுரை

1. வாழ்க்கையில் வெற்றி ... 1
2. கிரேக்கநாட்டு வரலாறு ... 14
3. நாகரிகமும் நல்வாழ்வும் ... 25

## II. சாக்ரடீஸ்

1. ஏதென்ஸ் ... 44
2. சாக்ரடீஸ் ... 51
3. சொல்லின் செல்வர் ... 64
4. சிறையில் உரையாடல் ... 75
5. கருத்துரைகள் ... 89

## III. பிளேட்டோ

1. அமைதியற்ற சூழ்நிலை ... 96
2. பிளேட்டோ ... 100
3. எழுத்துத் தொண்டு ... 111
4. அமுத மொழிகள் ... 122

# முன்னுரை

## 1. வாழ்க்கையில் வெற்றி

மனிதன் தன்னோடு வாழும் பிற மனிதரை விடச் சிறந்தவனாக வாழவேண்டும் என்று எண்ணு கின்றான்; அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளு கின்றான்; இயன்ற அளவு முயற்சிகளில் வெற்றி கண்டு வாழ்க்கைத் தரத்தில் உயர்வைக் காண கின்றான். சில வேளைகளில் அவன் தவறான துறை களில்—குறுக்கு வழிகளில் வெற்றி காண முயல் கின்றான்; அதில் வெற்றி அல்லது தோல்வி பெறு கின்றான்; வெற்றி பெற்றபோது மகிழ்ந்தும், தோல்வி கிடைத்தபோது வருந்தியும் காலத்தைக் கழிக் கின்றான்.

இவ்வகையில் சாராமல் தொடர்ந்து கடமை களைச் செய்து அதன்வழி உயர்வு காண வேண்டும் என்று எண்ணுவோரும் உளர். அவர்கள் அறம், நேர்மை, தன்னடக்கம் முதலிய நல்ல பண்புகளுக்கு மதிப்பளிப்பர்; வாழ்க்கையில் படிப்படியான வெற்றி யைப் பெறுவர். ஆனால் அந்த வெற்றி நிலையாக இருக்கும். வாழ்க்கையில் படிப்படியான வெற்றியைப் பெறுதற்குரிய பண்புகள் யாவை என்பதை இனிக் காண்போம் :

## முயற்சி

வாழ்க்கையில் நிலையான புகழையும் நிறைந்த மகிழ்ச்சியையும் பெறவேண்டும் என்று எண்ணு பவர்கள் முயற்சி உடையவர்களாக இருக்கவேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்", "முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்",

" ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர் ",

"முயற்சியால் முடியாததுண்டோ" என்னும் பொன் மொழிகள் எல்லாம் முயற்சியின் சிறப்பை வலி யுறுத்தப் பிறந்தவையே. நாடி நரம்புகளின் உணர்வு கட்டுப்பட்டு, உலக நாகரிகங்களில் மோகம் கொண்டு, அலைந்து திரிபவன் வாழ்க்கையில் என்றுமே வெற்றி காணுதல் இயலாது. (வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் என்பதை எல்லோரும் உணர வேண்டும். அந்தப் போராட்டத்தில் வெற்றி காணத் தூய்மையான நெறியையே நாட வேண்டும்.) நீரோட்டமுள்ள ஆற்றையும் நீரோட்டமில்லா ஆற் றையும் நாம் காணுகின்றோம். இவற்றுள் நீரோட்டம் இல்லாத ஆற்றுநீர் பார்க்க அருவருப்புத் தருவதாய், பருகப் பயனற்றதாய், உடல் நலத்துக்குக் கேடு விளைவிப்பதாய் இருக்கும். அதே வேளையில் நீரோட்ட முள்ள ஆற்றுநீர் காண்பதற்கு மகிழ்ச்சியைத் தருவ தாகவும், பருகுவதற்கு உரியதாகவும், பயனுள்ள பல காரியங்கட்கு உரியதாகவும் இருக்கும். இவ்விரண்டு நீர்நிலைகளுள் ஓட்டமுள்ள ஆற்று நீரே சிறந்தது அன்றோ ?

வாழ்க்கையில் வெற்றியைக் காண வேண்டும் என்று விரும்பும் மக்கள் ஓட்டமுள்ள ஆற்றுநீரைப் போலச் சுறுசுறுப்பு உடையவர்களாக விளங்க முயல வேண்டும். அப்படியிருந்தால்தான் அவர்கள் முகம் பொலிவுற்று விளங்கும்; உடல் எழில்மிக்கு இருக்கும்; உள்ளம் தூய்மையாக இருக்கும்; பிறர்க்குத் தொண்டாற்றுவதிலேயே சிந்தனை இருக்கும். தம்முடைய முயற்சிகளையும் எண்ணங்களையும் தவறான வழிகளில் பயன்படுத்துவோர் வாழ்க்கையின் ஏதேனும் ஒரு படியில் சறுக்கி விழுவர் என்பது உண்மையாகும். எனவே எதனையும் எளிதாக்கிக் கொள்ள, எடுத்த செயலில் விரைந்த முன்னேற்றம் காண, ஒருவர்க்கு விடாமுயற்சி தேவை என்னலாம். விடாமுயற்சியுடன் உறுதியான உள்ளமும் இருக்குமானால், எடுத்த காரியங்களில் ஒருவர்க்குத் தோல்விகள் நேரா.

## தந்நலமின்மை

**திருநாவுக்கரசர்** என்பவர் சைவசமய குரவர் நால்வருள் ஒருவர். இவருக்கு அப்பர், தருமசேனர் என்னும் பெயர்களும் உண்டு. இவர் இறைவனிடம் எத்தகைய கைம்மாறும் கருதாமல் அன்புத் தொண்டாற்றினார். கண்ணப்ப நாயனார் இறைவனிடமிருந்து எத்தகைய பயனையும் கருதாமல் காளத்தி நாதருக்குத் தம் கண்ணினை எடுத்து அப்பிப் புகழ்பெற்றார். இங்ஙனம் தந்நலம் கருதாது நலம்பல புரிந்த நல்லவர்கள் வரலாற்றைப் ‘பெரிய புராணம்’ என்னும் பேரிலக்கியத்திற் காணலாம்.

ஆபிரகாம் லிங்கன், ஜியார்ஜ் வாஷிங்குடன், புக்கர் வாஷிங்குடன் ஆகியோர் நீகிரோவர் நன்மைக்காகப் பாடுபட்டனர். நீகிரோவர் இறைவனுல் படைக்கப்பட்ட மனித சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை அடிமையாகக் கொள்வதும், விரும்பியவாறெல்லாம் துன்புறுத்தலாம் என்று எண்ணுவதும் தவருகும் என்று எண்ணிய எண்ணமே அவர்களுடைய முயற்சிக்குக் கால்கோளாய் அமைந்தது. அந்த முயற்சியில் தந்நலம் என்பதைச் சிறிதளவும் நாம் காண முடியாது. அவர்கள் தந்நலம் இல்லாமல் உழைத்ததால்தான் தாம் மேற்கொண்ட முயற்சியில் வெற்றி கண்டனர்.

நம் காலத்தில் வாழ்ந்த **காந்தியடிகளின்** தந்நலமற்ற போராட்ட நிகழ்ச்சிகளை நாம் அறிவோம். இந்திய நாட்டில் உள்ள முகம்மதியர்களும் இந்துக்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று விரும்பிய அடிகள், தன்னந்தனியாக எந்தத் துணையுமில்லாமல் முன்பின் பழக்கமில்லாத பகுதிகளில் தடியே துணையாய், இறைவன் நினைவே துணையாய், தொண்டு மனமே துணையாய் இருக்க நடந்து சென்ருர்; தம்முடைய செயலில் வெற்றி கண்டார். இங்ஙனம் சான்று காட்டிச் செல்லத் தக்க வரலாறுகள் பல உண்டு.

## செருக்கறுத்தல்

“ யான்எனது என்னும் செருக்கறுப்பான், வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் ”

என்பது வள்ளுவர் வாக்கு. '**யான்**' என்பதையும் '**எனது**' என்பதையும் ஒழிக்கவேண்டும் என்றும், அவையிரண்டும் தன்னைப்பற்றி மிகுதியாக எண்ணி மகிழ ஒருவர்க்குத் துணைபுரியும் சொற்களாகும் என்றும் அறிஞர் கூறுவர். 'யான்', 'எனது' என்னும் பற்று அற்ற நிலையில் உள்ளவரால்தான் பிறர்க்கு நல்ல தொண்டுகள் ஆற்ற முடியும். மன அமைதி யுடன் வாழ முடியும். இக்கருத்தினை விளக்க மேலும் சில சான்றுகளைக் காண்போம்:

முகலாயப் பேரரசர் அக்பருடைய பேரவைக்கு இராசபுத்திர வீரர் இருவர் சென்றனர். அவர்கள் தங்கட்குப் பணி நாடி அங்குச் சென்றனர். அக்பர் அவர்களுடைய தகுதிபற்றி அவர்களை வினவினார். அவர்கள் தங்களை வீரர்கள் என்று கூறிக்கொண் டனர். அவ்வளவில் அக்கூற்றினை மெய்ப்பிக்குமாறு அக்பர் ஆணையிட்டார். வீரர்கள் வாளேந்திப் போரிட் டனர். இறுதியில், வீரர்கள் இருவரும் இறந்தனர். ஆனால் அவர்தம் வீரவுணர்ச்சி இறக்கவில்லை. அவர்கள் பேராற்றல் மிக்கவர்களாய் விளங்கியமைக் 'குக் காரணம் 'யான்', எனது' என்னும் செருக்கு அறுத்தமையேயாகும். இந்தக் கதை வியப்புக்கு உரியதாகத் தோன்றக்கூடும். கதையை விட்டுவிட்டுக் கதை கற்பிக்கும் கருத்தைமட்டும் காண்போம். ஒருவன் ஏதேனும் ஒரு வேலையைச் செய்யத் தொடங் கும்போது 'தான்' என்பதை மறந்துவிட வேண்டும் என்னும் படிப்பினையை இக்கதையால் நாம் பெற முடிகிறதன்றோ? எனவே, வாழ்க்கையில் வெற்றி காண, நாம் செய்யும் செயல்களில் 'யான்', 'எனது'

என்னும் செருக்கை அறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## உலகப்பற்று

"**யாதும் ஊரே; யாவரும் கேளிர்**" என்பது கணியன் பூங்குன்றனர் பாட்டு. எந்த ஊரையும் தம்மூராக எண்ணுவதும் எல்லா மக்களையும் தம்மக்களாக எண்ணுவதும் உயர்ந்த மன நிலைகளாகும். சான்றோர் இத்தகைய பற்றுணர்ச்சிதான் வையகத்தை வாழ்விக்க வல்லதாகும் என்பர். நம்மைச் சார்ந்த நாடுகளிடத்துப் பற்றுக் கொள்வது மிகச் சிறந்த பண்பாகும். அன்புக்கு அடைக்கும் தாழ் இல்லை. அன்புடையவர்கள் தம்முடைய எலும்பாலும் பிறர்க்குத் தொண்டுபுரிதல் கூடும். அன்பில்லாதவர்கள் யாக்கை எலும்பும் தோலும் போர்த்த உடலாகத்தான் காட்சியளிக்கும்.

கூட்டுறவு இயக்கங்கள் உலகெங்கும் பரவிக் கிடக்கின்றன. பரந்த உலகில் பரவிக் கிடக்கும் கூட்டுறவு இயக்கங்களின் அடிப்படைத் தத்துவம்தான் என்ன ? உலக மக்கள் மனத்தகத்தே ஊறிக் கிடக்கும் அன்புதான் காரணம் என்னலாம். தம்மிடம் தொடர்ந்து பொருள் வாங்குவோர் நலனைக் கருதாத வணிகன் தன் வாழ்க்கையில் வளம் காண முடியாது. ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாற்றிக்கொண்டு வாழ்ந்தாலல்லது வையகத்தில் வாழ்தல் இயலாது.

## மகிழ்வோடிருத்தல்

மகிழ்வோடிருத்தல் என்பதும் வாழ்க்கையின் வெற்றிக்குரிய சிறந்த பண்பாகும். அன்றலர்ந்த

மலரைப்போல் மகிழ்ச்சி முகம் கொண்டு விளங்கு வதே சிறந்தது. புன்சிரிப்புடன் கூடிய முகமுடை யவனே யாவராலும் என்றும் விரும்பப்படுவான். ஒருவன் தான் செய்யும் வேலையைப் பற்றியோ, வேலை யின் விளைவுகள் பற்றியோ எண்ணுதல் கூடாது. அவன் வேலை செய்வது தன்னுடைய கடமை என்று உணர்ந்து செய்வானுயின், அந்த வேலை அவனுக்குத் தக்க பயனைத் தரும்.) (இறந்த காலத்தைப் பற்றியோ, நிகழ்காலத்தைப்பற்றியோ, எதிர்காலத்தைப் பற்றியோ கவலை கொள்ளாமல் வாழ்க்கையில் தர மான உயர்நிலையைப் பெறவேண்டும் எனும் எண் ணத்தோடு தன் கடமைகளைச் செய்பவனே வீர ஞவான். இந்த உணர்வானது ஒருவனை எல்லா நேரங் களிலும் மகிழ்ச்சியாய் இருக்கச் செய்யும்.) விதை ஒன்று வளர்ந்து செடியாவதற்குக் காற்றும், தண் ணீரும், மண்ணும் தேவைப்படுகின்றன. அவற்றை விதைக்கு உதவி, விதை வளர, இயற்கை துணை செய் கின்றது. அதுபோலவே முயற்சி உடையவனுக்கு இயற்கை தகுந்த வழிகளில் எல்லாம் துணை செய் கின்றது.

இருள்மிக்க இரவில் நெடுந்தொலைவு நடந்து செல்லவேண்டும் ஒருவன் கையில் சிறிய ஒரு மின் விளக்கை எடுத்துச் செல்லுகின்றுன். அந்த விளக்கின் ஒளி சுமார் பத்தடி தொலைவுக்கேத் தெரியும். ஆதனு லேயே அப்பத்தடிக்கு அப்பாற்பட்ட இடமெல்லாம் இருள் சூழ்ந்த இடமென்று சொல்லிவிட முடியாது. நடந்து செல்லச் செல்ல இருள்மிக்க பாதை படிப்படி யாக ஒளிர்கிறது. அதுபோலவே மகிழ்வோடு கடமை

களைச் செய்பவன் மெல்ல மெல்ல நல்ல சிறப்பைப் பெறுவான். குளத்தில் நீராடிக் கொண்டிருக்கும் ஒருவன் திடீரென்று நீரில் மூழ்கி விடுகிறான் என்று கொள்வோம். நீந்திக் கரையேற அவனுக்குத் தெரியாது. ஆயினும் அவன் அச்சம் கொள்ளாமல் இருப்பானாயின், குளத்தில் மூழ்காமல் தன்னைக் காத்துக் கொள்ள முடியும். அச்சம் கொண்ட மனிதன் குளத்தில் மூழ்கி இறப்பான்.

(எதிர்காலத்தைப்பற்றி எண்ணி வெற்றிப் பாதையை நாடி விரைந்து செல்லும் எண்ணங்களைப் பற்றிச் சிறிது அறிவோம்.) தெருவில் நடந்துசெல்லும் மனிதன் தன்னுடைய நிழல் நிலத்தில் படிவதைக் காண்கின்றான். அந்நிழலைப் பிடிக்க அவன் எண்ணுகின்றான். எண்ணம் செயலாகின்றது. எனினும் அவன் தோல்வியுறுகின்றான். ஆயின், அவனே நிழலுக்கு எதிர்புறமாகக் கதிரவனைக் காணும் நிலையில் நின்று நடப்பானாயின், நிழல் அவனைப் பின்தொடர்ந்து ஓடும். அதுபோலவே (வெற்றியை எண்ணி எண்ணிக் காலத்தைக் கழிப்பதைவிட, கடமைகளைத் தொடர்ந்து செய்தால் வெற்றி நம்மை நாடிவரும்) என்பதை உணரலாம்.

அறங்கூறவையத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் நீதிபதி வழக்கறிஞர்களையும், கட்சிக்காரர்களையும் பணியாட்களையும் பார்வையாளர்களையும் அழைத்து வந்தபின் ஆசனத்தில் அமர்வதில்லை. அவர் வந்து அமர்கின்றார்; பணியாட்களும், வழக்கறிஞர்களும் கட்சிக்காரர்களும், பார்வையாளர்களும் அவரை

நாடி வருகின்றனர். இருந்த இடத்திலிருந்தே எல்லோரையும் ஈர்க்கும் ஆற்றல் நீதிபதிக்கு உள்ளது. அது போலவே வெற்றியை நாடி நாம் அலையாமல் மகிழ்வோடிருந்து கடமைகளைத் தொடர்ந்து செய்து, வெற்றி நம்மை நாடிவரும் நிலையை உண்டாக்கிக் கொள்ள வெண்டும்.

## அஞ்சாமை

'வீரன் தன்னுடைய வாழ்வில் ஒரே ஒரு முறை தான் இறக்கின்றான். ஆனால் கோழை தன்னுடைய வாழ்வில் பலமுறை சாகின்றான்' என்பது முதுமொழி. அச்சமில்லாமல் இருத்தல் வாழ்க்கையின் வெற்றிக்குரிய அடிப்படைகளுள் ஒன்றாகும் என்று **சுவாமி இராமதீர்த்தர்** கூறுகின்றார். அச்சமில்லாமல் செய்யும் செயல்களில் வெற்றி கிடைப்பது எளிதாகும்.

பஞ்சாப் நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரன் ஒருவன் கப்பல் பிரயாணம் செய்தபோது நோய் வாய்ப்பட்டான். அவன் தன்னுடைய நோயைப் பற்றியே பெரிதும் எண்ணிக் கலங்கினான். அதனால் அவனது நோய் மேலும் பெருகியது. தான் இறந்துபட நேருமோ என்று அஞ்சினான். அச்சமும் கவலையும் அவனுக்கு நலிவைத் தந்தன. அவனைப் பரிசோதித்த மருத்துவர் அவனுக்குக் கொடிய நோய் கண்டிருப்பதாகவும் அவனைத் தொடர்ந்து கப்பலில் வைத்துக் கொண்டிருந்தால் எஞ்சிய பிரயாணிகளுக்கும் நோய் பரவக்கூடும் என்றும் கூறினார். மற்றப் பிரயாணிகளுக்கு எந்தவிதக் கேடும் நேராமல் காக்க, கொடிய நோய் கொண்ட வீரனைக் கடலில் தூக்கி எறிந்துவிட

வேண்டும் என்றும் அவர் கூறினர். மருத்துவர் முடிவு வீரனது செவிக்கு எட்டியது. உடனே அவன் விரைந்தெழுந்தான். அதுகாறும் அவனுக்கிருந்த அச்சம் அவனைவிட்டுப் பறந்தது; மருத்துவரை நாடிச் சென்றுன்; "நானு நோயாளி?' என்னையா கடலில் எறியவேண்டும்? இப்படி யெல்லாம் நீயா சொன்னுய்? உன்னை நான் இப்போது சுட்டுக் கொல்லப் போகின்றேன்", என்று கூறினன். மருத்துவர் வீரனது போக்கைக் கண்டு அஞ்சினர். உடனே, அவன் நலமுடன் இருப்பதாகவும், கப்பலில் பிரயாணம் தொடர்ந்து செய்யலாம் என்றும் நற்சான்றிதழை எழுதிக் கொடுத்தார். அச்சமின்மை மனிதனுக்கு எல்லையற்ற ஆற்றலைத் தருகின்றது. எனவே, வாழ்க்கையில் வெற்றி காணவேண்டும் என்று விரும்புவோர் அச்சமில்லாமல் இருக்கவேண்டும்.

## தன்னை உணர்தல்

தன்னை உணர்தலும் தன்னை நம்புதலுமாகிய பண்புகள் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டுவனவாகும். தனக்குத்தான் உதவி செய்துகொள்பவனுக்கே கடவுளும் துணை செய்வார். தன்னை உணர்ந்த ஒருவனுக்கு முடியாமை என்பதோ, இயலாமை என்பதோ இல்லை என்றே கூறவேண்டும்.

காட்டு விலங்குகளை எடுத்துக் கொள்வோம். சிங்கம் தன் ஆற்றலை உணர்ந்த விலங்கு. அது எவர்க்கும் அஞ்சாமல் தன்னந்தனியாக வாழும் ஆற்றல் பெற்றுள்ளது. அது எல்லா நிலைகளிலும் வெற்றி வீரனுகத் தோற்ற மளிக்கின்றது. இந்தியாவில் முதன்

முதலாக யானைகளைக் கண்ட கிரேக்கர்கள் 'நடமாடும் மலைகள்' என்று அவற்றை அழைத்தனர். பார்ப்பதற்குப் பெரியனவாகவும் நிறைந்த வலிமைகொண்டனவாகவும் உள்ள யானைகள் சிங்கங்களைப் போல அமைதியாக வாழ முடிவதில்லை. அதற்குக் காரணம் என்ன? யானைகள் சிங்கத்தைப் போலத் தனித்தனியாக வாழ்வதில்லை; கூட்டம் கூட்டமாக வாழும். இரவில் ஏதேனும் ஒரு யானை உறங்கும் யானைகளைக் காக்கும். தன்னுற்றலை உணராததும், எத்தகைய எதிர்ப்புக்களையும் சமாளிக்கக் கூடும் என்னும் துணிவில்லாமையுமே யானைகள் அமைதியாக வாழ முடியாமைக்குரிய காரணங்களாகும். சிங்கத்தின் உறுமலைக் கேட்டதும் யானைகள் அஞ்சி நடுங்கும். பல சிங்கங்களைக் காலடியில் மிதித்து நசுக்கக் கூடும் நிலையில் உள்ள யானைகள், தனியொரு சிங்கத்தைக் கண்டதும் அஞ்சி நடுங்குவதைக் கொண்டு நாம் கற்கும் படிப்பினைதான் யாது? நம்மை நாம் நன்கு உணர வேண்டும், நம்முடைய முயற்சிகளிலும் செயல் முறைகளிலும் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பனவே நாம் பெறும் படிப்பினைகளாகும். இக்கருத்தை நன்கு விளக்கும் சிறு கதையொன்றை இங்குக் காண்போம்:

உடன்பிறந்தார் இருவர் தந்தை சொத்தைத் தம்முள் பகிர்ந்து கொண்டனர். அவருள் ஒருவன் சில ஆண்டுகளில் தமக்குரிய சொத்தை ஒழித்துவிட்டான். மற்றொருவன் அதனைப் பன்மடங்காகப் பெருக்கி விட்டான். அவர் இருவரும் தொடக்கத்தில் பகிர்ந்துகொண்ட தொகை ஒரே அளவினதாகும்.

ஆயினும், சில ஆண்டுகளுக்குள்ளேயே பெருத்த மாறுதல் நேர்ந்துவிட்டது. இதற்குக் காரணம் என்னை? ஒருவன் பகிர்ந்துகொண்ட சொத்தை முதலாகக் கொண்டு வாணிகம் செய்யலானுன். மற்ருருவன் எந்தவிதத் தொழிலும் செய்யாமல் எண்ணற்ற ஆட்களைப் பணிசெய்ய அமர்த்திக் கொண்டு ஆடம்பர வாழ்வு வாழலானுன். முன்னவன் மனம் ஆக்கத்துறையில் முனைந்தது; தன் நிலையைப் பற்றி எண்ணியது; அதற்கேற்றபடி வாழவேண்டும் என்று எண்ணியது; தன்னுடைய முயற்சிகளில் நிறைந்த நம்பிக்கை வைத்தது. பின்னவன் மனமோ தன்னுடைய முயற்சிகளை நம்பவில்லை. அவன் தன் ஆற்றலையும் உணரவில்லை; தனக்கென கிடைத்த சொத்தை முதலீடு செய்து தொழில் செய்தால் என்ன நேருமோ என்று எண்ணித் தயங்கினுன்: எனவே, அவன் அந்தச் சொத்தை வைத்தே சுக வாழ்வு வாழத் தொடங்கினுன். ஏன் என்று கேட்க ஆட்கள், தனக்குத் தேவையானவற்றையெல்லாம் வேளை அறிந்து செய்ய ஆட்கள் என்று எண்ணற்ற ஆட்களை நியமித்து உழைப்பின்றி மகிழ்ந்தான். அதனுல் சொத்து அழிந்தது; அவன் துன்புற்ருன்.

## முடிவுரை

இதுகாறும் கூறப்பெற்ற நற்பண்புகள் யாவும் தனி மனிதன் வாழ்க்கையைச் செப்பனிட வல்லன. வாழ்க்கையில் வெற்றியும் அமைதியும் காண வேண்டும் என்று எண்ணுவோர்க்கு அப்பண்புகள் நல்ல துணையாய் அமைவனவாகும். இத்தகைய நற்பண்பு

கள் பல துணையாய் அமையத் தாம் வாழ்ந்த சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நல்ல தொண்டுகள் செய்த பேரறிஞர் சிலராவர். அவருள் சாக்ரடீஸ், பிளேட்டோ என்பவர் இருவராவர்.

கிரேக்க நாட்டுப் பேரறிஞர்களான சாக்ரடீஸும் பிளேட்டோவும் தாம் வாழ்ந்த சமுதாய வளர்ச்சிக்குரிய துறைகளில் ஈடுபட்டுப் பாடுபட்டனர். அவ்விருவருள் முன்னவர் **ஆசிரியர்**; பின்னவர் **மாணவர்**. ஆசிரியரும் மாணவரும் தாம் பிறந்த பொன்னாட்டுக்குச் செய்த தொண்டுகள் யாவை என்பதை இங்கு விரிவாக அறிவோம்.

# 2. கிரேக்க நாட்டு வரலாறு

## பெயர் வந்த வழி

நாகரிக நாடுகள் சிலவற்றுள் ஒன்று என்று பாராட்டப்படும் கிரேக்க நாட்டுக்கு உண்மையான பெயர் கிரேக்க நாடு என்பது அன்று. அங்கு வாழ்ந்த மக்களுக்கும் பழைய காலத்தில் கிரேக்கர்கள் என்ற பெயர் இருந்ததில்லை. கிரேக்க நாட்டைச் சேர்ந்த யூபியா[1] என்ற பகுதியிலிருந்து கிரையீ[2] என்னும் இனத்து மக்கள் இத்தாலியை அடுத்துள்ள நேப்பிள்சு[3]க்குச் சென்று குடியேறினர். உரோம் நாட்டவர் இவர்களைக் கிரேக்கி[4] என்றழைத்தனர்; கிரேக்கி என்று அழைக்கப்பட்டவர்கள் எந்தப் பகுதியிலிருந்து வந்தார்களோ அந்தப் பகுதியைக் **கிரீஸ்**[5] என்று அழைத்தனர்; பின்னர் அங்கு வாழ்ந்த மக்களைக் **கிரேக்கர்கள்**[6] என்று குறிப்பிட்டனர்.

இதற்கு முன்னர் **எல்லாஸ்**[7] என்னும் பெயரே கிரேக்க நாட்டுக்கு இருந்தது. அந்தப் பெயர் வந்ததற்குக் கிரேக்கர்கள் சுவையானதொரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

---

1. Euboea 2. Graii 3. Naples 4. Graici 5. Greece 6. Greeks 7. Hellas.

கிறிஸ்துநாதருக்குப் பதினைந்து நூற்றுண்டுகட்கு முன்னர் உலகில் அறம் பிறழ்ந்த செயல்கள் மிகுந்து விட்டன. அதனைப் பொருத இறைவன் நீர்ப் பெருக்கை உண்டுபண்ணி, உலகை நீருள் ஆழ்த்தி அழித்துவிட எண்ணினர். அந்த வெள்ளப்பெருக்கில் மாண்டவர் தொகை மிகுதி. இருவரே பிழைத்தனர். அவர்கள் இருவரும் கணவன் மனைவியராவர். அவர்கட்குக் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு ஹெல்லன்[1] என்று பெயரிடப்பட்டது. ஹெல்லன் வழி வந்தவர்கள் ஹெல்லனீயர்கள்[2] எனப்பட்டனர். அவனுக்கு இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெயரர்களும் இருந்தனர். அவர்கள் பெயர்கள் முறையே இயோலஸ்,[3] டோரஸ்,[4] ஐயோன்,[5] அக்கீயஸ்[6] என்பதாகும். இவர்கள் வழி வந்தவர்கள் இயோலியர், டோரியர், ஐயோனியர், அக்கீயம் என்றழைக்கப்பட்டனர். இந்நான்கு பிரிவுகளும் கிரேக்கர்க்குள் அமைந்த பிரிவுகளாகும். இப்பிரிவுகளைச் சாராதவர்கள் கிரேக்க நாட்டைச் சாராதவராகக் கருதப் பட்டனர்.

## குடியேற்ற நாடுகள்

கி. பி. எட்டாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் கிரேக்க நாட்டில் நகர அரசுகள்[7] உண்டாயின. நகர அரசுகள் பல தோன்றிய பின்பு ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் தொகை பெருகிவிட்டது. இதனுல் உண்ண உணவும் இருக்க இடமும் இல்லாத நிலைமை

1. Hellen 2. Hellenese 3. Aeolus 4. Dorus 5. Ion 6. Achaeus. 7. City States

ஏற்பட்டது. எனவே, நகர அரசுகள் தம் குடிமக்களைப் பிற பகுதிகட்குச் சென்று குடியேற அனுமதித்தன. கி. மு. 700-ஆம் ஆண்டு முதல் கி. மு. 550-ஆம் ஆண்டு வரையில் இத்தாலியிலும், கார்சிக்காவிலும், ஸார்பீனியாவிலும், சிசிலியிலும், ஆப்பிரிக்காவின் வட பகுதியிலும், கருங்கடலோரத்திலும் பல குடியேற்ற நகரங்கள் உண்டாயின.

## சிறப்புக்கு வழியில்லை

இயற்கையான நல்ல பண்புகள் என்றும் போற்றப்படும். நல்ல பண்புகளை எவரும் இழித்தும் பழித்தும் பேசிவிட முடியாது. நல்ல பண்புடையவர்களைச் சமுதாயச் சிறப்பு நிலையிலிருந்து ஒதுக்கிவிடவும் முடியாது. ஆதலால் சிறந்த பண்புகள் இடையூறுகளால் அழிவதில்லை என்னும் கருத்தை விளக்கும் வகையில், 'காய்ச்சப்படுவதால் பால் தன்னுடைய சுவையில் குறைவதில்லை,' 'நெருப்பிலிட்டு உருக்கியபோதும் பொன் தன் நிறத்தில் குன்றுவதில்லை,' என்னும் கருத்தமைந்த பழமொழிகள் நம்மிடையே இன்றும் நிலவுகின்றன.

கிரேக்க மொழிதான் மேலை நாட்டு மொழிகட்கெல்லாம் அடிப்படையாக விளங்கிய மொழி. அவ்வாறே கிரேக்க நாகரிகம்தான் மேலை நாட்டு நாகரிகச் சிறப்புக்கு அடிப்படையாக விளங்கியது. கிரேக்க நாடு காலப்போக்கில் உரோம் நாட்டுடன் சேர்ந்து ஒன்றுபட்டுவிட்ட பின்பு, கிரேக்கர்களது கலைச் சிறப்பை உரோமர்கள் பாராட்டினர்; தங்களுடைய

சிறப்புக்கு அதனை அடிப்படையாகக்கொண்டு களித்தனர்.

உலக நாடுகளில் இலக்கிய மறுமலர்ச்சி கி. பி பதினைரும் நூற்றுண்டில் தோன்றியது. அறிஞர்கள் கிரேக்கர்களுக்குரியவும் உரோமர்களுக்குரியவுமான சிறு காவியங்களையும் பெருங்காவியங்களையும், புராணங்களையும் கற்கலாயினர்; அவற்றையெல்லாம் ஆராய்ந்து கிரேக்கர்களுடைய தனிச் சிறப்பை உலகறியச் செய்தனர்.

உலக நாடுகளுக்கு எல்லாவிதக் கலைகளையும் அறிமுகப்படுத்திய பெருமை கிரேக்க நாட்டுக்கே உரியதாகும். அவர்கள் சிற்பக்கலை, ஓவியக்கலை போன்ற நுண்கலைகளிலும் அறிவியற் கலைகளிலும் இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கினர். உலக நாடுகள் வியந்து போற்றும் அளவில் சிறப்புப்பெற்ற கிரேக்க நாட்டின் வரலாறு, இன்று கல்லூரிகளில் வரலாறு கற்கும் மாணவர்க்குச் சிறப்புப் பாடமாக வைக்கப்படுகின்றது.

## நாட்டுப் பாடல்கள்

தலையில் புல்கட்டுகளைச் சுமந்துகொண்டு அசைந்தாடிச் செல்லும் மனிதன் நாட்டுப் பாடல்களைப் பாடிச் செல்வான்; மகளிர் பாடிச் செல்வர். ஏற்றம் இறைப்பவர், கனத்த சுமை சுமந்து செல்பவர் முதலானேரும் நாட்டுப் பாடல்களைப் பாடுவர். அப்பாடல்கள் செவிக்கு இனிமையையும், சிந்தைக்கு இனிய விருந்தையும் தரும் சிறப்புடையன. அவை

பல வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் பின்னணியா கக்கொண்டிருக்கும்.

நெடுங்காலமாக நிலவி வந்த நாட்டுப் பாடல் களின் தொகுப்பு நூல் என்று வடமொழியில் எழுந்த இராமாயணத்தைக் கூறலாம் என்று பேராசிரியர் பி. டி. சீநிவாச ஐயங்கார் அவர்கள் கூறுகின்றார்கள். இங்ஙனம் நாட்டுப்பாடல்களின் துணையைக்கொண்டு பழைய சீமைகளின் வரலாறுகளும் எழுதப்படு கின்றன. சில நாட்டுப் பாடல்களைக்கொண்டு பல பகுதிகளுக்கு வெற்றிச் சிறப்புப் பேசப்படுகின்றது. மொத்தத்தில் நாட்டுப் பாடல்கள் காவியங்கள் புனையவும் வரலாறுகள் எழுதவும் துணையாய் அமைந்தன, இன்றும் அமைகின்றன என்னலாம்.

இலியட், ஒடிஸ்ஸே[1] என்னும் இரண்டு காவியங் களின் துணையைக்கொண்டு கிரேக்க நாட்டைப்பற் றிய வரலாற்றைக் கூறலாம். இவ்விரண்டு காவியங் களும் ஹோமர்[2] என்பவரால் எழுதப்பட்டன. ஆனால் ஆராய்ச்சிவல்ல அறிஞர்கள் இவ்விரண்டு காவியங்களும் ஹோமர் என்பவரது கற்பனையி லிருந்தே எழுதப்பட்டவை அல்லவென்றும், அவ்வக் காலத்தில் வழங்கிய நாட்டுப் பாடல்களை யாரோ ஒரு கவிஞர் தொகுத்துத் தந்திருக்கலாம் என்றும், அவர் பெயர் ஹோமராக இருந்திருக்கலாம் என்றும் கூறுவர். எனவே, காலப் போக்கில், நெடுங்கால மாகப் பொழுதுபோக்குப் பாடல்களாக, நாட்டுப் பாடல்களாக நிலவி வந்த எண்ணற்ற பாடல்கள்

1. Odyssey 2. Homer

சிறந்த காவியங்களாக மாறிவிட்டன என்னல் மிகை யாகாது.

## ஹோமரின் காவியங்கள்

இலியட், ஒடிஸ்ஸே என்னும் இருபெருங் காவி யங்களை எழுதிய ஹோமர் கிரேக்க நாட்டுக்குக் கிழக் குப் பக்கத்தில் உள்ள ஏஜியன்[1] கடலை அடுத்துள்ள கியோஸ்[2] என்னும் தீவில் கி. மு. ஒன்பதாம் நூற் ருண்டில் பிறந்தார். அவர் பிறவிக் குருடர். ஆனல் இசைக்கருவிகளை முழக்கியும், இசைபாடியும் மக்களை மகிழ்விக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது.

கி. மு. பன்னிரண்டாம் நூற்ருண்டில் நடை பெற்றனவாகக் கூறப்படும் செய்திகளே இலியட்டி லும் ஒடிஸ்ஸேயிலும் இடம் பெற்றுள்ளன. இவ் விரு காவியங்களும் எந்த முறையில் இயங்குகின்றன என்பதைக் காண்போம்.

ஸ்பார்ட்டா[3]வின் அரசனை மீனலேயஸ்[4] என் பவன் ஹெலன்[5] என்னும் அரசிளங்குமரியை மணம் செய்துகொண்டான். அப்போது டிராய் நகர மன னன் மகனை பாரிஸ்[6] என்பவன் ஸபார்ட்டாவுக்கு வந்து, சிறிது காலம் தங்கியிருந்தான். அங்கிருந்து செல்லுகையில் அவன் ஹெலனைத் கடத்திச் சென்று விட்டான். இதனல் கிரேக்க நாட்டுக்கும் டிராய்க் குப் போர் தொடங்கியது. ஸ்பார்ட்டாவின் மன்ன னுடைய இளவல் அகமீம்னன்[7] என்பவன் தலைமை தாங்கிப் படைகளை நடத்தினன். போர் ஒன்பதாண்டு

1. Agean Sea 2. Chios 3. Sparta 4. Menelaus
5. Helen 6. Paris 7. Agamennon

கள் நடைபெற்றது. ஆயினும் பயனில்லை. அதனல் கிரேக்கர்கள் தந்திரம் ஒன்றை மேற்கொள்ளலாயினர். மரக்குதிரை ஒன்று செய்து ஆற்றல் மிக்க கிரேக்க வீரர்கள் பலர் அதில் மறைந்துகொண்டனர். மரக் குதிரையின் உண்மையை உணர முடியாத டிரோஜன்கள் அதனைத் தங்கள் பாசறைக்கு இழுத்துச் சென்றனர். இந்த வேளையில் மரக்குதிரையில் மறைந்திருந்த வீரர்கள் வெளிப்பட்டனர்; பகைவர்களையும் நாட்டையும் அழித்தனர்; மன்னனைக் கொன்றனர். கிரேக்கர்களைச் சேர்ந்த அகில்லெஸ் என்பவன் இப் போரில் பேராற்றலுடன் போரிட்டதாக வரலாறு கூறுகின்றது. இப்போரின் ஒரு பகுதியைத் துணையாகக்கொண்டு இலியட் காவியம் இயங்குகின்றது.

இப்போரில் கலந்துகொண்ட கிரேக்க மன்னர்களுள் ஒடிஸ்ஸே என்பவனும் ஒருவன். அவன் போர் முடிந்த பின்பு, தன்னுடைய ஊரான இத்தாக்கா[1]வுக்குத் திரும்பினன். வழியில் அவன் அடைந்த துன்பமும் துயரமும் ஒடிஸ்ஸே காவியத்தில் சுவையாகக் கூறப்படுகின்றன. ஒவ்வொரு காவியமும் இருபத்து நான்கு பகுதிகளையுடையது.

## புதைபொருட் சிறப்பு

மண்ணில் புதையுண்டிருக்கும் எண்ணற்ற பகுதிகளைப் புதைபொருளாராய்ச்சிக் கழகத்தார் அகழ்ந்து எடுத்துப் பழம் பெருமையை நிறுவி வருகின்றனர். காலப்போக்கின் காரணமாகப் பல பகுதி

---

1. Ithaca

கள் மண்ணுள் புதையுண்டு போகின்றன. காஞ்சிமா நகரில் பல்லவர் அரண்மனையும் அவர்கள் சிறப்பை நிலைநிறுத்தவல்ல பல சான்றுகளும் மணல்மேடிட்டுக்கிடக்கின்றன. அப்பகுதி 'பாலிமேடு' எனப்பட்டது.[1] சிந்து வெளியில் புதை பொருளாராய்ச்சி நடைபெற்றது. அதன் காரணமாக மொஹெஞ்சொதாரோ, ஹாரப்பா என்னும் இடங்களிற் புதையுண்டு கிடந்த பண்டை இந்தியர் நாகரிகச் சிறப்பை நாம் உணரலாம்.[2]

கிரேக்கப் பெருங்காவியமான இலியட்டில் கூறப்பட்டிருக்கும் பல நிகழ்ச்சிகள் **டிராய்** என்னும் நகரில் நடைபெற்றனவாகும். டிராய் நகரில் புதைபொருளாராய்ச்சி நடத்தியவர்கள் அங்குக் கிடைத்த சின்னங்களை ஆராய்ந்து, டிராய் நகரம் ஒன்பது முறைகள் தோன்றித் தோன்றி அழிந்திருக்கவேண்டும் என்னும் கருத்தை வெளியிட்டனர். ஒரு நகரத்தை அகழ்ந்தெடுக்கையில் பிறிதொரு நகரம் காணப்பட்டதாம். இங்ஙனம் ஒன்றின்மேல் ஒன்றாக ஒன்பது நகரங்கள் புதையுண்டிருந்தனவாம். டிராய் என்னும் பெயரில் அமைந்த ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு காலத்தில் தோன்றிச் சிறப்புற்றிருக்கவேண்டும் என்றும், நாளடைவில் அந்நகரம் ஏதோ காரணங்களால் சிறப்பிழந்து அழிந்திருக்கவேண்டும் என்றும் கருதலாம். புதையுண்ட பகுதியிலிருந்து கிடைக்கும் சின்னங்கள்

---

1. டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் 'பல்லவர் வரலாறு' என்னும் நூலுள் காண்க.

2. டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் 'சிந்து வெளி நாகரிகம்' என்னும் நூலுள் காண்க.

கிரேக்கர்களுடைய நாகரிகத்தைக் குறிக்கின்றன. இந்த டிராய் நகரம் இப்பொழுது துருக்கியின் வட மேற்கே டார்டனல்ஸ்[1] நீர்முகத்திற்குத் தெற்காக அழிந்த நிலையில் சிறு கிராமமாக உள்ளது. இதற்கு இலியம்[2] என்னும் பெயரும் இருந்தது.

## கிரேக்க நாட்டுப் பெரியார்கள்

'கிரேக்க நாட்டுப் பெரியார்கள்' என்னும் வரிசையில் நிறுத்தி ஒவ்வொருவராக நாம் காணவேண்டுமாயின், பலரைக் காணலாம். ஆனால் இங்கு அவருள் சிறந்தோரை மட்டும் காண்போம்.

அனெக்ஸாகோரஸ் என்பவர் சின்ன ஆசியாவைச் சேர்ந்த கிளாஸோமெனீ[3] என்னும் ஊரில் பிறந்தவர். இவர் ஏதென்ஸுக்குச் சென்று வான சாத்திரக்கலையில் பயிற்சி பெற்றார். இவருடைய வாழ்நாள் முழுமையும் இந்தத் துறையிலேயே செலவழிந்தது. சூரியன், சந்திரன், விண்மீன்கள் என்பவை தெய்வங்கள் அல்லவென்றும், அவை இயற்கையின் படைப்புக்களே என்றும் இவர் கூறினார். இயற்கையைப்பற்றி இவர் எழுதிய நூல் இவர் காலத்தவராலேயே நன்கு போற்றப்பட்டது. பெரிக்ளீஸ், யூரிப்பிடீஸ், **சாக்ரடீஸ்** என்னும் மூவரும் இவருடைய மாணவராவர். இந்நூலின் தலைவருள் சாக்ரடீஸ் ஒருவராதலின், அவருடைய ஆசிரியரைப்பற்றி நன்கு அறிதல் வேண்டுமன்றோ? இவர் தம்முடைய எழுபத்து மூன்றாவது வயதில் காலமானார்.

1. Dardanalles 2. Iliam 3. Clazomenae

எம்பிடோக்கிளீஸ்[1] சிசிலி என்னும் தீவைச் சேர்ந்தவர்; செல்வம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். இவர் தத்துவ சாத்திரக் கலையில் வல்லவர்; மறுபிறவியில் நம்பிக்கை கொண்டவர். தம்மைப்பற்றிக் கூறிக் கொள்ளும் போதெல்லாம் தம்முடைய முன் பிறவியைக் குறிப்பிடும்போதெல்லாம் தாம் சிறுவன், சிறுமி, செடி, பறவை, மீன் முதலிய பிறவிகளாக இருந்தே மனிதப் பிறவி எடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவர் புலால் உண்ணலை அறவே ஒழித்தவர். இப்பெரியார் புலால் உண்பவர்களை நோக்கிச் சுவையானதொரு வினவை விடுக்கின்றார். அது யாது? "இப்போது நாம் உணவாகக் கொள்ளும் ஆட்டு இறைச்சியும், மாட்டு இறைச்சியும், இவை போன்ற உயிர்களும் ஏன் சென்ற பிறவியில் மனிதராய் இருந்திருத்தல் கூடாது?" மக்கள் இவரைக் கடவுளாகக் கொண்டாடினர்.

ஹெப்போகிராடீஸ் என்பவர் ஏஜியன் கடலின் தென்கிழக்கில் உள்ள **கோஸ்**[2] என்னும் தீவில் பிறந்தவர். இவர் மருத்துவக் கலையில் வல்லவர். நோய்கள் எல்லாம் தெய்வச் செயலால் உண்டாவன என்னும் மூட நம்பிக்கையை அகற்றிய பெருமை இவருக்கு உண்டு. வீடு வீடாக நகரம் நகரமாகச்சென்று மருத்துவம் செய்து வந்த நிலையை மாற்றி, ஓரிடத்திலிருந்துகொண்டே பலருக்குத் தொண்டு செய்யும் முறையை நடை முறைக்குக் கொண்டு வந்தவர் இவரே.

1. Emdpeocles 2. Cos

**பிடியஸ்** என்பவரைச் சிற்பக்கலையின் தந்தை என்று கூறலாம். ஒலிம்பியாவில் இன்னும் உள்ள ஜியஸ் தெய்வத்தை அமைத்த பெருமை இவரையே சாரும். ஏதென்ஸ் நகரைக் கலைச்சோலையாக ஆக்கிய வரும் இவரேயாவர். ஒலிம்பியாவில் உள்ள ஜியஸ் தெய்வத்தின் சிலை உலக அதிசயங்கள் ஏழனுள் ஒன்ருகும்.

**டேமன்** என்பவர் இசைப்புலவர். இவரே பெரிக்ளீஸுக்கு இசை பயிற்றுவித்த இசையாசிரியர். **டெமாக்ரிட்டீஸ்**[1] என்பவர் உலக நாடுகளைச் சுற்றிப் பார்த்துப் பல்வேறுபட்ட மக்களுடைய வாழ்வு முறைகளை ஆராய்ந்தார்.

சாக்ரடீஸ், பிளேட்டோ, என்னும் இருவரைப் பற்றி இந்நூலில் நாம் விரிவாகக் காணலாம். இவர்கள் இருவரும் எல்லாத் துறைகளிலும் வல்ல வர்கள்; மக்கள் நலனே தம் நலன் எனக் கருதித் தொண்டாற்றினர்.

---

1. Democritus

# 3 நாகரிகமும் நல்வாழ்வும்

கிரேக்கர்கள் கலையுணர்ச்சி மிக்கவர்களாக விளங்கினர். அவர்கள் வாழ்க்கை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் மூன்று நற்பண்புகளின் சூழலில் வளர்ந்தது. கவிதைக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, பேச்சுக்கலை முதலிய நுண்கலைகளில் கிரேக்கர்கள் சிறந்து விளங்கினர். கவிதைக் கலையைப் பற்றி ஆராய்ந்து அரிஸ்டாட்டில் என்னும் பெரியார் சிறந்த பல நூல்களை எழுதியுள்ளார். எதையும் ஆராய்ந்து கொள்ளும் திறனாய்வு முறை கிரேக்கர்களில் கற்றவர்களிடம் இருந்தது. இப்பகுதியில் உலக நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கிய கிரேக்க மக்களின் நல்வாழ்வுக்குத் துணையாயமைந்த நற்பண்புகள் சிலவற்றைக் காண்போம் :

## கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு

கி. மு. ஐந்தாவது நூற்றாண்டு கிரேக்க நாட்டு வரலாற்றில் சிறப்புடைய நூற்றாண்டாகும். கிரேக்க நாடு உலக நாடுகளை விடச் சிறந்து விளங்கியதும், தன் வாழ்வில் வீழ்ச்சி காணத் தொடங்கியதும் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயேயாகும். இந்த நூற்றாண்டில்தான் அறிவாற்றல் மிக்க அறிஞர் பலர் தோன்றித் தங்கள் கடமைகளை யாற்றினர்; அவர்களுடைய

நல்ல தொண்டுகளை உணரமுடியாத மக்கள் அவர்களை நாடு கடத்தியும், துன்புறுத்தியும் மன நிறைவு பெற்றனர். கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் கிரேக்க நாடு இருந்த வரலாற்றைத்தான் வரலாற்றுசிரியர்கள் சுவைபடச் சித்தரித்துள்ளனர். எனவே, நாம் அந்த நூற்றுண்டில் வாழ்ந்த மக்களது கலையுணர்ச்சி முதலிய நற்பண்புகளைக் காண்போம்.

## மொழிப்பற்று

மனிதனுக்கு இன்றியமையாது இருக்கவேண்டும் பற்றுக்களில் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் குறிப்பிடத் தகுந்தவையாகும். மொழிதான் மக்கள் வாழ்வுக்குச் சிறப்பை அளிக்கின்றது. மொழிப்பற்று இல்லாத மக்கள் சிறப்புடையவர்களாகப் பிறரால் கருதப்பட மாட்டார்கள். குழந்தை தான் பிறந்தது முதல் இறக்கும் வரை ஒரே மொழியைத்தான் பேசுகின்றது. அதுவே அதனுடைய தாய் மொழியாகும். ஆனல் அக்குழந்தை வளர்ந்தபின் உலக மொழிகளைக் கற்கும் வாய்ப்பு நேரும்; உலக மொழிகளைக் கற்கும்; ஆனல் தாய் மொழிப்பற்று மறைவதில்லை; எவ்வளவுதான் பிற மொழிகளின் ஆதிக்கத்தில் ஆழ்ந்துவிட்டாலும் சொந்த மொழியை மறப்பதில்லை. இதுவே தாய் மொழிக்குள்ள தனிச் சிறப்பாகும்.

கிரேக்கர்கள் தாய் மொழியைப் போற்றி வளர்ப்பதில் கருத்தைச் செலுத்தினர்; ஒரே மொழியை— கிரேக்க மொழியையே பேசினர். தென்னிந்திய மக்களால் பொதுவாகப் பேசப்படும் தமிழ் மாவட்டங்கள்

தோறும் பேசும் முறையில் மாறுபட்டு இருப்பது போலக் கிரேக்கர்கள் பேசிய கிரேக்க மொழியும் சில பகுதிகளில் பேசும் முறையில் மாறுபட்டு இருந்தது. 'உணவுக்கு உப்புப் போடு' என்று ஒரு மாவட்டத்தினர் சொல்வர். இதே கருத்தை மற்ரெரு மாவட்டத்தார் 'உணவுக்குச் சர்க்கரை போடு' என்று கூறுவதன் மூலம் விளக்குவார். 'விளக்கை அணைத்து விடு' என்று சிலர் கூறுவர். 'விளக்கைக் கெடுத்துவிடு' என்று கூறி அதே கருத்தைச் சிலர் தெளிவுபடுத்துவர். 'உனக்குக் குழந்தை இருக்கின்றதா?' என்று கேட்டால் 'இல்லை' என்று சிலர் கூறுவர். இல்லை என்று கூறுவது தவறு என்று எண்ணி 'இனித்தான்' என்றும் சிலர் கூறுவர். இவையெல்லாம் மொழி மக்கள் மனநிலைக்கேற்பப் பேசும்போது மாறுபடுகின்றது என்பதை விளக்கவல்ல சான்றுகளாகும்.

## சமுதாய வாழ்க்கை

கிரேக்கர்கள் பயிர்த்தொழிலையும் கால் நடைகளை வளர்க்கும் தொழிலையுமே வாழ்க்கைத் தொழில்களாகக் கொண்டிருந்தனர்; ஒவ்வொருவரிடமும் இருந்த ஆடுமாடுகளைகொண்டே அவர்களைச் செல்வர்களாக மதித்தனர்.

கிரேக்கர்கள் குடும்ப வாழ்வில் பெருங்கவனத்துடன் இருந்தனர். காதல் மணங்கள் நடைபெற்றன. கணவன் மனைவியாய் வாழும் வாழ்வு உயர்ந்த வாழ்வாகக் கருதப்பட்டது. அவர்கள், தங்கள் வாழ்வில் சிறு பூசலும் பிணக்கும் இல்லாதவாறு நடந்து கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

'ஒருவர் பொறை-இருவர் நட்பு' என்பதை நன் குணர்ந்த நிலையில் கிரேக்கர்களது இல்வாழ்க்கை நடைபெற்றது. 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்பதை அவர்கள் நன்குணர்ந்து நடந்து கொண் டார்கள்.

பெண்கள் ஆண்களுடன் ஒத்த நிலையில் சிறப்புப் பெற்றனர். ஒத்த நிலையில் நடத்தப்படும்பொழுது அவர்களுடைய தனிமைக்கும் பெண்மைக்கும் இழுக்கு வராமல் காக்கப்பட்டது. உபசரிக்கும் கலை யில் பெண்கள் சிறந்திருந்தனர். பகைவராயிருப்பி னும் தங்கள் இல்லம் நாடிவந்தவரை வரவேற்றுப் போற்றவேண்டும் என்றும், வயது மிகுந்தவர்களை அன்புடன் உபசரித்துக் காக்கவேண்டும் என்னும் ஆர்வமும் அவர்களுக்கு இருந்தது.

திருமணங்கள் பலவிதமான சடங்குகளுடன் நடைபெற்றன. உறவு முறையுள்ளேயே மணங்கள் நடைபெற்றன. மணமகன் தந்தை மனைவிக்குப் பின் னர்த் தன் மகளுக்குப் பல பொருள்களை அன்பளிப் பாகத் தரும் வழக்கம் இருந்தது. மணமகன் எண் ணிறந்த ஆடுகளையும் மாடுகளையும் பெண்ணுக்குப் பரிசுப் பொருள்களாகக் கொடுப்பான். இப்பரிசுப் பொருள்களின் மிகுதி பெண்ணினுடைய அழகையும் அவளுடைய தந்தையின் தகுதியையும் பொறுத்தது. மணவினைக்குப் பின்னர்ப் பலதுறைக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

கிரேக்க நாட்டுச் சிறுவரும் சிறுமியரும் இளமை யிலேயே நாட்டியமாட நன்கு கற்றிருந்தனர். அவர்

கள் பலவகையான விளையாட்டுக்களிலும் வல்லவராக விளங்கினர்; பலதுறைத் தொழில்களையும் கற்றனர், அதனால் அவர்கள் பிற்காலத்தில் பலதுறைத்தொழில் களை மேற்கொண்டனர்.

கிரேக்கர் வெண்கலத்தையே மிகுதியாகப் பயன் படுத்தினர். நிலத்தின் கீழிருந்த பொன்னையும் வெள்ளியையும் அவர்கள் அகழ்ந்தெடுக்க முடியாமல் தேவைப்பட்டபொழுது அவற்றை வெளிநாடுகளி லிருந்து வரவழைத்துக்கொண்டனர். (அவர்களுடைய போர்க்கருவிகளும் வெண்கலத்தினாலேயே செய்யப் பட்டன.) அவர்கள் செய்திகளைப் பரப்பிய முறை சுவை பயக்கத் தக்கதாகும். அண்மையில் உள்ளவர் களுக்குச் செய்திகள் தெரிவிக்க வேண்டுமாயின், ஆள் மூலமாகச் சொல்லி யனுப்புவர்; சேய்மையில் உள்ள வர்களுக்குச் செய்திகள் தெரிவிக்க வேண்டுமாயின், மலையுச்சியில் நின்றுகொண்டு, தீப்பந்தத்தை அசைத் துக் காட்டித் தெரிவிப்பர். சேய்மையில் உள்ளவர் கள் அந்த அசைவுகளின் பொருள்களை உணர்ந்தவரா யிருப்பர்.

கடலில் மிதந்துவரும் கப்பல் துறைமுகத்துக்குச் சிறிது தொலைவில் தவிர்க்க முடியாத காரணங்களால் நின்று விடுகின்றது என்று கொள்வோம். அப்போது துறைமுகத்தில் இருக்கும் கப்பல் தலைவன், நீரில் நின்றுகொணடிருக்கும் கப்பல் தலைவனோடு எவ்வாறு செய்திகளைப் பரிமாற்றிக் கொள்ள முடியும்? அவன் வண்ணத் துணியால் செய்யப்பட்ட இரண்டு துணி களை ஏந்திக்கொண்டு, கப்பலின் மேல்தளத்துக்குச்

சென்று அசைத்துக் காட்டுவான். அவனுடைய குறிப்புக்களை உணர்ந்த பின் எதிரில் உள்ள கப்பல் தலைவனும் தன் கருத்தைத் தெரிவிப்பான். இந்த முறை நம் பள்ளிகளிலுள்ள சாரணர் இயக்க மாணவர்க்குக் கற்பிக்கப்படுகின்றது.

பழைய கிரேக்கர் சமுதாயத்தில் ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு மிக்கிருந்தது. பணக்காரரைச் சுற்றி அலையும் கவிவாணர்களுக்கு மிகுந்த சிறப்பிருந்தது. கிரேக்கர்களிடையே அடிமை வழக்கம் இருந்தது. ஆனால் அடிமைகள் இழிவாக நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தகும்.

## தீ வணக்கம்

தீயை வணங்கும் வழக்கம் மிகப் பழமையானது என்பது அறிஞர் ஆராய்ச்சி முடிபாகும். கிரேக்கர்களுடைய வீடுகளில் அடுக்களையின் பக்கத்தில் எப்போதும் தீ இருந்துகொண்டே இருக்கும். இத்தீயை அணைத்துவிட்டால் தீய விளைவுகள் உண்டாகும் என்று அவர்கள் நம்பினர். நாளும் அதற்கு வழிபாடு நடத்தினர்; தங்கள் உணவுப் பொருள்களை அத்தீ முன்னர் இட்டு வழிபட்ட பின்னரே உண்ணத் தொடங்கினர். மது அருந்தும்பொழுது சில துளிகளை அத்தீயிலிட்டனர். இவ்வழக்கம் இன்னும் கிரேக்க நாட்டில் நடைமுறையில் இருந்து வருவதாகத் தெரிகிறது.

ஒவ்வோர் இல்லமும் தீ வழிபாட்டுக்கு உரியதாக இருந்தது போலவே ஒவ்வொரு நகரமும் தீ வழிபாட்

டுக்கு உரியதாக இருந்தது. நகரப் பொதுமண்டபத்தில் வைத்து வளர்க்கப்பட்ட தீயே மக்களால் வழிபடப்பட்டது. பொது நிகழ்ச்சிகளின்போது நகரத்தார் அனைவரும் ஒன்று கூடுவர் அல்லவா? அப்போது அவர்கள் இத்தீயை வணங்கியே தங்கள் செயல்களைத் தொடங்குவர். இங்ஙனம் நகரப் பொது மன்றங்களில் இருக்கும் தீயை வணங்குவதன் மூலம் தங்கள் முன்னோர்களை வணங்குவதாகவும், பின்னவர்களை நல்ல நெறியில் வாழச் செய்ய வேண்டுவதாகவும் அவர்கள் எண்ணினர்.

கிரேக்கர்களில் சிலர் பலகாரணங்களால் சொந்த நாட்டை விட்டுப் பிழைப்புக்காகப் பிறநாடுகட்குச் செல்வர். அப்போதெல்லாம் அவர்கள் தங்கள் சொந்த நாட்டுப் பொதுமன்றத்திலிருந்து சிறிது தீயை எடுத்துச் செல்வர். குடியேறுமிடத்தில் மண்ணைத் தூவுவர்; தீயை இல்லத்தில் வைப்பதோடு அப்பகுதியைச் சேர்ந்த பொதுமன்றத் தீயிலும் ஒரு பகுதியைச் சேர்த்து அப்பகுதிக்குத் தம்மை உரியவர் ஆக்கிக் கொள்வர்.

இத்தகைய வணக்க முறைகள் எப்படி வந்தன என்பதை இங்குக் காணுதல் தகும் :

பழைய காலத்தில் மக்கள் மொழியை ஓவிய முறையாக எழுதினர். கட்புலனாகும் பருப்பொருள்களை விளக்க அவ்வப்பொருள்களின் வடிவங்கள் எழுதப்பட்டன, வீரம், சினம், தந்திரம், அறிவு முதலியன போன்ற மனத்தோற்றமளவில் உள்ள

பொருள்களை விளக்க அவ்வக்குணங்கள் அமைந்த உயிர்களின் வடிவங்கள் எழுதப்பட்டன.

விடாமுயற்சி என்னும் இயல்பை விளக்கத் தேனீயின் உருவமும், வெற்றியைக் குறிக்கக் கருடன் உருவமும், விவேகமின்மைக்கு ஈயின் உருவமும் எழுதிக் காட்டப்பட்டன. பண்டை மக்கள் தம்மிடமுள்ள முக்கிய தன்மை ஒன்றை விளக்க ஒவ்வோர் ஓவியத்தை அடையாளமாக வழங்கி யிருக்கலாம். அவையே பிற்காலத்தில் வழிபாட்டுக்கு உரியனவாக ஆயின என்று கூறலாம். மோசேவால் செய்யப்பட்ட வெண்கலப் பாம்பு யோசோவாக் கடவுளின் சின்னமாக வழிபடப்பட்டது.[1]

## சாந்தி வழிபாடுகள்

முறையாக நடைபெற்றுவரும் செயல்கள் தடைப்பட்டுப் போனால் அது தெய்வக் கோபத்தால் நேர்ந்துவிட்டது என்று கிரேக்கர்கள் நம்பினர். இந்த நம்பிக்கை உலக மக்களிடையேயும் பரவலாக இருந்தது. திருவிளையாடற் புராணத்தில் இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் உள்ளன. சான்றாக நிகழ்ச்சி யொன்றினைக் காண்போம்.

புலவர் ஒருவரைப் பாண்டிய மன்னன் அவமதித்துப் பேசிவிட்டான். அதனால் புலவர் வெகுண்டு இறைவனிடம்—சோமசுந்தரப் பெருமானிடம் முறை

---

[1]Mosses himself is said to have madla a brazen serpent which down to Hazakil's time continued to be worshipped at Jerusalame as an image of Jehovah-Iserad. —E. Britanica.

யிட்டுவிட்டுச் சென்றுவிட்டார். பைந்தமிழ்ப் புலவ ரைப் பிரிந்து இருக்க முடியாத இறைவன் அவரைத் தொடர்ந்து புறப்பட்டுவிட்டார். மறுநாள் காலையில் வழக்கம்போல் வழிபாடு செய்ய வந்த மன்னன், ஆலயத்தில் இறைவன் திருவுருவம் இல்லாமையைக் கண்டு வியந்து, திகைத்துப் புலம்பினுன். அப்போது சிலர் வந்து இறைவன் திருவுருவை வையையாற்றின் கரையில் கண்டதாகக் கூறினர். உடனே மன்னன் விரைந்து சென்று இறைவனை வழிபட்டுத் தன் பிழை யைப் பொறுக்குமாறு வேண்டி மன்ருடினுன்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளும், நம்பிக்கையால் விளைந்த செயல்களும் பலவாக கிரேக்க நூல்களில் கூறப்படுகின்றன. பிணிகளிலிருந்தும், அச்சங்களி லிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ள மந்திரித்துத் தரப்பட்ட தாயத்துக்களைக் கட்டிக்கொள்ளும் வழக்கமும் அவர்களிடையே இருந்தது. இந்த நம்பிக்கை பாமர மக்களிடம் மட்டுமே யல்லாமல் படித்தவர்களிடையேயும் இருந்துவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஏதென்ஸ் வரலாற்றில் சிறப் பிடம் பெறுபவனுன பெரிக்ளீஸ்[1] என்பவன் இறப் புடன் போராடிக் கொண்டிருந்தபோது அவனுக்கு மந்திரித்த தாயத்தைக் கட்டிப் பெரியவர்கள் மன அமைதி கொண்டார்கள் என்று கூறப்படுகின்றது.

## டெல்பி வழிபாடு

டெல்பி என்பது ஓர் இடமாகும். அங்கு அப்போலோ தெய்வத்திற்குப் பெரியதொரு கோவில்

1. Pericles

உள்ளது. அங்கும் நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை விழா நடைபெறும். விழாக்களின்போது மக்கள் பல விதமான காணிக்கைகளைச் செலுத்துவர். செல்வர்கள் சிலர் அப்போலோ தெய்வத்திற்கு நிலங்களை எழுதி வைத்தனர். இங்ஙனம் அப்போலோ தெய்வத்திற்குச் சேரும் சொத்துக்களை ஆட்சி செய்யக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. கிரேக்கர்கள் பன்னிரண்டு பிரிவினராகப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டிரண்டு பேர் அக்குழுவிற்கு அனுப்பப்பட்டனர். இவ்வமைப்பு ஆண்டுக்கு இருமுறை கூடும். ஒருமுறை டெல்பியிலும், ஒருமுறை தெர்மாப்பிலேயும் கூடும். சொத்து ஆட்சிபற்றிக் குழு உறுப்பினர்களிடையே குழப்பம் கூடாது என்று எண்ணிய மக்கள், தங்கள் நல்லெண்ணத்தை மீறி நடைபெறும் சண்டை சச்சரவுகளைத் 'தூய குழப்பங்கள்' அல்லது 'தூய போர்கள்'[2] என்று அழைத்து அமைதி பெற்றனர்.

## பல தெய்வ வழிபாடு

கிரேக்கர்கள் இறைவழிபாட்டில் மிகுந்த நம்பிக்கைக் கொண்டவர்கள். இறையன்பும், இறைவன் நம்பிக்கையும் இல்லாதவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியாது என்று அவர்கள் எண்ணினர். இறையன்பும் இறைவன் நம்பிக்கையும் இல்லாத மக்களை அவர்கள் தங்களுள் ஒருவராகக் கருதவில்லை. இத்தகைய அழுத்தமான கடவுள் நம்பிக்கை பல தெய்வங்களை உண்டாக்கிக் கொள்ளும் நிலையை

1. Thermopylae 2. Sacred Wars

அவர்களிடையே உண்டாக்கிவிட்டது. அவர்கள் தங்களுடைய பல தெய்வங்கட்குத் தலைமைக் கடவுளாக **ஜியஸ்** என்னும் கடவுளை அமைத்துக்கொண்டனர்; ஊர்த்தெய்வம், குலதெய்வம், குடும்பத் தெய்வம் எனத் தாங்கள் வழிபட்ட கடவுளர்களை மூன்று பிரிவுகளாக்கினர். ஏதென்ஸைச் சேர்ந்த அத்தினியர்கள் **அத்தீனு** என்னும் கடவுளையும் ஸாமோஸைச் சேர்ந்த மக்கள் **ஹீராவையும்**, எபீஸஸைச்சேர்ந்த மக்கள் **ஆர்ட்டிமிஸ்** என்னும் கடவுளையும் வழிபாட்டுக்கு உரியனவாகக் கொண்டனர்.

மனிதனுடைய செயற்கருஞ் செயல்கள் போற்றப் பட்டன. அச்செயல்கள் பிறர் பின்பற்றி வாழ்வதற்கு உரியனவாகக் கொள்ளப்பட்டன. நாளடைவில் அச் செயல்களும், செயல்களைச் செய்தவர்களும் வழிபாட்டுக்கு உரியவர்களாகிவிட்டனர். காலப்போக்கில் அவர்கள் சிறுதெய்வங்களாகவும் கடவுளாகவும் கொள்ளப்பட்டனர். பேய், பிசாசுகள், மோகினிகள், மந்திரப்பூ, குறிசொல்லுதல் முதலிய எல்லாவற்றிலும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒவ்வொரு சிறு தெய்வத்துக்கும் குறிப்பிட்ட காலங்களில் சிறப்பாக வழிபாடு செய்யப்பட்டது. அப்போது இசைக் கருவிகள் முழங்கும்; நாடகங்கள் நடைபெறும்; கடவுள் அருட்பிரசாதம் என்று உணவு வழங்கப் படும்.

## விளையாட்டு

கிரேக்கர் தம்முள் கருத்து வேறுபாடுகொண்டிருப்பினும், நாடெல்லாம் கூடிக் கொண்டாடும்

பொதுவிழாவில் ஒன்றுபட்டனர். எவ்வித வேறு பாடும் இல்லாமல் அவர்களை ஒன்றுபடுத்திய பெரு விழாக்கள் இரண்டாகும். அவற்றுள் ஒன்று **ஒலிம்பிய விளையாட்டு**,[1] மற்றொன்று **டெல்பி வழிபாடு**.

இவற்றுள் டெல்பி வழிபாட்டைப்பற்றி அறிந்த நாம் இனி ஒலிம்பிய விளையாட்டு பற்றி அறிவோம். ஒலிம்பியா என்பது ஓரிடத்தின் பெயராகும். பொலப் பனேசியாவின் வடமேற்கில் ஆல்பேயஸ் என்னும் ஆறு பாய்கின்றது. அந்த ஆற்றின் வடகரையில் குரோனஸ்[2] என்னும் குன்று ஒன்று உள்ளது. அக் குன்றின் அடிவாரத்தில் உள்ள இடத்திற்கு ஒலிம் பியா என்பது பெயர். அங்கு ஒலிம்பியம்,[3] இரேயம்,[4] பிரெட்டேனீயம்[5] என்னும் பெயருடைய மூன்று கட்டிடங்கள் உள்ளன. இவற்றுள் ஒலிம்பியம் என்பது ஜியஸ் தெய்வத்தின் கோவிலாகும். ஜியஸ் தெய்வத்தின் மனைவியாகிய ஹீராவின் கோவிலே இரேயமாகும். ஒலிம்பிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோர்கள் விருந்துண்ணும் பெருமண்டப மாக இருந்தது பிரெட்டேனீயம் என்பதாகும்.

ஒலிம்பிய விளையாட்டுக் கி.மு. 776-ஆம் ஆண்டு முதல் நான்காண்டுகட்கு ஒருமுறை நடைபெற்றது. இந்த நான்காண்டுக் காலத்தை ஒலிம்பியட்[6] என்று அழைப்பார்கள். இவ்விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளப் பல பகுதிகளிலிருந்தும் திரளாக மக்கள் வருவர். இப்போட்டியில் வெற்றி பெற்றவர் மிகவும் சிறப்பிக்கப் பெறுவர். அவரை அனுப்பிய

1. Olympia 2. Cronos 3. Olympieum 4. Heraeum 5. Prytaneum 6. Olympiad

நகரம், தன்னுடைய நகரத்தின் பொதுவிடத்தில அவருக்கு ஓர் உருவச்சிலையை அமைக்கும். மக்கள் வெற்றியடைந்தவர்க்கு விருந்து வைத்துச் சிறப்பிப்பதில் போட்டியிட்டுக்கொண்டு முன்னேறுவர்; கவிஞர் வாழ்த்துக் கூறுவர்; நாவலர் நல்லுரையாற்றுவர்; அறிஞர் ஆசி கூறுவர்.

ஒலிம்பியா விழாவில் விளையாட்டுப் போட்டிகள் மட்டும் நடைபெறுவதில்லை. கவிஞர்கள், நாடகாசிரியர்கள், சிறுகதை எழுத்தாளர்கள் முதலிய எல்லோரும் தங்களுடைய கவிதைகளையும், நாடகங்களையும், சிறு கதைகளையும் அரங்கேற்றம் செய்வர். இதுபற்றிய சுவையானதொரு செய்தியினை இங்கு அறிவோம். வரலாற்றின் தந்தை என்று போற்றப்படும் ஹெரோடோட்டஸ்[1] தாம் எழுதிய வரலாற்றை ஒலிம்பிய விழாவொன்றில் அரங்கேற்றினாராம். அப்போது துஸிடிடீஸ் என்பவர் அதனைக் கேட்டு அழுதாராம். அந்த அளவுக்கு அவ்வரலாறு உருக்கமுடையதாய் இருந்ததாம். துஸிடிடீஸ் என்பவர் சிறப்புமிக்க வரலாற்றாசிரியராக விளங்கியவராவார்.

## குறிகேட்டல்

குறிகேட்பதில் கிரேக்கர்களுக்கு மிக்க நம்பிக்கை இருந்தது; எந்த ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னும் அந்த செயலைத் தொடங்கலாமா என்றும் - தொடங்கிச் செய்தால் நல்ல பயன் விளையுமா என்றும் குறி கேட்பார்கள். கவலையால் துன்புறுபவர்

1. Herodotus

கள் தங்கள் கவலைகள் மறையும் நாள் எந்நாள் என்றும் எந்த முறைகளை மேற்கொண்டால் கவலையில்லாமல் வாழலாம் என்றும் குறிகேட்கும் வழக்கம் இருந்தது. குறி கூறுவோர் பெரிய கோவில்களில் இருந்தனர்.

போருக்குச் சென்ற கணவன் எப்போது திரும்பி வருவான் என்பதை அறியவும், மகளுக்குள்ள உடல் மெலிவுக்குக் காரணம் யாது என்பதை அறியவும் குறி கேட்கப்பட்டதாகக் தமிழிலக்கியங்கள் கூறுகின்றன. இங்ஙனம் குறி சொல்பவள், சங்க இலக்கியங்களிலே 'அகவல் மகள்' எனப்பட்டாள். பல தெய்வங்களை விளித்துத் தான் கூறவிருக்கும் செய்திகள் எல்லாம் உண்மையாக இருக்க அந்தத் தெய்வங்கள் துணையாக நிற்கவேண்டும் என்று வேண்டுவதால் அவள் 'அகவல் மகள்' எனப்பட்டாள். இவ்வாறு குறி கேட்கும் வழக்கம் உலகின் எல்லா நாடுகளிலும் இருந்தது என்பதும் இருந்து வருகிறது என்பதும் அவ்வந்நாட்டு வரலாற்றால் தெரிகின்றது.

கணிதமுறையில் சொல்லப்படும் சோதிடங்களில் கிரேக்கர்கள் ஆர்வம் காட்டினர். அவை தவறாமல் பலிப்பதாக அவர்கள் நம்பினர். அரசியற் செயல்களேயாயினும் குறிபார்க்கும் பழக்கம் இருந்தது. குறி கூறுவோன் கூற்றுக்கேற்பவே அரசாங்கமும் நடைபெற்றது. சுருங்கச் சொல்லின், சாதாரணக் குடிமகன் முதல் ஆளுவோர்வரை அனைவரும் சோதிடக் கலையின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தனர் என்னலாம்.

நாள் பார்த்து எதனையும் செய்வதில் கிரேக்கர்கள் கருத்தாக இருந்தனர். 'நாள் செய்வதை நல்லோர் செய்யார்' என்பதை அவர்கள் தங்கள் வாழ்வில் பொன்னேபோல் போற்றி வந்தனர். ஆனால் நாளும் கோளும் பார்ப்பதைவிட எதற்கும் அஞ்சாமல் தொடர்ந்து கடமைகளைச் செய்து கொண்டிருந்தால் தடை யேதும் இல்லாமல் குறையேதும் இல்லாமல் யாவும் நலமாக முடியும் என்றும் அறிஞர் சிலர் கருதினர்.

## பிற சடங்குகள்

கிரேக்கர்களிடையே நிலைபெற்ற பிற சடங்குகளுள் ஈமச்சடங்கைப்பற்றி அறிவோம்:

அவர்கள் உயிர்போன பிறகு உடலை நீராட்டுவர்; நல்ல துணிமணிகளால் அலங்கரிப்பர்; பின்னர் ஓபோல் என்று வழங்கப்படும் நாணயத்தைப் பிணத்தின் வாயில் வைப்பர்; இரண்டு நாட்கள் பிணத்தை மணப்பொருளிட்டு வைப்பர். அந்தக் காலத்தில் பிணத்தின் உற்றாரும் மற்றோரும் கண்டு செல்வர். எல்லோரும் கறுப்பு உடையை அணிவர். மூன்றும் நாளில் பிணம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். பெண்கள் தலைவிரிகோலமாகப் பிணத்தைத் தொடர்ந்து செல்வர்; உடலை எரித்த சாம்பலில் சிறிது எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு மூடிப் புதைப்பர்; அது புதைக்கப்பட்ட இடத்தின் மீது சிறிது மதுவை ஊற்றுவர்; பின்னர் மலர் மாலைகளை அணிவித்துத் தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொள்வர்.

## இசையில் ஈடுபாடு

இசை இன்று மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளதொரு நுண்கலையாகும். கவிதை நம்முடைய துயரைப்போக்கும். துன்பம் நேர்ந்தபோதெல்லாம் யாழெடுத்து இசைபாடித் துன்பத்தை மறக்கும் நிலையில் மக்கள் இருந்தனர்.

கடற்கரையில் கோவலன் தன்னை உடன்வருமாறு கூறாமல் சினந்து எழுந்து சென்றுவிட்டான் என்பதை உணர்ந்த மாதவி வருந்தினாள்; தன்னுடைய தோழியை அனுப்பி அவனை மீண்டும் தன்னை வந்தடையுமாறு செய்ய முயன்றாள். அம்முயற்சி பயன் தரவில்லை. அப்போது அவள் யாழ் எடுத்து நரம்புகளை மீட்டி இசை பாடினாள் என்று சிலப்பதிகார ஆசிரியர் கூறுகின்றார்.

கிரேக்கர்கள் இசைக்கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். இசைக் கலைதான் அவர்களுடைய கல்வி முறைக்கு வழி காட்டியாகவும், வழிபாட்டிற்குத் தெளிவுரையாகவும், கற்பனைக்கு ஊக்கக் கருவியாகவும் இருந்தது. எந்த ஒரு கருத்தை நிலைநாட்ட எண்ணினாலும் பழங்கருத்துக்களைக் கொண்ட பாடல்களையே அவர்கள் மேற்கோளாகக் காட்டினர். பிறருக்கு அறிவுரை கூறவேண்டும் என்றாலும் அவர்கள் கவிதையையே துணையாகக் கொண்டனர். இலியத், ஒடிஸ்ஸே போன்ற காவியங்கள் அவர்களுடைய பேராதரவையும் பெருமதிப்பையும் பெற்றன. வீட்டுத் தொடர்பான செய்திகளாயினும், நாட்டுத் தொடர்பான செய்திகளாயினும் அவர்கள்

கவிதையையே மேற்கோளாகக் காட்டிப் பேசினர். மகிழ்ச்சிக் காலங்களிலும் துன்ப வேலைகளிலும் இசையே அவர்களிடம் முதலிடம் பெற்றது. இளமையிலிருந்தே இளஞ்சிறுர்க்கு இசைக்கருவிகளை இயக்கும் முறை பயிற்றுவிக்கப்பட்டது. தனித்தனிக் குழுக்களாக இருந்து இசைபாடி மகிழ்ந்து, மகிழ்விப்பது என்பது கிரேக்கர்களிடமிருந்த சிறப்புத்தன்மையாகும். இதனைக் 'கோரஸ்' என்பர். பொது விடங்களில் இசைபாடி மகிழ்விப்பதையே பலர் பிழைப்பாகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வளமாக வாழ்ந்தனர் என்பதைக்கொண்டே, இசைக் கலையும் இசைவாணரும் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கை நாம் உணரலாம்.

## அழகுக் கலை

அழகை விரும்பாதவர்கள் யார்? அழகுக்கு அழகு செய்யாதவர்கள் யார்? அழகாக உள்ள பிறரைக் கண்டு 'நாம் அவர்போல் அழகாக இல்லையே' என்று எண்ணி வருந்துவோரை நாம் காணலாம். கிரேக்கர்கள் அழகுணர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டனர். அவர்கள் வெறும் வெளித்தோற்ற அழகையே பெரிதாகக் கொள்ளவில்லை; அகத்தின் அழகையும் விரும்பினர்; மிக அழகாகக் காட்சியளிக்கத் தங்களை நன்றாக ஒப்பனை செய்துகொண்டனர்.

பழைய காலத்தில் அரசிளங்குமரிகளுக்கு அழகு செய்வதற்கென்றே பணிமகளிர் பலர் இருந்தனர் என்று நூல்கள் கூறுகின்றன. உடல் அழகும் உள்ள அழகும் சேர்ந்தால்தான் அழகு நிரம்பியதாகக்

கிரேக்கர்கள் நினைத்தார்கள். ஆனால் சில நூல்கள் இந்தப் புறவழகை மறுத்துக் 'கல்வி அழகே அழகு' என்றும், 'அகத்தின் அழகே அழகு' என்றும் கூறுகின்றன.

ஒருவனைப் பார்த்து, 'அவன் எவ்வளவு அழகாக இருக்கிறான்?' என்று கூறுவதற்கும், "அவன் எவ்வளவு அழகாக வாழ்க்கை நடத்துகிறான்"' என்பதற்கும் வேறுபாடு உண்டல்லவா? 'அவன் எவ்வளவு அழகாக இருக்கிறான்' என்னும்போது அவனுடைய புற அழகைப்பற்றியே வியந்து போற்றுகின்றோம். 'அவன் எவ்வளவு அழகாக வாழ்க்கை நடத்துகின்றான்' என்னும்போது அவனுடைய அகவழகே முன்னிற்கின்றது. அழகு என்றால் நல்லது என்று பொருள் கொண்டு, நல்லதாக இருக்கவேண்டும் மனவுணர்வை அவன் பெற்றிருப்பதால் அவனது வாழ்வு சிறப்புற நடக்கின்றது என்று கொள்ளலாம். நாடகம், திருவிழா, விளையாட்டு நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள் முதலிய எல்லாவற்றையுமே கிரேக்கர்கள் மன நிறைவோடு அனுபவித்தனர். ஓவியங்களையும் உருவச்சிலைகளையும் அமைப்பதில் கிரேக்கர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவை யாவும் எழில் ததும்பும் வண்ண ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் அமைந்தன. கணிதம், வானசத்திரக் கலை முதலியவற்றிலும் அவர்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டனர். கிரேக்கர்கள் சிறந்த கலைஞர்களாக இருந்ததோடு அல்லாமல், பிறரையும் தங்கள் படைப்புக் கலையைக் கண்டு சுவைக்கச் செய்யும் அளவில் ஆற்றல் மிகுந்தவராயுமிருந்தனர்.

## சிற்பக்கலை

ஒரு நகரம் என்று சொன்னால் அங்குப் பல கோவில்கள் இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. எந்த ஒரு காவியத்தைப் படித்தாலும் அக்காவியம் தான் கூறவிருக்கும் நகரில் பல கோவில்கள் இருப்பதாகச் சொல்லி அவற்றை அறிமுகப்படுத்துவதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மதுரையைப்பற்றிக் கூறுகையில் அங்கிருந்த சிறு தெய்வங்கட்குரிய கோவில்களையும் கூறுகின்றார். 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது முன்னோர்களின் பொன்மொழியாகும்.

கிரேக்க நாட்டில் கிரேக்கர்களால் அமைக்கப்பட்ட எண்ணற்ற கோவில்கள் இருந்தன. அக்கோவில்கள் இறைவழிபாட்டுணர்ச்சியை மட்டும் நமக்கு உணர்த்துவனவாக இல்லாமல், உயர்ந்த கலையினைச் சுவைக்கும் ஆற்றலை வழங்கும் கலைச்சுரங்கங்களாகவும் இருந்தன. கிரேக்கருடைய சிற்பக்கலையறிவினை அக்கோவில்களில் அமைந்த சிற்பங்கள் உலகுக்குப் பறைசாற்றித் தெரிவித்தன என்று கூறுதல் பொருத்தமாகும்.

எருது, பன்றி, பசு முதலியனவும் வழிபடப்பட்டன. பாம்பு வணக்கம் மக்களால் பெரிதும் போற்றப்பட்டது. ஏதென்ஸில் இருந்த அத்தீனு கோவிலிலிருந்த பாம்புக்குத் திங்களுக்கு ஒருமுறை தேனடை ஒன்று படைக்கப்பட்டு வழிபடப்பட்டது. பாம்புகளிலும் நாகப்பாம்பாக இருந்தால் அதை வழிபடுவதோடு நில்லாமல், கிரேக்கர் அதற்கென்று தனியாகக் கோவில் ஒன்றையே அமைத்து விடுவர்.

# 11. சாக்ரடீஸ்[1]

## 1. ஏதென்ஸ்

### ஏதென்ஸ்

ஏதென்ஸ் கிரேக்க நாட்டுக்குத் தலைவாயில் போன்றது. அதன் வழியாகவே கிரேக்க நாட்டின் பொருள்கள் சிறிய ஆசியா மைனர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. வேற்றுநாட்டுக் கப்பல்கள் வகைவகையான வண்ணமிகு பொருள்களையும் கவர்ச்சிமிகு நாகரிகக் கலைகளையும் ஏதென்ஸ் நகரில் கொண்டுவந்து சேர்த்தன. சாக்ரடீஸ் பெருமகனுரை உலகுக்கு அறிமுகப்படுத்திய ஏதென்ஸ் நகரைப் பற்றி மேலும் நாம் தெரிந்துகொள்ள வேண்டாவா ?

### பழைய வரலாறு

(ஏதென்ஸ் நகரின் வரலாறு ஏறத்தாழக் கி. மு. ஏழாவது நூற்றுண்டின் இடைக்காலத்திலிருந்து தான் தொடங்கப்பெறுகின்றது.) பழைய காலத்தில் ஏதென்ஸை ஆண்ட மன்னர்கள் இருவரைப் பற்றி அறிவோம் :

தீஸியஸ்[2] என்பவன் ஏறத்தாழக் கி. மு. 13-ஆம் நூற்றுண்டில் ஏதென்ஸை ஆண்டான். இவன் அட்

---

1. Socrates 2. Theseus

டிக்காவில் இருந்த பன்னிரண்டு சிறு நகரங்களையும் ஒன்றுபடுத்தினன்; அவற்றை ஏதென்ஸ் ஆட்சிக்கு உட்படுத்தினன்; ஏதென்ஸ் ஆட்சிக்கு உட்பட்ட மக்களெல்லாம் 'அத்தினீயர்கள்' என்று அழைக்கப் படவேண்டும் என்னும் நிலையை உண்டாக்கினன். தீஸியஸ் காலத்தில்தான் ஏதென்ஸ் ஆட்சியே தொடங்கப்பட்டது என்னலாம்.

கோட்ரஸ்[1] என்னும் மன்னனைத் தீஸியஸீக்கு அடுத்தபடியாகக் கூறலாம். தீஸியஸ் ஏதென்ஸ் ஆட்சியைத் தோற்றுவித்தான் என்றால், கோட்ரஸ் தன் உயிரைக் கொடுத்து அந்த ஆட்சியைக் காப்பாற்றினன் என்னலாம். இதனை உறுதிப்படுத்தவல்ல கதையொன்றைக் காண்போம்:

கோட்ரஸ் ஆண்டபோது ஸ்ப்பார்ட்டாவைச் சேர்ந்த மக்களும் பிற பகுதிகளைச் சார்ந்த மக்களும் ஏதென்ஸ் மீது படையெடுத்தனர். கோட்ரஸ் ஏதென்ஸைப் பகைவரிடமிருந்து காப்பது எப்படி என்று எண்ணலானன். ஸ்ப்பார்ட்டர்களும் பிறரும் ஏதென்ஸ் தங்கள் ஆட்சிக்கு உட்படுமா என்று குறி கேட்டு அறிய விரும்பினர். குறி கேட்டபோது 'ஏதென்ஸ் உங்கள் ஆட்சிக்கு உட்பட வேண்டுமேயானால் அதன் மன்னனை கோட்ரஸ் உங்களால் கொல்லப்படாதிருக்க வேண்டும்', என்று கூறப்பட்டது. இதை அறிந்த கோட்ரஸ் விறகுவெட்டி வேடம் தாங்கி ஸ்ப்பார்ட்டர்கள் தங்கியிருந்த பாசறை நோக்கிச் சென்றான்; எதிர்ப்பட்ட ஸ்ப்பார்ட்டர்கள் இருவருள்

---

1. Codrus.

ஒருவனைத் தானே முன்னேக்கிச் சென்று தாக்கினுன்; அவ்வளவில் மற்ருெருவனுல் கொல்லப்பட்டு விட்டான்.

கோட்ரஸ் தம்மவருள் ஒருவனுல் கொல்லப்பட்டு விட்டான் என்பதை அறிந்ததும் ஸ்ப்பார்ட்டர்களும் பிறரும் 'ஏதென்ஸை இனிக் கைப்பற்ற முடியாது" என்று எண்ணித் திரும்பிவிட்டனர்.

இங்ஙனம் கோட்ரஸ் தன் உயிர் கொடுத்துத் தான் பிறந்த பொன்னுட்டைப் பிறருடைய ஆட்சிக் குட்படாது காத்த பெருமைக்கு உரியவனுனுன்.

## புரட்சியாளன்

உலக வரலாற்றை நோக்கினுல், ஒரு நாட்டின் நெருக்கடியான வேளையில்தான் அந்த நாட்டைக் காக்கவல்ல சான்ருேர்கள் தோன்றுவதை அறியலாம். கி. மு. ஆரும் நூற்ருண்டின் இறுதி-ஏழாம் நூற்ருண்டின் தொடக்கமாகிய ஆண்டுகளில் ஏதென்ஸைக் காக்கவல்ல ஆற்றல்மிக்க ஒருவர் தேவைப்பட்டது.

ஏதென்ஸின் நெருக்கடியான நிலைமையைச் சரி செய்ய முன்வந்த பெருமகன் **சாலோன்** என்பவர். ஏழை-பணக்காரன் என்ற வேறுபாடும், பொருளாதாரக் குறைவும் மிகுந்தவொரு சமுதாயத்தைச் சீர் படுத்தும் பொறுப்பு சாலோனைச் சேர்ந்தது. செல்வ வளம் கொண்டவர்களை நாடிச் சென்று கடனுகப் பணம் பெற்று வாழ்ந்தவர்கள் எண்ணிறந்த கொடுமைகட்கு ஆளாயினர்.

கடன்வாங்கியவர்கள் குறிப்பிட்ட காலத்தில் கடனைத் திருப்பித் தரவில்லையென்றால் அவர்கள் இல்லங்கள்முன் சென்று அங்குக் கல் ஒன்றை நட்டு அக் கல்லின்மேல் கடன்வாங்கியவர் பெயரும் கடன் வாங்கிய தொகையும் தருவதாகச் சொன்ன நாளும் பொறிக்கப்பட்டன. இதனால் கடன் வாங்கியவர்தம் பெயரும் நிலையும் கடன் கொடுத்தவர்க்கு மட்டுமல்லாமல் எல்லோர்க்கும் தெரியும் நிலைமை நேர்ந்தது. கடன்பட்டவர்கள் நெஞ்சங்களை இவ்வாறெல்லாம் கலக்குவதோடு அமையாமல், அவர்களை அடிமை கொண்டும் துன்புறுத்தினர். எண்ணற்ற வகுப்பு முறைகள் ஏதென்ஸில் நிலவின. இந்த இரண்டு குறைகளையும் போக்குவதோடு உழவர்க்கும் நல்லன செய்ய வேண்டும் என்றும் சாலோன் எண்ணினார்.

கி. மு. 594-ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற சாலோன் கி. மு. 572-ஆம் ஆண்டுவரைப் பதவியில் இருந்தார். அவர் கடனுக்காக அடிமை கொள்ளும் முறையைச் சட்டத்தின் மூலம் நீக்கினார்; புதிய சட்டத்திற்கு முன்னர் அடிமைப்படுத்தப்பட்டவர்களை விடுதலை செய்தார்; உழவர்கள் பெற்ற கடன்கள் நீக்கப்பட்டன. ஏதென்ஸ் மக்கள் நான்கு சாதியினராகவும் முந்நூற்றறுபது உட்பிரிவினராகவும் இருந்ததை மாற்றாமல், சாலோன், அந்நான்கு பிரிவுகளை அவரவருடைய செல்வ வளத்தை நோக்கி அமைத்தார். ஆண்டொன்றுக்கு 500 படி நெல் வருமானமுடையவர் முதல் வகுப்பினர் என்றும், முந்நூறு படிக்கு மேல் வருமானமுடையவர் இரண்டாம் வகுப்பினர்[1]

1. Hippes

என்றும், 200 படிக்கு மேல் 300 படிவரை வருமான முடையவர்கள் மூன்றும் வகுப்பினர்[1] என்றும் மற்ற வர்கள் நான்காம் வகுப்பினர்[2] என்றும் சாலோன் செய்த சட்டத்தால் அழைக்கப்பட்டனர். நெல் அல்லது வேறு வகையான தானியங்களை வருமானமாக உடையவர்கள் மட்டுமே இந்தப் பிரிவினைக்குட்பட்டவர்கள் என்பதல்லாமல், இதற்கு ஒப்புமையுடைய செல்வ வளம் கொண்டவர்களும் இப்பிரிவினைகட்கு உரியவர்களேயாவர் என்று கருதப்பட்டது.

## பீசிஸ்ட்ராட்டஸ்[3]

(பீசிஸ்ட்ராட்டஸ் என்பவன் சாலோனின் உறவினன். கி. மு. 560-ஆம் ஆண்டில் இவன் சாலோனுக்குப் பதிலாகப் பொறுப்பேற்றுக் கொண்டான். இவன் சிறிது காலத்திற்குள் தனக்கென ஒரு படையைத் தனியாக அமைத்துக்கொண்டான்; அப்படையைப் பயன்படுத்தி அக்ரோ போலீசைப் பிடித்துக்கொண்டான்) இவனுடைய போக்கை விரும்பாத செல்வர்களும் வணிகர்களும் இணைந்து, நான்காண்டுகள் கழித்த பின்னர் இவனைப் பதவியிலிருந்து விலக்கி விட்டனர். ஆனால் இவன் மீண்டும் மீண்டும் முயன்று நாட்டைக் கைப்பற்றிப் பொறுப்பேற்றுக் கொண்டான்; நிலமில்லாத உழவர்க்கு நிலம் கிடைக்குமாறு செய்தான்; வேலையற்றோர்க்கு வேலை கொடுத்தான்; (எழில் மிக்க கோவில்களையும், நீண்ட நெடுஞ்சாலைகளையும், தொலையைக் குறிக்கக் கல் (மைல்) கற்களையும் அமைத்தான்; பிறநாடுகளுடன் வணிக உடன்

1. Zeugitai 2. Thetes 3. Peisistratus

படிக்கை செய்துகொண்டான்; அதனல் உள்நாட்டு வாணிகமும் வெளிநாட்டு வாணிகமும் வளரச் செய்தான்.

இவை யாவற்றுக்கும் மேலாக பீசிஸ்ட்ராட்டஸ் செய்த செயற்கருஞ் செயல் ஒன்றும் உள்ளது. அஃது யாது? கிரேக்கப் பெருங்கவிஞர் ஹோமர் எழுதிய இலியத், ஒடிஸ்ஸே என்னும் இரண்டு காவியங்களின் கருத்துக்களை நெறிப்பட அமைத்து எழுத்துருவில் கொணரக் குழு ஒன்றை அமைத்தமையே அச்செயற் கருஞ் செயலாகும். அக் குழுவினர் அமைத்த முறையிலேதான் அவ்விரு காவியங்களையும் நாம் இன்று காண்கின்ருேம்.

## இவனுக்குப் பின்

பீசிஸ்டிராட்டஸுக்குப்பின் அவனுடைய மூத்த மகன் ஹிப்பியாஸ் என்பவன் அரசப் பொறுப் பேற்ருன். இவனுடைய இளவலான ஹிப்பார்க்கஸ் என்பவன் தன் மனம்போன போக்கெல்லாம் நடந்து பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளாஞன். இறுதியில் அவனுடைய போக்கை வெறுத்த சிலர் அவனைக் கொன்று விட்டனர். தம்பியைக் கொன்றவர்களை வாழவிடுதல் கூடாது என்று எண்ணிய ஹிப்பியாஸ் மக்களைக் கொடுமைப் படுத்தலானன்.

மக்கள் அனைவரும் ஒன்றுகூடி முயன்று ஹிப்பியா ஸைப் பதவியினின்று விரட்டினர். காலத்தைப் பயன் படுத்தி கிளிஸ்தனிஸ் என்பவன் கி. மு. 507-ஆம் ஆண்டில் பதவியேற்றான். இவனே ஏதென்ஸின் அரசி யலமைப்பை மாற்றி அமைத்தான். ஏதென்ஸ் அர சாங்கத்தை மக்களாட்சி முறையில் அமைத்த பெரு மையும் குடிமக்களுக்குப் பெரும்பாலான உரிமைகளை வழங்கிய பெருமையும் இவனுக்குண்டு.

# 1. சாக்ரடீஸ்

## சாக்ரடீஸ்

ஏழுநூறு சதுர மைல் பரப்பளவு கொண்டதும் மூன்றரை லட்சம் மக்கள் தொகை கொண்டதுமான ஏதென்ஸ் நகரில் சாக்ரடீஸ் கி. மு. 470-இல் பிறந்தார். அறிவுப்பசி மிக்க பெரும்பாலோர்க்கு நல்லதொரு அறிவுச் சுரங்கமாகச் சாக்ரடீஸ் விளங்கினர்; ஏன்? எப்படி? என்ற வினக்களைக் கொண்டு ஆராயும் அறிவை ஒவ்வொருவரும் பெறவேண்டும்; மக்களனை வரும் அறிவுடையவர்களாக விளங்க வேண்டும்; ஒவ் வொருவரும் தங்களை நன்கு உணர்ந்திருக்க வேண்டும்; என்றெல்லாம் விரும்பினர். சிறந்த ஒரு பெருங் கவிஞர் சாக்ரடீஸைப் பற்றிப் பின்வருமாறு கூறு கின்ருர்:

''நம் நாடு உரிமை பெறவேண்டும் என்று பிறர் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் விரும்புவது இயல்பு. ஆனல் உரிமை பெற்ற நாடு புகழ் மிக்கதாக விளங்க வேண்டுமாயின், (அந்நாட்டு மக்கள் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள், அறிவு, உண்மையைக் கடைப் பிடித்தல், அறம் வழுவாது நடத்தல், எவர்க்கும் அஞ்சாமல் ஒழுக்க நெறிகளை மேற்கொள்ளல் முதலிய பண்புகளையும் பெற்றிருக்க வேண்டும். இவற்றை

யெல்லாம் மக்களுக்குக்கூறி அவர்களை உயர்ந்தவர் களாக்கிக் காணவேண்டும் என்று விரும்பியவரே சாக்ரடீஸ்) அவர் செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும் மதிப்பளிக்கவில்லை; உயர்ந்த வாழ்வுக்கு வழிவகுக்கக் கூடிய சிறந்த பண்புகளையே பெரியனவாக மதித்தார்; மக்கள் வாழ்வில் உண்மையான இன்பத்தை நிலை பெறச் செய்யவே தம்மை இறைவன் அனுப்பியிருப்ப தாக எண்ணினர். அதனல்தான் ஆட்சியாளர் மரண தண்டனையை அளித்தபோதும் நச்சுக் கோப்பையைத் தந்த போதும் மனம் தளராமல் நீண்டதொரு சொற் பொழிவைச் செய்து தம் கொள்கைகளை விளக்கி மறைந்தார். ('பழமையைக் காலத்திற்கேற்ப மேற் கொள்ள வேண்டுமே அல்லாது, பழமையான கருத் துக்கள் என்பதற்காக அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது,' என்று சாக்ரடீஸுக்கு முன் னர்ச் சிலர் கூறி வந்தனர். அந்தச் சிலர் அரசியலா ரால் சோபிஸ்ட்டுகள் என்று அழைக்கப்பட்டனர்.) சோபிஸ்ட்டுகள் என்னும் சொல்லுக்குச் சொற்புரட் டர்கள் என்பது பொருள். அறிவுப் பசியை மக்க ளுக்கு அவர்கள் உண்டாக்கினர்கள். சாக்ரடீஸ் மக்களுடைய அறிவுப் பசிக்கு நல்விருந்தளித்தார்."

## போரும் வாழ்வும்

சாக்ரடீஸின் தந்தையார் சிற்பக் கலைஞராக விளங்கினர். தந்தையார் தொழிலைப் பின்பற்றிய சாக்ரடீஸ் நெடுக்காலம் அத்தொழிலில் இல்லை. போதிய வருவாயின்மையே அதற்குக் காரணமாகும். போதிய வருவாய் இல்லை யென்ருலும் வறுமை தலை

காட்டாமலிருந்தது. சாக்ரடீஸ் பிறந்த பொன்னுட்டுக்குத் தம்மாலான கடமைகளைச் செய்ய வேண்டும் என்று விரும்பினுர். சாக்ரடீஸின் நாற்பதாம் வயதில் பொலப்பனேசியப் போர் தொடங்கியது. அவர் காலாட்படையில் சேர்ந்தார்; போரில் தோள் திறங் காட்டிப் போராடினுர். அரசாங்கம் அவருக்குப் பரிசு தருவதென்று முடிவு செய்தது. ஆனல் அவர் அப்பரிசைப் பெற்றுக் கொள்ள விரும்பாமல் **ஆல்கிபியாதர்** என்னும் தம் நண்பர் பெறுமாறு செய்தார். அதற்குப் பின்னர் ஆம்பிபோலிஸ்[1] என்னும் இடத்தில் நடைபெற்ற போரிலும் பங்கு கொண்டார். ஆனல் அப்போரில் ஏதென்ஸ் தோற்றது. சிறிது காலம் கழிந்த பின்னர் மற்ருேர் இடத்தில் நடைபெற்ற போரிலும் சாக்ரடீஸ் ஏதென்ஸ் மக்களுக்காகப் படையில் சேர்ந்து போராடினுர்.

## வரவேற்பும் புறக்கணிப்பும்

சாக்ரடீஸின் போர்க்காலத் தொண்டுகள் முடிந்தன. அவர் நண்பர்களால் பெரிதும் போற்றப்பட்டார். நகர ஆட்சியில் பங்கு கொண்டு தொண்டாற்றுமாறு நண்பர்கள் சாக்ரடீஸை வேண்டினர்; அறங்கூறவையத்தில் வீற்றிருந்து அறங்கூறும் தலைவராக இருக்குமாறும் வேண்டினர். ஆனல் சாக்ரடீஸோ அவர்களுடைய வேண்டுகோள்களைப் புறக்கணித்தார். மக்களிடையே நிலவியுள்ள அறியாமையைப் போக்கி அவர்களிடையே நல்லறிவைப் புகட்டுவதே தம்முடைய கடமை என்று எண்ணினுர்.

---

1. Amphipolis

சாக்ரடீஸ் முறை"

சாக்ரடீஸ் தம்முடைய அறிவுரைகளைக் கூற ஆட்களைச் சேர்க்க முயலவில்லை. அதற்குப் பதிலாக மக்கள் குழுமியுள்ள இடங்களை நாடிச் சென்று தம் கடமையைச் செய்தார். கடைத் தெருக்களிலும் விளையாட்டரங்கங்களிலும் கூடியுள்ளவர்களைக் கண்டு விட்டால் சாக்ரடீஸ் தொடர்ந்து செல்லமாட்டார்; அங்கேயே நின்று விடுவார்; தனி மனிதனது நடத்தை, சமயம், அரசியல், சமுதாயப் புரட்சிகள், நல்வாழ்வுக்கான நெறிமுறைகள் என்பன பற்றி யெல்லாம் அவர்களிடம் கேள்விகள் கேட்பார்; அவர்கள் கூறும் விடைகளையெல்லாம் பொறுமையாகக் கேட்பார்; பின்னர் மேலும் மேலும் கேள்விகளைக் கேட்டு அவர்களை எண்ணிப்பார்க்கச் செய்வார்.

சாக்ரடீஸ் இளைஞரிடையே உரையாடிக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்ததும் மக்கள் பலராகக் கூடுவர். அந்த அளவில் வினாக்களும் பலவாக எழும். சாக்ரடீஸ் அந்த வினாக்களுக்கெல்லாம் பொறுமையாகவும் தெளிவாகவும் விடையளிப்பார். கடைத் தெரு, கோவில், விளையாட்டரங்கங்கள், விழாவரங்கங்கள், செல்வர்தம் செல்வமாளிகைகள், தொழிற்சாலைகள் முதலிய இடங்களிலெல்லாம் சாக்ரடீஸைப் பற்றிய பேச்சு இருந்தது. சாக்ரடீஸ் கேள்வி கேட்டு விடையளித்து வந்த முறையே **"சாக்ரடீஸ் முறை"** எனப்பட்டது.

## நேர்மையின் உறைவிடம்

ஏதென்ஸின் குடிமக்களுள் தாமும் ஒருவர் என்பதைச் சாக்ரடீஸ் எப்போதும் மறந்ததில்லை. குடிமகன் என்னும் உரிமையோடு அவர் செய்த அரசியல் கடமைகளுள் அறம் வழுவிய செயல்களே இல்லையென்று சொல்லலாம். நேர்மையின் உரைவிடமாக விளங்கிய அவர் மனச்சான்றுக்கு மதிப்பளித்து நடந்தார். ஏதென்ஸ், ஸ்ப்பார்ட்டாவின் ஆட்சிக்குட்பட்டபோது எட்டுத் திங்கள்களாக சர்வாதிகார ஆட்சி நடைபெற்றது. அப்பொழுது நடைபெற்ற கொலைகளையும் கொள்ளைகளையும் கண்டித்து சாக்ரடீஸ் மக்களிடையே பேசி வந்தார்.

ஒரு சமயம் லியோன் என்னும் செல்வச் சீமானின் உடைகளைப் பறிமுதல் செய்ய அரசாங்கம் நால்வரை அனுப்பியது. அவருள் சாக்ரடீஸும் ஒருவர். சாக்ரடீஸ் அச் செயல் நேர்மையுடையதன்று என்பதை அறிந்தார்; எனவே அரசாங்கத்தின் ஆணையை ஏற்க மறுத்தார். அதற்காக அரசாங்கம் அவரைத் தண்டிக்க எண்ணியது. ஆனல் அதற்குள் ஆட்சியே மாறிவிட்டது. "அன்புக்கும் அறத்துக்கும் மனிதன் மதிப்பளித்து நடக்கக் கற்றுக் கொள்வதே போதும். அவன் இவ்விரண்டுக்கும் அப்பாற்பட்ட நேர்மையற்ற அரசியல் ஆணைகளை மதிக்க வேண்டுவதில்லை" என்று சாக்ரடீஸ் அடிக்கடி தம் நண்பர்களிடையே கூறுவர்.

## இல்வாழ்க்கை

திருமண வாழ்க்கை மனிதனுடைய வாழ்க்கையில் சிறந்த பகுதியாகும். மணவாழ்க்கை நன்கு அமையவில்லையென்றால் மக்கள் பல துன்பங்கட்கு உள்ளாவர். வாழ்க்கைத் துணைவியாக அமையும் பெண் நல்ல பண்புடையவளாக இருக்கவேண்டும். நல்ல பண்புடைய பெண்ணைத்தான் நாம் மணந்து கொள்ளப் போகின்றோமா என்று பார்ப்பதைவிட நம் நிலைக்கு ஏற்றவர்கள்தானா என்பதையும் அறிதல் வேண்டும். மூளை உழைப்பு உடையவன் மூளை உழைப்பு உடையவர்தம் மகளை மணந்தால்தான் வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த முடியும். இங்ஙனம் அறிந்து துணிந்த பின்னரே மணம் கொள்ளவேண்டும் என்று அறிஞர் கூறுவர். நல்ல மனைவி வாய்த்து விடுவாளாயின் அந்த வாழ்க்கை உயர்ந்த வாழ்க்கையாகவும் பிறர் பின்பற்றத்தகுந்த வாழ்க்கையாகவும் அமையும்.

சாக்ரடீஸ் இல்வாழ்க்கை சிறப்பாக அமையவில்லை. இவரது மனைவியார் கல்வியறிவு அற்றவர். அதனால் தன் கணவனுடைய சிறப்புக்களை அவரால் உணர முடியவில்லை. இவர் தம்முடைய நாற்பதாம் வயதில்தான் திருமணம் செய்து கொண்டார். மனைவியின் பெயர் "சாந்திப்பே" என்பதாகும். அவ்வம்மையார் கணவனுடையசொற்பொழிவுகளையும் கருத்துரைகளையும் கேட்பவர்களையெல்லாம் ஏளனம் செய்தும் கடுஞ்சொற்கள் கூறியும் அனுப்புவாராம். ஒருமுறை

---

1. **Xanthippe**

சாக்ரடீஸும் அவர் தம் நண்பர்களும் வீட்டு முற்றத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனராம். அதனைக் கண்ட சாந்திப்பே அம்மையார் குடமொன்றில் நீரை நிரப்பிக் கொண்டு விரைந்து மாடிக்குச் சென்று அங்கிருந்தபடியே முற்றத்தில் விழுமாறு நீரைக் கொட்டினாராம். அவ்வளவில் அவர்களெல்லாம் எழுந்து வேற்றிடம் நாடி சென்றனராம். அம்மையாருடைய செயல்களையெல்லாம் கண்ட ஒருவர் 'பெயர்க்கேற்பவே அம்மையாரின் செயல்கள் உள்ளன' என்று கூறியுள்ளார். 'சாந்திப்பே' என்றால் 'அடங்காப்பிடாரி' என்று பொருளாம்.

சாக்ரடீஸுக்கு மூன்று ஆண் மக்கள் இருந்தனர். அவருள் ஒருவரும் தந்தையாரின் பெயர் நிலைபெறும் செயலைச் செய்தாரில்லை.

## அழுக்காறு

சாக்ரடீஸ் பெற்ற விரைந்த புகழைக் கண்டு பலர் பொறுமை கொண்டனர். தாங்கள் கொள்ளும் அழுக்காறு சாக்ரடீஸின் விரைந்த புகழை நிலைபெறச் செய்துவிடும் என்பதை அவர்கள் அப்போது அறியவில்லை. மாணவர்களோடு அவர் பேசக்கூடாது என்று தடை விதித்தனர். சமுதாயத்தின் உயர்ந்த இடங்களில் இருந்தோர்தம் அடக்கு முறைகளாலும் அரசாங்கத்தின் எதிர்ப்புக்களாலும் சாக்ரடீஸின் புகழ் பெருகியது. அவருக்கு எண்ணிறந்த மாணவர்கள் உண்டாயினர்.

பிளேட்டோ[1], கிரிட்டியாஸ்[2], ஆல்ஸிபியாடிஸ்[3], அடிமான்டஸ்[4], கிளாக்கோன்[5], ஜெனோபன் என்பவர்கள் இவரது மாணவ பரம்பரையினராவர். இவருள் பிளேட்டோ என்பவர் சிறப்பிடம் பெறுகின்றார்.

சாக்ரடீஸை வெறுத்தவர் கூட்டம் வளர்ந்தது. அரிஸ்டோபனிஸ்[6] என்னும் நாடகாசிரியர் சாக்ரடிஸைத் தம்மறிவு இல்லாதவர் என்றும் பிழைப்புக்கு வழியற்றவர் என்றும், மக்களைக் கெடுக்கும் கொடியவர் என்றும் தம்முடைய மேகங்கள்[7] என்னும் நூலில் குறித்துள்ளார். சாக்ரடீஸைக் குற்றம் சாட்டி அவரைத் தண்டிக்க வேண்டும் என்று முனைந்தவர்களுள் முதலிடம் பெறுபவர் அனீட்டஸ்[8], மெலேட்டஸ்[9], லைக்கோன்[10] என்பவராவர்.

"சாக்ரடீஸ் பொய்யை மெய்யாக்கியும் மெய்யைப் பொய்யாக்கியும் பேசி மக்களைக் கெடுக்கின்றார். மக்கள் நடைமுறையில் கொண்டுள்ள பழக்க வழக்கங்களைக் குறைகூறுகின்றார். மாசுமறுவற்ற இளைஞர் தம் உள்ளங்கள் சாக்ரடீஸின் மாறுபட்ட கருத்துக்களால் பாழ்படுகின்றன. இளைஞர்களிடையே நாத்திகத்தைப் பரப்பி, அவர்களறிவை மயக்கி, அவர்கள் ஒழுக்கம் கெடுமாறு செய்துவிட்டார். இங்ஙனம் தம்முடைய சொல்லாலும், செயலாலும், நம்முடைய சமுதாயத்தைப் பாழ்படுத்தி வரும் சாக்ரடீஸுக்கு மரண தண்

1. Plato 2. Critias 3. Alcibiades
4. Adimentus 5. Glaucon 6. Aristophanes
7. Clouds 8. Anytus 9. Mcletus
10. Lycon

டனே தான் ஏற்றது", என்று செல்வந்தர்களும் மூடப் பழக்க வழக்கங்களில் ஈடுபாடு கொண்டவர்களும் கூறினர்.

"மக்களுக்கு என்னென்ன கருத்துக்கள் தேவையோ அந்தந்த கருத்துக்களைத்தான் நான் விளக்கிக் கூறுகின்றேன். நான் கூறுவனவெல்லாம் எண்ணிப் பார்த்துக் கூறுவனவேயாகும். என்னுடைய அடி மனத்தில் தங்கிய எண்ணற்ற நல்ல கருத்துக்களையே நான் இடத்தை அறிந்து கூறி வருகிறேன். மனிதனைக் கல்வி மட்டுமே உயர்ந்தவனுக்குவதில்லை. அநுபவமும் அடுத்தவர்தம் வாழ்க்கையும், ஒருவன் தன் வாழ்வில் உயர்ந்து விளங்குவதற்குத் துணை புரியும் உயர்ந்த வாயில்களாக உள்ளன. அந்த இரண்டு வாயில்களையுமே நான் அறிந்த வரையில் பிறர்க்குக் கூறி வருகிறேன்," என்று சாக்ரடீஸ் கூறினுர்.

## விசாரணையும் தண்டனையும்

சாக்ரடீஸ் எவ்வளவோ சொல்லியும் அழுக்காறு கொண்டவர்கள் மனம் ஒப்பவில்லை. "சாக்ரடீஸ் கூறுவனவற்றைக் கேட்டு மனமிளகித் தண்டனை கொடுக்காமல் விட்டுவிட்டால் கடவுளைப் பற்றி நிலவிவரும் கருத்துக்கள் அடியோடு மாறிவிடும். அவருடைய சொற்பொழிவுகளில் இளைஞர்களே மிகுதியாகப் பங்கு கொள்ளுகின்றனர். அவ்வளவு பேரும் அழிவுப் பாதையை நோக்கிச் செல்லுகின்ருர்கள் என்றுதான் சொல்லவேண்டும். எதிர்காலச் சமுதாயமாகிய இளைஞர் சமூகம் அழிவுப்

பாதையை நோக்கித் தனி ஒருவனால் இழுத்துச்செல் லப்படுவதைப் பார்த்துக்கொண்டிருப்பது நம் போன் ரோர்க்குச் சிறப்பாகாது. பயங்கரமான விளைவுகள் உண்டாவதற்கு முன்னரே நாம் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும்,'' என்று அழுக்காறு கொண்டவர் கூறினர்.

'அரசாங்கம் தொழும் கடவுளைச் சாக்ரடீஸ் தொழுவதில்லை; நடைமுறையில் இல்லாத சமயக் கோட்பாடுகளையெல்லாம் அவர் பேசிப் புகுத்துகின் ரூர்; இளைஞரிடையே அவர்களைக் கவரவல்ல மொழி யில் பேசி நல்லொழுக்கத்தினின்று அவர்களை வழுவச் செய்தார்,' என்று கூறிச் சாக்ரடீஸ்மீது வழக்குத் தொடரப்பட்டது.

அறங்கூறவையத்தில் ஐஞ்ஞூற்று ஒருவர் அமர்ந் திருந்தனர். மெலேதன் என்பவன் விசாரணைக்கு வாதியாய் நின்றுன். அநீதன் என்பவன் வாதியின் சார்பிலிருந்து வழக்கை நடத்தினுன். 'சாக்ரடீஸ் குற்றவாளியா? இல்லையா?' என்பது பற்றிக் கேள்வி எழுந்தது. அவரைக் குற்றவாளி என்று இருநூற்று எண்பத்தெட்டுப் பேரும், குற்றவாளி அல்லர் என்று இருநூற்று இருபதின்மரும் கருத்துத் தெரிவித்தனர். மெலேதன் என்பவன் அவருக்கு மரண தண்டனையே வழங்கவேண்டும் என்று வாதாடினுன்.

சாக்ரடீஸின் மனக்கருத்தறிய அவையோர் விரும் பினர். "ஏதென்ஸ் மக்களுக்குப் பல துறைகளில் நல்ல தொண்டுகள் ஆற்றிவரும் எனக்கு மரண தண் டனை அளிக்க இவ்வளவு ஊக்கம் கொண்டு பேசும்

உங்களைக் கண்டு நான் வருந்துகின்றேன். ஏதென்ஸ் அரசாங்கம் என்னுடைய பலதுறைத் தொண்டு களைப் பாராட்டி என் வாழ்நாள் வரை என்னைப் போற்றியல்லவா காக்கவேண்டும்''? என்று சாக்ரடீஸ் கூறினார். அவருடைய பதில் அவையோர்க்குச் சினத்தை அளித்தது. அதனால் அவர்கள் மரண தண்டனையை உறுதிப்படுத்தினர்.

## உலகத்திற்கு இழப்பு

சாக்ரடீஸுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ஒரு திங்கள் வரை நிறைவேற்றப் படாமல் இருந்தது. டெல்பியில் நடைபெற்ற புனித விழாவே அதற்குக் காரணமாகும். ஒரு திங்கள் கடந்தது. புனித விழா வும் முடிந்தது. மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தது. சாக்ரடீஸ் அரங்கத்திற்கு அழைத்து வரப்பட்டார். அவரைச் சுற்றிலும் அவ ருடைய நண்பர்களும் மாணவர்களும் இருந்தனர்; உலகம் ஒப்பற்ற ஒரு அறிஞரை—அவரை உணர முடியாமல் அநியாயமாக இழந்துவிடப் போகின்றதே என்று அவர்கள் எண்ணிக் கலங்கினர்.

மரண தண்டனை பெற்றவர்களை நஞ்சு அருந்தச் செய்வதே கிரேக்க நாட்டில் இருந்த முறை. அதை யொட்டி நஞ்சு நிறைந்த கோப்பை சாக்ரடீஸிடம் தரப்பட்டது. சாக்ரடீஸ் மலர்ந்த முகத்துடன் நஞ்சினைக் குடித்தார். உடனிருந்தவர் அனைவரும் கண்ணீர் விட்டு அழுது புலம்பினர். சாக்ரடீஸ் வாழ் வில் நிறைவு கண்ட பெருமிதம் கொண்டவராய் விளங்கினார்; எவரும் தம்முடைய இறப்புக் குறித்து

வருந்த வேண்டாமென்றும், தம்மை அமைதியாக இறக்குமாறு உதவி செய்யவேண்டும் என்றும் வேண்டினர்.

சாக்ரடீஸின் உடல் சில்லிட்டு வந்தது. உலகமெல்லாம் அறிவுடைய குடிமக்களைக் கொண்டு விளங்க வேண்டும் என்று எண்ணி, அந்த எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் தம்மாலான நல்ல தொண்டுகள் செய்த சாக்ரடீஸின் உயிர் பிரியும் வேளை நெருங்கி விட்டது. ஏதென்ஸ் நகர அரசியல் அமைப்பை உருவாக்கித் தந்த உத்தமரை இழக்கும் காலம் அண்மியது; அவர் சற்றுத் தம் கழுத்தைத் திருப்பினர். அருகில் இருந்த நண்பனை விளித்து ஆஸ்க்ளேப்பியஸ் தெய்வத்திற்குச் சேவல் ஒன்றைப் பலி கொடுக்குமாறு வேண்டினர். சாக்ரடீஸ் இந்த இறுதி வேண்டுகோளுடன் மறைந்தார். (கி. மு. 399-ஆம் ஆண்டில் அறிவின் பேரொளி அணைந்தது.)

உலகம் சிறந்த அறிஞரை இழந்தது.

## மனிதப் பண்பின் நிறைவு

'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்று ஆன்றோர் கூறுவர். உலக மக்கள் நல்வாழ்விலும் அழகு உணர்ச்சியிலும் ஈடுபாடு கொண்ட சாக்ரடீஸை எழில் மிக்கவர் என்று கூற முடியாது. அவருடைய நெற்றி ஓரளவு முன்னே வந்திருக்கும். அவருடைய சப்பை மூக்கும் தடித்த உதடுகளும் பெருவயிறும் உருட்டிப் பார்க்கும் பெருவிழிகளும் அவரை எழில் மிக்கவர் என்று சொல்ல விடாமல் தடுத்தன.

அவர் மிதியடி இல்லாமல் அழுக்கடைந்த ஆடையை அணிந்து, பல இடங்க்ட்கும் நடந்து சென்று, உள்ளொளி பெருக்கி உயர்ந்தார்.

சாக்ரடீஸ் நாட்டுப் பற்று கொண்டவர். போர்க் காலங்களில் படையிற்சேர்ந்து நாட்டைக் காக்கத் தொண்டாற்றியவர்; மக்கள் நலன் கருதித் தமது வாழ்வைத் துறந்தவர். சுருங்கக் கூறின், சாக்ரடீஸ் மனிதப் பண்பின் நிறைவாக விளங்கினர் என்னலாம்.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

# 3. சொல்லின் செல்வர்

## சொல்வன்மை

சொல்லாற்றல் மிக்கவர் தம் சொற்களுக்குக் கட்டுப்படும் மனநிலை பலருக்குண்டு. சொல்லின் செல்வர்கள் துணைகொண்டே உலகில் எண்ணற்ற நற்செயல்கள் நடந்துள்ளன. சிறைக்கோட்டங்கள் அறக்கோட்டங்களாகியதும், அடிமை நாடுகள் உரிமை நாடுகளாக மாறியதும், அறிவாற்றலில் பின் தங்கிய நாடுகள் விரைந்த வளர்ச்சியினைப் பெற்றதும் சொல்லாற்றல் மிக்கவர்களால்தான் என்று கூறுதல் தவருகாது. சொல்லாற்றல் மிக்கவர்கள் தங்கள் சீரிய கருத்துக்களை மக்கள் மனதில் பதியும் வண்ணம் கூறுகின்றனர்; அவர்கள் உணர்ச்சி கொண்டு விழித்து வாழுமாறு கூறுகின்றனர்; நரம்புகள் புடைத்தெழுந்து குருதியோட்டம் மிகும் நிலையில் பேசுகின்றனர். அவர்கள் தங்கள் எண்ணத்தில் வெற்றியும் பெறுகின்றனர்.

மேனாட்டு இலக்கியங்களும் நம் நாட்டு இலக்கியங்களும் சொல்லின் செல்வர் பலரை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதிய "ஜூலியஸ் சீசர்" என்னும் நாடகத்தில் **ஆண்டனி** என்பவன் சொல்லாற்றல் மிகுந்தவனாகக் காட்டப்படுகின்றான். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்

எழுதிய "மனோன்மணீயம்" என்னும் நாடகத்தில் **சிவகவழுதி** சொல்லாற்றல் மிக்கவனாகக் காட்டப்படு கின்றான். கம்பராமாயணத்தில் **அநுமனும்** சிந்தாமணி யில் **சீவகனும்** சொல்லின் செல்வர்களாக விளங்குகின் றனர்.

பேரறிஞர்தம் சொற்பொழிவுகளை நாம் படிப் போமாயின், நாவன்மையின் ஆற்றலை உணரமுடியும். இங்கு சாக்ரடீஸின் சொல்லாற்றலைக் காண்போம். மரண தண்டனை விதிக்கப்பட்ட பின்பு அவர் அவை யில் பேசிய சொற்பொழிவு இங்குத் தரப்படுகின்றது.

## சாக்ரடீஸ் சொற்பொழிவு

"ஏதென்ஸ் நகரக் குடிமக்களே, நீங்கள் இங்குக் குழுமியிருப்பதைக் கண்டு நான் பெருமிதம் அடை கின்றேன். நீங்களும் நானும் வாதிகள் பேசியதைக் கேட்டோம். உண்மையில்லாமல் திறமையாகப் பேசிய அவர்கள் சொல்லாற்றலை நான் பாராட்டுகின் றேன்-நீங்களும் பாராட்டத்தான் வேண்டும். என்னி டம் இல்லாத பண்புகள் எவை எவை என்பதை ஓர ளவு என்னை நன்குணர்ந்தவர்களும் அறியலாம். என் னிடம் இல்லாத பண்புகளை என்னிடம் இருப்பதாகக் கூறி, அவற்றால் இந்த நாட்டு இளைஞர் சமுதாயம் சீர ழிந்து போகின்றது என்று சொன்ன அவர்கள் கூற்றைக் கேட்டு நாம் எப்படி வியக்காமலிருக்க முடி யும்? அவர்களைப் போல் என்னால் பேச முடியாது. ஆயினும் என்னை அவர்கள் 'சொல்லில் வல்லவன். என்கின்றார்கள்; என்னுடைய சொல்லாற்றலைக்

கொண்டே இளைஞர்களை நான் கவர்வதாகச் சொல்கின்றார்கள்.

"சொல்லாற்றல் என்பது எனக்கு மட்டும் உரிய கலை அல்லவே! அக்கலையை நன்கு பயன்றேனும் இளைஞர்களை ஈர்க்க நம் வாதிகள் முயன்று பார்த்து வெற்றி காணட்டுமே! வெறும் நாவன்மை மட்டும் இருந்து விட்டால் இளைஞர்களை ஈர்த்துவிட முடியாது. நேர்மையும் அறமும் என்னிடம் இருப்பதால் தான், சொல் அலங்காரங்களைப் பற்றி நான் கவலைப் படாமல் **சமுதாய முன்னேற்றம் ஒன்றையே** கருத்தாகக் கொண்டு கடமைகளைச் செய்துவந்தேன். கடைத் தெருக்களிலும் சந்தைகளிலும் விளையாட்டரங்கங் களிலும் விழாவரங்கங்களிலும் இன்ன பிற இடங் களிலும் மக்களைக் கண்டு எந்தவகையில் பேசினேனே அதே முறையில்தான் இப்போது நான் பேசப் போகின்றேன்.

"இப்போது நான் எழுபதாண்டுகளைக் கடந்து விளங்குகின்றேன். முதன்முறையாக அறங்கூற வையத்திற்கு இப்போதுதான் நான் வந்துள்ளேன். எனவே, வழக்கு மன்றத்தில் பேசும் முறையை நான் அறியேன். அதனால் என்னுடைய பேச்சில் குறைகள் இருக்கலாம். அக் குறைகளையெல்லாம் பொருட் படுத்தாமல் நல்லனமட்டுமே கொள்ளுமாறு உங்களை யெல்லாம் வேண்டிச் சில சொல்வேன்.

"அன்புடைய பெருமக்களே, என்பால் சுமத்தப் பட்டுள்ள குற்றச் சாட்டும் புதியதன்று என்பதை

நீங்கள் அறிவீர்கள். நீங்கள் பல ஆண்டுகளாகக்கேட்டுக்கேட்டுச் சலித்துப்போன குற்றச் சாட்டுத்தான் அது. எனவே, நான் குற்றமற்றவன், மக்கள் நலன் கருதித்தான் எதையும் செய்தேன் என்று சொன்னால், நீங்கள் நம்பமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். நான் நிலம், வானம் முதலியவை பற்றி ஆராய்ச்சி நடத்தி வருவதாகவும், என்னுடைய நாவன்மையால் பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் கூறி வருவதாகவும் குற்றம் கூறுகிறார்கள். ஆராய்ச்சி செய்கிறேன் என்பது உண்மைதான். ஆராய்ச்சி செய்தால்தானே அறிவும் மனமும் வளரும். அதைத்தானே நான் செய்கிறேன். 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', என்பது தானே நம் ஆன்றோர் வாக்கு. அவ்வாக்கின்படி நான், நான்பெற்ற படிப்பினைகளையும் அனுபவங்களையும் ஆராய்ச்சி அறிவையும் பிறர்க்குக் கூறி வருகிறேன்.

''நான் பழமையைப் போற்றுகின்றேன்—முன்னவர்கள் சொன்னதைப் பொன்னே போல் போற்றுகின்றேன் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்? ஆனால் இப்படியே மீண்டும் மீண்டும் சொல்வதால் நான் குற்றவாளி அல்லன் என்று நீங்கள் கூறப்போவதில்லை என்பதும் எனக்குத் தெரியும். குறுகியகால அளவுக்குள் உங்கள் மனத்தில் மிக்க ஆழமாகப் பதிந்துள்ள—என்னைப் பற்றிய—தவறான எண்ணத்தை விரைந்து போக்குமளவில் எனக்கு நாவன்மை இல்லை என்பதை ஒப்புக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். இந்த நிலையில் உள்ள என்னைத்தான் நாவன்மை மிக்கவன் என்று குற்றம்

சாட்டித் தண்டனையும் வழங்கிவிட்டது ஏதென்ஸ் நகர அரசாங்கம். நான் கூறுவதையெல்லாம் பொறுமையாகக் கேட்டு, நான் குற்றமற்றவன் என்பதை நீங்கள் உணர இறைவன் அருள் புரிய வேண்டும்.

"கடவுள் இல்லையென்று சாக்ரடீஸ் கூறுகின்றான் என்கிறார்கள். கடவுள் இல்லை என்று நான் சொல்லவில்லையே. நான் இறையன்பும் நம்பிக்கையும் கொண்டவனாயிற்றே! என்னுடைய அறிவு வளர்ச்சிக்கும் இளைஞர்களை ஈர்த்து என்னுடைய கருத்துக்களைக் கூறி அவர்களை நல்வழிப்படுத்த நான் மேற்கொண்ட முயற்சிக்குக் காரணம் டெல்பி இறைவன் சொன்ன செய்தியாகும். என்னுடைய நண்பன் சேரவான், டெல்பி இறைவனிடம் கேட்ட வினா ஒன்றிற்குச் சாக்ரடீஸை விடச் சிறந்த அறிஞன் எவருமில்லை என்னும் பதில் கிடைத்ததாம். அவன் அதை என்னிடம் கூறினான். அதுகேட்டு நான் வியப்புற்றேன். இறைவன் அருள் வாக்குப் பொய்க்காதே என்று எண்ணி, என்னுடைய அறிவை வளர்த்துக் கொண்டேன்; பின்னர் என்னுடன் வாழும் உங்களையெல்லாம் திருத்த எண்ணி முயன்றேன். அதற்குப் பரிசாக உங்கள் வெறுப்பையும் பகையையும் பெற்றேன்.

"இளைஞர்களை உணர்ந்து கெடுக்கின்றேன் என்றும், புதிய தேவதைகளை உண்டாக்கினேன் என்றும் மெலேதன் கூறினார். நீங்கள் இவைகளை நம்ப வெண்டா. தேவதைகளைப் புதியனவாக நான் உண்டாக்கினேன் என்றால், இறைவன் இல்லை என்று சொன்னேன் என்பது எப்படி உண்மையாகும்? தேவ

தைகளைப் படைத்தேன் என்றால், பரம்பொருளையும் நான் ஒப்புக்கொள்கிறேன் என்பதுதானே பொருள்? இதை அமைதியாக எண்ணிப் பார்த்து முடிவு செய்ய மெலேதனுல் முடியவில்லை. காலச்சக்கரம் இப்படித் தான் பல அறிஞர்களைப் பாமரமக்களின் செயலால் அழித்துவிட்டது. நானும் அந்த அறிஞர்களைப் போலத்தான் அறியாமை மிக்கவர்களது செயலுக்கு இரையாகும் அவலநிலையில் உள்ளேன்.

"சாக்ரடீஸ்!, நீ சொல்வதெல்லாம் சரிதான். உன் உயிருக்கு ஊறு விளைவிக்கும் செயல்களை நீ செய்யாமலிருக்கக் கூடாதா என்று நீங்கள் கேட்க லாம். நீங்கள் கேட்கக் கூடிய அந்த வினா நேர்மை யற்றது என்பதை நீங்கள் உணரவேண்டும். எந்த ஒரு செயலையும் அதைத் தொடங்குவதற்கு முன்னர் அது சரியானதுதானா—பயன்தரத் தக்கதுதானா என் பதை ஆராயவேண்டும். எண்ணித் துணிந்த பின் எடுத்த கருமத்தை எந்த இடையூறு வந்தாலும் முடிக்காமல் விடக்கூடாது. 'நேர்மையல்லாச் செயல் களைச் செய்பவனைக் கொன்று என் உயிரை இழப் பேன்' என்று சொல்பவனே வீரனாவான். மானம் ஒன்றையே நல்லவீரன் உயிராகக் கருதுவான். அறி யாமையும் அதனால் உண்டான செருக்கும் துணையாய் நிற்க அறிவுப்பாதையை அணைத்து மகிழும் எண்ணற்ற மக்களைத் திருத்துவதே கடவுள் எனக்கு இட்டபணி யாகும். ஆண்டவன் ஆணையைத்தான் நான் நிறை வேற்றினேன்; அதனாலேயே உங்கள் வெறுப்பையும் பகையையும் பெற்றேன். எனவே, என் அன்புக்குரிய பெருமக்களே, மரணத்துக்கு நான் அஞ்சமாட்டேன்.

''நீங்கள் என்னை இந்த முறை மன்னித்துவிடுவ தாவும் இனி நான் மக்களைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் என் அளவில் தனித்து வாழவேண்டும் என் றும் கூறுவீர்கள். தொடர்ந்து மக்களைப் பற்றிக் கவலைகொண்டு இளைஞர் உலகோடு உறவு கொண் டால், நான் மீண்டும் விசாரிக்கப்படுவேன் என்றும் விசாரணையின் விளைவு மரண தண்டனையாக முடிய லாம் என்றும் நீங்கள் கூறலாம். மரணத்தைப் பற்றி அஞ்சுபவனுக்கும் இறைவனுடைய ஆணையைப் பற்றிக் கவலையுறுதவனுக்கும்தான் உங்களுடைய அறிவுரைகளும் ஆலோசனைகளும் தேவைப்படும். என் நாட்டு மக்கள்-ஏதென்ஸ் நகரமக்கள் அறிவுடை யவர்களாகவும் நல்லவர்களாவும் வல்லவர்களாக வும் வாழவேண்டும் என்னும் பெருவிருப்பம் எனக் குண்டு. நான் அதற்காக அவர்களைக் கேள்விகள் கேட்டுக் கொண்டுதான் இருப்பேன்; என்னுடைய வினுக்களுக்கு விடையளிக்கத் தெரியாதவர்களை மேலும் மேலும் கேட்டு விடை சொல்லுமாறு செய் வேன்.

''நான் மீண்டும் உங்களையெல்லாம் 'அன்புடைய பெருமக்களே' என்றுதான் அழைக்க விரும்புகிறேன். நான் இதுகாறும் சொன்னவற்றைக் கேட்ட நீங்கள் நன்கு சிந்திக்க வேண்டுகிறேன். நான் குற்றவாளியா என்று உறுதி செய்வதற்கு முன்னர் நான் இறையன்பு மிக்கவன், இறைவன் ஆணைப்படி நடப்பவன் என் பதை நீங்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும். நீங்கள் இந்த அளவில் உறுதி செய்துகொண்ட பின்

னர் எந்தத் தீர்ப்பை எனக்கு வழங்கினுலும் நான் மகிழ்வோடு ஏற்றுக்கொள்வேன்.

"எனக்கு மரண தண்டனைதான் கொடுக்கவேண்டும் என்று வாதித்து வெற்றி பெறுவதில் வாதிகள் மிகுந்த கருத்துடையவராயிருந்தனர். நான் குற்றவாளி என்று உறுதிப்படுத்த நடந்த தேர்தலில் மிகக் குறைந்த வாக்குகளால்தான் நான் குற்றவாளியாக் கப்பட்டேன் என்பதை அறிய வியப்படைகிறேன். தீய செயல்களுக்கும் தீயவர்க்கும் ஆதரவளிப்பதில் நம்முடைய அரசாங்கம் துணையாய் அமைகின்றது. தேரோட்டத்திலும் குதிரையோட்டத்திலும் வென்றவர்களை ஊக்குவித்துப் பரிசுகளும் சிறப்புக்களும் செய்யும் அரசாங்கம், மக்களுடைய நன்மைக்காக உண்மையாகவே பாடுபட்ட எனக்கு இந்தத் தண்டனையை வழங்கியது அறமாகுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். நான் அறிந்தோ—உணர்ந்தோ எவர்க்கும் தீங்கு செய்ததில்லை. இவ்வாறெல்லாம் நான் பேசுவதை வைத்துக்கொண்டு, நான் செருக்குடையவன் என்று நீங்கள் எண்ணிவிட வேண்டா. என் மனச்சான்று என்னைக் குற்றமற்றவன் என்று சொல்கின்றது. அதனுல்தான் என்னுல் மனம் திறந்து பேச முடிகின்றது.

"எனக்குத் தரப்பட்டுள்ள தண்டனையை மாற்றியமைக்க நான் உங்களை வேண்டப் போவதில்லை. மரண தண்டனையை மாற்றியமைக்குமாறு வேண்டி வாழ்நாள் வரைச் சிறையில் வாழ்வோம் என்றும் நான் எண்ணவில்லை. சிறைச்

சாலையின் அதிகாரிகளது அடிமையாகச் சிறையில் வாழ்வதைவிட, வாதிகள் தீர்மானித்ததுபோல நஞ் சுண்டு இறப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன். மரண தண்டனையை மாற்றி நாடு கடத்தும் தண் டனையைச் சாக்ரடீஸுக்குத் தரலாமே என்று உங் களுள் சிலர் நினைக்கலாம். என்னுடைய சொந்த நாட்டு மக்களைத் திருத்த முடியாமல்—அவர்கள் அறியாமையிலும் தீய பண்புகளிலும் சூழ்ந்திருக்கை யில் அவர்களைத் திருத்த முடியாமல்—அவர்களுக்கு நல்வாழ்வுக்குரிய வழி காட்டாமல்—வேற்று நாட்டுக் குச் சென்று அலைந்து திரிந்து உயிர் வாழ நான் விரும்பவில்லை. அன்பைப் பற்றியும் அறத்தைப் பற்றியும் நல்ல பண்புகளைப் பற்றியும் பேசித் தம் மைச் சார்ந்தவர்களைத் திருத்த முடியாதவன் இறப் பதே நல்லது என்று நான் சொல்வேன்.

"அறிவுடைய பெருமக்களே, இன்னும் சில நாட் களிலோ சில ஆண்டுகளிலோ நான் இறந்து விடு வேன். ஆனால் அவசரப் பட்டு எனக்கு மரண தண்டனையைக் கொடுத்து விட்டீர்கள். அவசரப் பட்டு விட்டதால்—மரண தண்டனையைத் தந்து விட்டதால் தேவையற்ற பழியைத் தேடிக் கொண் டீர்கள். 'அறிவுடைய சாக்ரடீஸை—மக்களுடைய நல்வாழ்வுக்காகத் தொண்டாற்றிய சாக்ரடீஸை அநியாயமாய் ஏதென்ஸ் நகர மக்கள் கொன்று விட் டார்கள்,' என்று உலகமெல்லாம் பழி சொல்லும் நிலையை நீங்களாகத் தேடிக் கொண்டீர்கள். இன்றோ நாளையோ நான் எதிர்பார்த்திருந்த விளைவைத்தான்

நீங்கள் இன்று உண்டாக்கி விட்டீர்கள். மரண தண்டனையை அனுபவிக்க இருக்கும் நான் இறுதியாகச் சில சொல்ல விரும்புகிறேன்.

"என்னுடைய செயல்முறைகள் உங்களுக்கு ஊறு விளைவிக்கின்றன என்றெண்ணி என்னை அழித்துவிட முடிவு செய்து விட்டீர்கள். நான் இன்னும் சிறிது நேரத்தில் உங்கள் முடிவின்படி அழிந்து விடுவேன்; உங்கள் எண்ணம் நிறைவேறிவிடும். ஆனால் என்னோடு என்னுடைய கருத்துக்களையும் அழித்துவிட முடியும் என்று எண்ணும் உங்களுடைய எண்ணம் மட்டும் நிறைவேறாது. எனக்குப் பின்னர் என்னைப் போலவே நல்ல தொண்டாற்ற எண்ணற்ற இளைஞர்கள் ஏதென்ஸ் நகரில் தோன்றியுள்ளனர். அவர்கள் எல்லோருடைய செயல் முறைகளையும் அவ்வளவு எளிதில் உங்களால் அடக்கிவிட முடியாது. நல்ல தொண்டுகளை அடக்கு முறைகளைக் கொண்டு அடக்கிவிட முயன்றாலும், காலப்போக்கில் அவை வளர்ந்து சிறக்கும் என்பதை நீங்கள் உணரத் தான் போகிறீர்கள்.

"நான் குற்றவாளியல்லன் என்று கூறிய அன்புடைய சிலர்க்கும் சில சொல்ல விரும்புகிறேன். இந்த இறப்பு என் நன்மைக்காகவே ஏற்பட்டது என்று எண்ணுகிறேன். நல்லன அல்லாதவை நிகழும்போதெல்லாம் என் மனச்சான்று முன்னின்று எனக்கு அறிவிக்கும். நான் என் மனச்சான்றை இறைவனாகவே மதிக்கின்றேன். அந்த மனச்சான்று நான் அறங்கூறவையத்திற்கு வந்தபோதோ உங்கள் முன்னிலையில்

பேசும் இந்த நிலையிலோ என்னைத் தடுக்கவில்லை, இதனால் எனக்கு இந்த மரண தண்டனை நன்மை தருவதாகவே நினைக்கின்றேன்.

"இறப்பு நேரும்போது அச்சம் கொள்ளாமல் இருக்குமாறு உங்களை நான் வேண்டுகிறேன். நல்ல மனமுடையவருக்கு இன்னல் வராது என்பதை நீங்கள் உணரவேண்டும். அறத்தையும் அன்பையும் எனக்குப் பின்பு எவரேனும் போற்றத் தவறினால், அவர்களை நீங்கள் விட்டுவிடக்கூடாது. (ஏன் ? எப்படி ? என்றெல்லாம் கேட்டு, அவர்களுடைய குறைகளை அவர்கள் உணர்ந்து திருந்துமாறு செய்ய வேண்டும்.) **கொடியவர்களை வாழவிடாதீர்கள்.** நேர்மையற்றவர்களை வாழ விடாதீர்கள். இந்த அளவில் நீங்கள் தொண்டு செய்தல்போதும். அதுவே எனக்கு நீங்கள் செய்யும் நன்றியாகும்.

"பெருமக்களே' அன்புடையவர்களே, காலம் கடந்துவிட்டது. நான் இனிப் பேசுவதற்கில்லை. நீங்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து நல்ல தொண்டுகளாற்ற உங்களை நான் வேண்டுகிறேன். அதற்கேற்ற நல்ல மனத்திண்மையையும் வாழ்நாளையும் அளிக்க இறைவனை உங்கட்காக வேண்டுகிறேன். உங்களால் விரும்பப்படாத நான் உங்களை விட்டுப் பிரிந்து செல்ல எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவான். நண்பர்களே, மதிப்பிற்குறியவர்களே. ஏதென்ஸ் நகரத்திற்கு நல்ல தொண்டாற்றக் கூடியவர்களே, எனக்கு விடை கொடுங்கள்."

## 4. சிறையில் உரையாடல்

### கிரிட்டோ

*கிரிட்டோ என்பவர் சாக்ரடீஸின் பழைய நண்பர். இவர் சாக்ரடீஸ் நஞ்சுண்டு இறக்கக்கூடாது என்று விரும்பினார்; சாக்ரடீஸ் நெடுங்காலம் வாழ்ந்து, வளரும் சமுதாய வளர்ச்சிக்குரிய முறைகளில் தொண்டாற்ற வேண்டும் என்று அவாவினார். எனவே கிரிட்டோ, சாக்ரடீஸ் பற்றிய விசாரணை முடிந்த பின்பு சிறையில் அவர் இருந்தபோது சென்று கண்டார்; தம்முடைய எண்ணங்களைக் கூறினார்; தாமும் தம்முடைய நண்பர்களும் படும் துயரத்தைச் சொன்னார்; சாக்ரடீஸின் செல்வ மக்கள் இனித் தம்மைப் பேணி வளர்ப்பவர் இல்லையே என்று கலங்கிய நிலையையும் அவர் உள்ளம் உருகும் நிலையில் கூறினார்; சிறையிலிருந்து தண்டனை நிறைவேற்றப்படும் காலம் நெருங்குவதற்குள் தப்பிச் செல்லுமாறு வேண்டினார்; தெஸ்ஸாலி என்னும் இடத்தில் சென்று எஞ்சிய நாட்களைக் கடக்கலாம் என்றும் ஆலோசனை கூறினார்; சாக்ரடீஸ் தப்பிச் செல்வதற்கும் தொடர்ந்து வாழ்வதற்கும் தம்மாலான உதவிகளைச் செய்யாவிடில் தம்முடைய நண்பர்களும் நல்லறிஞர்களும் தம்மைத் தூற்றுவர் என்றும் எடுத்துரைத்தார்.*

*கிரிட்டோவின் கூற்றுக்களையெல்லாம் கேட்ட பின்பு சாக்ரடீஸ் அவற்றின்படி நடக்க மறுத்து*

விட்டார்; ஏதென்ஸின் குடிமகனாகப் பிறந்து, அதன் சட்டதிட்ட அமைப்பில் பங்கு கொண்டு, நன்மை தீமைகளில் கலந்து மகிழ்ந்த பின்பு அந்நாடு தந்த தண்டனையை ஏற்காமலிருப்பது அறமாகாது என்று கூறினார். சட்டத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு நடக்க வேண்டும் என்று எங்கும் எடுத்துரைத்த தாமே, அதற்கு மாறாகச் சட்ட மன்றம் விதித்த தண்டனையை ஏற்காமல் எவர்க்கும் தெரியாமல் சிறையினின்றும் தப்பிச் செல்வது நேர்மையாகாது என்று கிரிட்டோ மனம் கொள்ளும் வகையில் கூறினார். இறுதியில் கிரிட்டோ சாக்ரடீஸின் விருப்பப்படி விடும் நிலை நேர்ந்தது. இதுகாறும் கண்ட செய்திகளால், சாக்ரடீஸ் விசாரணைக்கும் அவர் இறப்பதற்கும் இடையே, சாக்ரடீஸுக்கும் கிரிட்டோவுக்கும் நிகழ்ந்த உரையாடலே 'கிரிட்டோ' என்னும் பெயரில் அமைந்துள்ளது என்பதை அறியலாம். இனி, சிறையில் நடந்த உரையாடலை இங்குக் காணுவோம்:

**சாக்ரடீஸ்:** கிரிட்டோ, அன்பு நண்பனே, வைகறையில் வந்து விட்டாயே! சிறைக்காவலன் இந்த வேளையில் உன்னை எப்படி உள்ளே விட்டான்?

**கிரிட்டோ:** உன்னைக் காணவும் கண்டு பேசவும்தான் இந்த வைகறையில் வந்துள்ளேன். உன்னைக் காண அடிக்கடி நான் வருவதால் என்னை எளிதாக இங்குள்ளவர்கள் நினைவிற் கொண்டுள்ளனர். அதுமட்டும் அல்லாமல் சிறைக்காவலர்க்குச் சிறிதளவு நன்மையும் நான் செய்துள்ளேன்.

**சாக்ரடீஸ் :** அது கிடக்கட்டும், வந்து நேரமாகியும் உடனே என்னை நீ எழுப்பாமை ஏன்? இப்போதும் நீ ஏதும் பேசாமல் மௌனம் சாதிப்பது ஏன்?

**கிரிட்டோ :** சாக்ரடீஸ், உன்னைக் காண என் மனம் வருந்துகின்றது. அமைதியாகச் சலனமற்று உள்ள உன்னைக் கண்டு என்மனம் வேதனையுற்றது. உன்னை எதிர்நோக்கியுள்ள மரண தண்டனையைப் பற்றி எண்ணுமல், கவலையுருமல், களிப்புடன் நீ இருப்பதைக் காண நான் வியப்படைகின்றேன். அந்த வியப்பு உணர்ச்சிதான் என்னை உடனே பேசாமல் தடுத்துவிட்டது.

**சாக்ரடீஸ் :** கிரிட்டோ, நீ ஏன் வியப்படைய வேண்டும்? நான் என்ன இளைஞு இன்னும் பல காலம் வாழவேண்டும் என்று விரும்புவதற்கு? இறப்பு நெருங்கி விட்டதே என்று வயதாகி விட்ட நான் வருந்திக்கொண்டிருந்தால் உலகம் கைகொட்டிச் சிரியாதோ?

**கிரிட்டோ :** வயதாகி விட்டது என்னும் ஒரே நிலையே மரணத்தைக் கண்டு அஞ்சாத மனத்தை வயதானவர்கட்குக் கொடுப்பதில்லையே, சாக்ரடீஸ்! டெலாலியிலிருந்து கப்பல் நாளை இங்கு வந்து விடும். அது வந்தவுடனே உனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்? ஐயகோ, சாக்ரடீஸ், நாளை உன் வாழ்வு முடிந்துவிடுமே?

**சாக்ரடீஸ் :** அஞ்சாதே கிரிட்டோ, நிச்சயமாக நீ நினைப்பது போல நாளை என் வாழ்வு முடிந்து விடாது. இன்னும் மூன்று நாட்கள் நான் உயி ரோடிருப்பேன். சற்று முன்னே நான் கண்ட கனவில் எழில் மிக்க பெண்ணொருத்தி, 'சாக்ர டீஸ், இன்றிலிருந்து மூன்றும் நாளன்று நீ வேறு லகுக்குச் செல்வாய்' என்று கூறினாள். நான் கேட்கும் நல்வார்த்தைகள் பொய்க்கா. ஆகை யால், இன்று அல்லது நாளையோடு என் வாழ்வு முடிந்து விடாது.

**கிரிட்டோ :** நாளையோடு முடியவில்லையென்றாலும் நாட் கணக்கில் தானே உனது வாழ்க்கையின் இறுதி நிலை உள்ளது! நான் அன்போடு சொல்வது என்னவெனில், நீ விரைந்து இங்கிருந்து சென்று விடவேண்டும் என்பதுதான். இந்த விருப்பம் எனக்கு மட்டும் இல்லை. எனக்கும் என்னுடைய நண்பர்களுக்கும் இன்றுள்ள ஒரே ஆவலும் குறிக்கோளும் என்னவெனில், உன்னை இச் சிறைச்சாலையிலிருந்து தப்புவிப்பதுதான். உன் னோடு வாதாடி என்னால் வெற்றி பெற முடியா தாகையால்தான் அன்பாகக் கேட்கிறேன். உன்னைத் தொடர்ந்து சில காலமேனும் உயி ரோடு வாழும் நிலையில் வைக்கவில்லையெனின், எண்ணற்ற மக்களின் பழிச் சொற்களுக்கு நான் ஆளாவேன். 'கிரிட்டோ' நினைத்திருந்தால் சாக் ரடீஸைக் காப்பாற்றி யிருக்கலாம்' என்றுதான் எல்லோரும் கூறுவர். நண்பன் உயிரைக் காப் பதை விடக் கிரிட்டோ பணத்தைத்தான் பெரி

தாகக் கருதினுன்; என்றும் அவர் கூறிப் பழி தூற்றுவர். இவைகளையெல்லாம் போக்க, சாக்ரடீஸைக் காப்பாற்ற நான் முனைந்தேன். 'அவர் என் வேண்டுகோட்குச் செவி சாய்க்காமல் தம் வாழ்வை அழித்துக் கொண்டார்' என்று சொன்ஞல், என்னைக் கண்டு ஏளனமாக நகைக்காமல் இருக்க மாட்டார்களே! சாக்ரடீஸ், அந்த இழிநிலைகட்கெல்லாம் நான் ஆளாகத்தான் வேண்டுமா?

**சாக்ரடீஸ்:** மக்கள் எதுபற்றித்தான் குறை கூருமல் இருக்கின்ருர்கள்? குறை கூருமல் இருந்துவிட்டால்—அமைதியாகத் தன்னுடைய கடமையைச் செய்துவிட்டால், அது குறை என்றும் இழிவு என்றும் அல்லவா அவர்கள் கருதுகிருர்கள்? எனவே நீ, அவர்கள் சொல்லுவது பற்றியெல்லாம் கவலைப்படாதே. நாம் செய்யும் செயல் அறமானதா — பிறர்க்குப் பயன்தரக் கூடியதா என்றுமட்டும் பார்த்து நடத்தல் போதும்.

**கிரிட்டோ:** போதும். நாம் எவ்வளவுதான் அற வழியில் நடந்து கொண்டாலும், பிறர்க்குப் பயன்படும் வகையில் நடந்துகொண்டாலும் நம்மை வாழவா விடுகிருர்கள்! விரும்பியவர்களை உயர்த்துவது நாகரிகமா? பிடிக்காதவர்களைத் தாழ்த்திப் பேசித் தண்டனையும் வழங்குவதா நாகரிகம்? சாக்ரடீஸ், நாகரிகம் அறியாதவர்களிடையே வாழ்வதைவிட—நாகரிகம் அறியாத

வர்களால் தண்டனை பெறுவதைவிட இங்கிருந்து தப்பிச் சென்று விடுவதே சிறந்தது. உன்னை இச்சிறைச்சாலையிலிருந்து அழைத்துச் செல்வதால் எனக்கோ—என்னைச் சார்ந்தவர்கட்கோ — எங்கள் சொத்துரிமைகட்கோ எவ்விதக் கேடும் உண்டாகாது. தீபஸ் என்னும் பகுதியைச் சேர்ந்த ஸிம்மியாஸும், சீப்ஸ் என்பவரும் உன்னை அழைத்துச் செல்லப் பெருந்தொகையுடன் இங்குக் காத்துள்ளனர். தெஸ்ஸாலிக்குச் சென்று அங்கு அமைதியாக இருக்கலாம். உன்னிடம் நாங்கள் காட்டும் அன்புக்குச் சிறிதும் குறையாத நிலையில் அங்குள்ள மக்கள் உன்னைப் பேணிப்போற்றிக் காப்பார்கள். மேலும் சில சொல்ல விரும்புகிறேன். உன் பிள்ளைகளை ஆளாக்காமல் நீ இறக்கப் போகின்றாய். ''சாக்ரடீஸ் ஊருக்கெல்லாம் அறவுரை கூறினார்; நாடு திருந்த வேண்டும் என்று கூறினார். ஆனால் அவர் வீடு திருந்தவில்லை; மக்கள் கற்கவில்லை. சாக்ரடீஸ் சொல்வீரராகத்தான் விளங்கினார்; அவரிடம் செயலாற்றல் இல்லை'' என்று கூறுவோர் தம் கூற்றுக்களையெல்லாம் கேட்டுக்கொண்டு அமைதியாக இருக்க வேண்டும் அவலச் சூழ்நிலையில் நீ எங்களை விடலாமா? 'தம் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யாத சாக்ரடீஸ் உலகுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர எப்படிச் செய்ய முடியும்?' என்றுதானே பொது மக்கள் கேட்பார்கள். எனவே, சாக்ரடீஸ், நன்கு எண்

ணிப் பார்; எண்ணித் துணி, துணிந்தபின் எண்ணுவோம் என்னும் நிலையே வேண்டா.

**சாக்ரடீஸ் :** கிரிட்டோ, அன்பு நண்பனே, உன்னுடைய உரைகளை யெல்லாம் கேட்டு மகிழ்கின்றேன். எனக்காக உன்னை நீ தியாகம் செய்ய முன் வந்ததைக் கண்டு மகிழ்கின்றேன். உன்னையும் நண்பர்களையும் என்னால் மறக்க முடியாது. உங்கள் எல்லோருடைய அன்புக்கும் நான் மிகவும் கட்டுப்பட்டவன். அன்புக்குக் கட்டுப்பட்டவன் என்பதாலேயே அறமில்லா வழிகளில் செல்வது கூடாதல்லவா? நீயும் உன்னுடைய நண்பர்களும் கூறும் முறைகள் நேர்மையானவையாக இருந்தால் நான் கட்டுப்படுவேன். பகுத்தறிவைத் துணையாகக் கொண்டு எது சரி எது கெடுதி என்றெல்லாம் எண்ணும் நான், இப்போதும் நீ சொல்வதை யெல்லாம் அதே நிலையில் எண்ணிப் பார்க்கப் போகின்றேன்.

அரசாங்கத்தின் ஆணைகட்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று கூறுபவன் நான்; இதுவரையும் அப்படித்தான் கூறிவந்துள்ளேன். இப்போது நான் அதனையெல்லாம் மறந்த நிலையில் உன் சொற்படி இச்சிறைச்சாலையிலிருந்து வெளி வந்து விட்டால், என்னைப்பற்றியும் என்னுடைய அறிவுரைகளைப் பற்றியும் ஏதென்ஸ் நகர மக்கள் என்ன நினைப்பர்? ஏதென்ஸ் நகர மக்களின் விருப்பத்துக்கு மாறாக நான் சிறையிலிருந்து

தப்பிவிட்டால், என் பிள்ளைகட்கும் நண்பர்க்கும் இடையூறு விளைத்தவனுவேன்!

**கிரிட்டோ:** நீ சொல்வது விளங்கவேயில்லை, சாக்ரடீஸ்!

**சாக்ரடீஸ்:** விளங்கக் கூறுகிறேன், கேள், கிரிட்டோ. எதிர்காலத்தில் இன்பமாக இருக்கலாம் என்றெண்ணி நீ சொல்வதுபோல நான் சிறையி லிருந்து வெளிவந்து விடுகிறேன் என்று வைத்துக் கொள்வோம். அப்போது ஏதென்ஸ் அரசாங்கமும் சட்டங்களும் என் முன்வந்து, 'சாக்ரடீஸ், உன்னைக் குடிமகனுகப் பெற்ற தாய கத்துக்கு நீ செய்யும் சிறப்பும் கடமையும் இது தானு?' என்று கேட்டால் நான் என்ன சொல் வேன்! 'இங்கிருந்து தப்பித்துச் சென்ருலும் பிறிதொரு நாடு சென்று வாழத்தானே வேண் டும் சாக்ரடீஸ்? அந்த நாட்டுச் சட்டங்களும், அரசாங்கமும் உன்னை மதித்துத் தம்முடைய குடிகமனுகக் கொள்ளும் என்பதை எப்படி உறுதியாகக் கூறமுடியும். நீ பிறந்த பொன் னுட்டின் சட்டங்களை அவமதித்து விட்டதை அவர்கள் மறந்தா போவார்கள்?' என்று கேட் கப்படுமானுல் நான் என்ன பதில் கூறுவேன்?

**கிரிட்டோ:** தொடர்ந்து சொல். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

**சாக்ரடீஸ்:** 'கண்களை உருட்டிக் காட்டி மிரட்ட எண்ணுதே சாக்ரடீஸ். நேராய்ப் பார்த்து நான்

கேட்பதற்கு விடை கூறு' என்று ஏதென்ஸின் சட்டங்கள் பின்வருமாறு கேட்பதாகக் கொள் வோம்.

'ஏதென்ஸ் நகரையும் நகரில் வாழும் முது மக்களாகிய எங்களையும் பற்றி இழிவாகக் கூறி னையே, எங்கள் மீதுள்ள குற்றம்தான் என்ன என்று சொல். நீ இன்று எங்கள்முன் இருப்பதும் எங்கள் வினாக்கட்கு விடை கூற முற்படுவதும் எங்களால்தான் என்பதை மறந்திராய் அல் லவா?' என்று கேட்டால், நான் என்ன சொல்ல முடியும்? உன் தந்தையும் தாயும் மணந்து கொண்டது இந்த நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டுத்தானே? எனவே, அவர்களின் மக னை நீயும் இந்த நாட்டின் சட்டத்திற்கு உட் பட்டவன்தானே?' என்று கேட்டால், நான் என்ன பதில் சொல்லுவேன். எல்லா வினாக் கட்கும் 'ஆமாம்' என்றுதானே சொல்ல வேண்டும்?

'உன்னை பெற்றவர்கள் உனக்குக் கல்வி கற்பித்தார். குழந்தைகள் கற்க வேண்டும் கல்வியை வரையறுத்துச் சட்டங்கள் செய்து வைத்துள்ள குழுவினரின் செயல் முறைகளில் குற்றங்கள் இருக்குமானால் சொல். நீயும் அந்த விதி முறைகட்கு உட்பட்டுத்தான் கற்றுள்ளாய் என்பதையும், அந்த விதி முறைகளைத் துணை யாகக் கொண்டுதான் உன் தந்தை உனக்கு நுண் கலைகள் பலவற்றைக் கற்பித்தார் என்பதையும்

மறந்து விட்டாயா? இந்த நிலையில் நீ இந்த நாட்டின் குடிமகன் அல்லன், அடிமையுமல்லன் என்று சொன்னால் அது பொருந்துமா? உன்னுடைய பெற்றோர்கள் இந்த நாட்டின் சட்டத்திற்கு உட்பட்ட குடிமக்களாக இருந்தனர். உன்னுடைய தந்தையோ அல்லது உன்னுடைய முதல்வனோ உன்னை அடித்தோ திட்டியோ துன்புறுத்தினால், உனக்கு அவர்களை அடிக்கவோ, திட்டவோ உரிமை உண்டா? உன்னை நாங்கள் அழிக்க எண்ணினால் நீ எங்களை அழிக்க எண்ணுவது சரியா? உண்மைக்கு அடிபணிந்தும் மதிப்பீந்தும் வாழ்கின்றேன் என்று சொல்லிக் கொள்ளும் நீ இவ்வாறெல்லாம் செய்வது சரியென்று ஒப்புக் கொள்ளுகின்றாயா? பெற்றவர்க்குத் தீங்கு நினையாமலும் செய்யாமலும் இருப்பதுபோல், நாட்டிற்கும் தீங்கு நினையாமலும் செய்யாமலும் இருக்க வேண்டும் என்பதை நீ அறிய மாட்டாயா?' கிரிட்டோ, நான் இவ்வினாக்களுக்கு என்ன விடையளிப்பேன்?

**கிரிட்டோ :** நீ சட்டம் கேட்பதாகச் சொல்வதெல்லாம் உண்மை யென்றுதான் தோன்றுகின்றது.

**சாக்ரடீஸ் :** சட்டம் மேலும் என்ன சொல்லும் தெரியுமா? 'சாக்ரடீஸ், நீயே நன்கு எண்ணிப் பார். உன்னை அறிவுடையவன் ஆக்கியது இந்நாடு. உன்னை உரிமையுடைய மனிதனாக வாழும் தகுதியளித்த பெருமை ஏதென்ஸுக்கே உண்டு. நீ

விரும்பும் காலம் வரை இருந்துவிட்டு, அரசாங்கத்தையோ சட்டங்களையோ வெறுக்கும்போது வேற்று நாடுகட்குச் சென்று வாழும் உரிமை உனக்குத் தரப்பட்டுள்ளதல்லவா? ஆனல் வேற்றுநாடுகட்குச் செல்ல விருப்பமில்லாமல், தொடர்ந்து ஏதென்ஸிலேயே இருந்துகொண்டு, ஏதென்ஸ் அரசாங்கம் தரும் தண்டனையை அவமதித்தால், அவமதிப்பவன் பல குற்றங்கட்கு உட்படுகின்றான். தண்டனை அளித்தவர்களது சொல்லையும் சட்டங்களையும் மீறுவதால் குற்றவாளி தன்னுடைய பெற்றோர்களையும் மீறுகிறான் என்பது முதலாம் குற்றச்சாட்டாகும். அவன் கற்று வல்லவன் ஆவதற்குக் காரணமாக விருந்த எங்களையே எதிர்க்கிறான் என்பது இரண்டாம் குற்றச்சாட்டாகும். விதிக்கப்பட்ட தண்டனையை ஏற்றுக்கொண்டபோதும், அத் தண்டனைக்குக் கட்டுப்படாமலும், விதிக்கப் பட்ட தண்டனை முறையற்றது என்பதைத் தெளிவாக்கிக் காட்டாமலும் உள்ளான் என்பது மூன்றும் குற்றக் குறிப்பு. 'தண்டனையை நாங்கள் உன்மீது சுமத்தவில்லை. உனக்கு விதிக்கப்பட்ட தண்டனை இது. நீ இதனை ஏற்க மறுத்தால் உன்னுடைய கூற்றுச் சரியானதே என்பதை விளக்கிக் கூறு. நீ இவ்வளவும் செய்யவில்லையாயின், சாக்ரடீஸ், நீ கடுந்தண்டனைக்கு ஆளாக நேரும். நீ மற்ற எல்லாரைக் காட்டிலும் சில வகைகளில் சிறந்தவனுக நீ உள்ளாய். ஏதென்ஸ் நகரைவிட்டு எந்தக் காரணம் கொண்

டும் நகராதவன் நீ ஒருவன்தான். போர்க் காலத்தில் மட்டும்தான் நீ இந்துமஸ் பிரதேசத் திற்குச் சென்றிருந்தாய். வேறு எப்பொழுதும் நீ வெளிநாடுகட்குச் சென்றதில்லே. நீ எங்கள் ஆட்சிக்கு உட்பட்ட குடிமகனுய் அடங்கித்தான் வாழ்ந்தாய். ஏதென்ஸில்தான் நீ மக்கட் செல் வங்களேப் பெற்றெடுத்தாய். இந்த நாட்டுக் குடி மகனுக இருப்பதாக நீ கூறிய உறுதி மொழிகளே யெல்லாம் மீண்டும் ஒருமுறை எண்ணிப் பார். நீ தந்த உறுதி மொழிகள் எல்லாம் உள்ளத்து உணர்வுகள் இல்லேயா? அவையெல்லாம் வெறும் வாய்ச் சொற்கள்தாமோ? சாக்ரடீஸ், உன்னே நீ உண்மை விளம்பி என்றும், நேர்மை பிறழா தவன் என்றும் சொல்லிக் கொள்ளுகின்ருயே, அதன் இயல்பெல்லாம் இதுதாளு?' என்று சட்டம் கேட்குமாயின், கிரிட்டோ, நாளே என்ன பதில் சொல்வேன்? இவை யெல்லாம் உண்மை என்று ஒப்புக்கொண்டுதானே ஆக வேண்டும்?

**கிரிட்டோ:** ஆமாம், சாக்ரடீஸ், இவற்றை ஒப்புக் கொண்டுதாளுக வேண்டும்.

**சாக்ரடீஸ்:** 'ஏதென்ஸ் அரசாங்கத்தின் சட்டதிட்டங் கட்கு உட்பட்ட குடிமகளுக வாழ்கிறேன் என்று உறுதி கூறிய நீ, எழுபதாண்டுகளாக எண்ணிப் பாராதிருந்து இப்போதுதான் அவைபற்றி எண்ணத் தொடங்கிளுயோ? இதுவரையும் ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டு இப்போது சட்டத்தை மீறத் துணிகின்ருயே! உனக்கு

இந்த நாட்டின் ஆட்சி முறையும் சட்டங்களும் பிடிக்கவில்லையென்றால், உனக்கு விருப்பமான வேற்று நாடுகட்கு நீ சென்றிருக்கலாமே! கால் முடம்பட்டோரும், கண்பார்வை அற்றோரும் கூட ஏதென்ஸைவிட்டுப் பிறநாடுகட்குச் சென்றுள்ளனர். நீ ஒருவன்தான் எங்கும் செல்லாமல் இங்கேயே இருந்துள்ளாய். இப்படியெல்லாம் இருந்துவிட்டு, நீதான் இப்போது இந்த நாட்டின் சட்டங்களை மீறத்துணிந்து விட்டாய். உன்னுடைய செயல் அறம்தானா என்பதை எண்ணிப் பார். அறம் உரைத்த மன்னனாக விளங்கிய நீ, இன்று அந்த அறவுரைகளை மறப்பதேன்?

'நீ அறம் தவறி நடப்பதால் வரும் இழுக்கு உன்னோடு நின்று விடாது. அது உன்னையும் உன்னுடைய நண்பர்களையும் சாரும். நீ இந்த நாட்டை விட்டுவிட்டு எங்குச் சென்றாலும் வாழ்வாய். ஆனால் நீ ஏதென்ஸிலிருந்தது போன்ற உரிமை வாழ்வை எங்கும் எதிர்பார்க்க முடியாது. ஒரு நாடு விதித்த தண்டனையை ஏற்காமல் அவமதித்து விட்டுப் பிறநாடு நாடிச் செல்பவன் அங்கு எடுப்பார் கைப்பிள்ளையாக எல்லார்க்கும் தொண்டனாகத்தான் வாழமுடியும். அந்த இழிந்த வாழ்வையா நீ விரும்புகிறாய்? என் மக்களை முன்னிட்டாவது நான் வாழ வேண்டாமா? 'என் நண்பர்கள் நான் தப்பி வந்தால் எனக்கும் என் மக்களுக்கும் துணையாக

இருப்பதாகக் கூறுகிறார்களே' என்று நீ கூறலாம். ஆனால், சாக்ரடீஸ், உண்மையான நண்பர்கள் நீ எங்கிருந்த போதிலும் உன்னுடைய மக்களைக் காப்பாற்றுவார்கள் என்பதை மறந்து விடாதே.

'நீ இப்பொழுது சட்டம் பற்றியும் அறம் பற்றியும்தான் எண்ணவேண்டும். நீ பிறந்த நாட்டிற்கும் உன்னைப் பெற்றுவளர்த்த பெற்றோர்க்கும் உன்னுடைய நண்பர்க்கும் நீ ஊறு விளைவிப்பவனாக மாறி விடாதே. உன்னுடைய நண்பர்களுடைய உரைகளையெல்லாம் நீ கேளாதே' என்று சட்டம் கூறும். கிரிட்டோ, இதற்கு மேலும் நான் என்ன சொல்வது? ஏதாவது இருந்தால் நீ சொல்லேன்?

**கிரிட்டோ :** சொல்வதற்கு ஒன்றுமில்லை, சாக்ரடீஸ்!

**சாக்ரடீஸ் :** கிரிட்டோ, கவலை கொள்ளாதே. இறைவனுடைய விருப்பத்தை நான் நிறைவேற்று வேண்டாவா? இறைவன் காட்டும் நெறி நல்ல நெறியாகத்தானே இருக்கும். நான் அந்நெறியில் தானே செல்ல வேண்டும்? அப்படி செல்வதுதானே அறமுமாகும்?

# 5. கருத்துரைகள்

சாக்ரடீஸ் கருத்துரைகளைப் பிளேட்டோ எழுதிய பல நூல்களால் நன்கு தெளியலாம். பிளேட்டோ எழுதிய நூல்கள் பலவற்றுள் சாக்ரடீஸே நடுநாயகமாய்த் திகழ்கின்றார். சாக்ரடீஸுடன் பலர் உரையாடும் முறையில் அந்நூல்கள் அமைந்துள்ளன. அவ்வுரையாடல்கள் சாக்ரடீஸின் சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. கொடுங்கோலாட்சி, மக்களாட்சி, குழந்தைகள் வாழ்வு பற்றியும், மக்களுக்குரிய கல்வி முறைகள், மனநிலைகள், அறங்கூற வையங்கள் முதலியவை பற்றியும் சாக்ரடீஸ் கூறியுள்ள கருத்துரைகள் சிந்தனைக்கு விருந்தாய் அமைகின்றன. நாம் அவற்றை இங்குக் காண்போம்.

"உரிமை வேட்கையுடைய மனிதன் ஒருவன் அறிவைப் பெறுவதில் அடிமையாக இருக்கக்கூடாது. உடற்பயிற்சியைக் கட்டாயப் படுத்திக் கற்பிப்பதால் உடலுக்குக் கேடு விளைவதில்லை. ஆனால் அறிவைக் கட்டாயப்படுத்திப் புகுத்தினால், அது நினைவில் நில்லாமற் போகின்றது."

o o o

"மனிதனது மனம் இழிந்த பொருள்களையும் உயர்ந்த பொருள்களையும் விரும்புகின்றது. இந்த இருதிறத்து விருப்பங்கள் அவனைக் கெடுக்கின்றன.

இவ் விருப்பங்கள் அவனுக்குப் போதும் என்ற மன நிலையை உண்டாக்கத் தவறுகின்றன. எனவே, மனி தன் நல்வாழ்வு வாழவேண்டுமாயின்—வாழுங் காலத் தில் அமைதியாக வாழவேண்டுமாயின், ஒரு பொருளை விரும்பவும், வெறுக்கவும் அறிய வேண்டும். அப் போதுதான் நமக்குத் தேவையில்லை—நம்மால் பெற முடியாது என்ற நிலையில் உள்ள பொருள்களை வெறுக்க முடியும். நமக்கு வேண்டும், நம்மால் பெற முடியும் என்ற நிலையில் உள்ள பொருள்களை விரும்ப முடியும்.''

o o o

"ஒருவன் தன்னை நன்ருக உணர வேண்டுமா யின், இரவில் படுக்கப் போகுமுன் அன்று தான் செய்த நல்ல செயல்களைப் பற்றியும் தீய செயல்களைப் பற்றியும் எண்ணிப் பார்க்கவேண்டும். அச்செயல்கள் அறிந்து செய்யப்பட்டனவா — அறியாமல் நேர்ந் தனவா என்பதையும் எண்ண வேண்டும். இவ்வாறு எண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதால், தன்னை நன்ருக உணரும் நிலை அவனுக்கு ஏற்படும். எனவே ஒவ்வொருவரும் உறங்கப் போகுமுன் தம் முடைய அன்ருட செயல்களை எண்ணிப் பார்க்கும் பழக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும்.''

o o o

'கெட்டவர்கள்' என்று பிறரால் தூற்றப்படும் நிலையில் சிலர் இல்லாமலிருக்க வேண்டுமாயின், பின் வருவன பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டும்: "மிகுதி யாகக் கெடுதிகளைச் செய்பவன் பெரிதும் துன்புறு

வான். பிறரைத் துன்புறுத்துபவன் தானும் துன்புறுவான். காலம் அவனுக்கு அந்தப் பாடத்தைக் கற்பிக்கும். காலம் என்னும் மன்னவன் உணர்த்தும் அறிவுரைகளை ஏற்று நடப்பின், மனிதருள் குறையுடையவர்களின் எண்ணிக்கை குறையும்.”

o o o

“ தனிமனிதனைக் குறையுடையவன் என்று சொல்ல முடியாது. அவன் இயற்கையின் சட்டதிட்டங்கட்குத் தன்னையும் அறியாத நிலையில் கட்டுப்பட்டுவிடுகின்றான்; அதனால் சமுதாயத்தில் நெடுங்காலமாக நிலவிவரும் எண்ணற்ற கருத்துக்களை அவன் நம்பி விடுகிறான்; அந்த நம்பிக்கைகளை எண்ணி எண்ணி வாழ்கின்றான். அவனுடைய நம்பிக்கைகள் சிலரால் களவாடப்பட்டு விடுகின்றன. ‘கடவுள் உண்டு’ என்று சொன்னவன் காலப்போக்கில் ‘கடவுள் இல்லை’ என்று சொல்லி விடுகின்றான். இதற்கு என்ன காரணம்? ‘கடவுள் இல்லை’ என்று சொல்பவர்களின் திறமையே காரணமாகும். அந்தத் திறமை அவனுடைய நம்பிக்கையை வென்று விடுகின்றது.”

o o o

“உடல் நலமுடையதாக இருக்க வேண்டும் என்ற எண்ணமும் தற்காப்பு உணர்ச்சியும் தேவையே. சிலர் இவ்விரண்டு நிலைகளையே வாழ்க்கையின் பெரும் பகுதியாகக் கொண்டுள்ளனர். இவர்கள் அடிக்கடி நோய்வாய்ப் படுகின்றனர்;

நடைப்பிணியாளர் ஆகின்றனர். எனவே நோய்களைப் போற்றக் கூடாது. சில வேளைகளில் நமக்கு வரும் பிணிகளைப்பற்றி நாம் எண்ணவும் கூடாது. என்னுடைய நண்பர் ஒருவர் பிணியாளர்க்கு இக்கால மருந்துகளைத் தருவதேயில்லை. அதனால் அவர்க்கு இக்கால மருத்துவ முறைகள் தெரியா என்று பலர் எண்ணுகின்றனர். அவர் இயற்கை முறையிலேயே பிணிகளைப் போக்கி விடுகின்றார்; நீராடும் முறையில் கூடச் சில மாற்றங்களைக் கூறுகின்றார். அவற்றை மேற்கொண்டால் நோய்கள் மறைகின்றன. எனவே, என் வழியினர்க்கும், உலக மக்களுக்கும் நான் சொல்ல விரும்புவது நோய்க்கு இடங் கொடாதீர்கள்; நோய் வந்து விட்டால் அது பற்றியே எண்ணிக் கலங்காதீர்கள் என்பதேயாகும்."

o o o

"நம்மில் பலர் அறங்கூறவையங்களை நாடிச்செல்கின்றனர். அவர்கள் அறங்கூறவையத்தின் வாயிற் படிகளை மிதித்து மீள்வதில் பெருமை கொள்கின்றனர். வழக்கு மன்றத் தொடர்பாகத் தமக்கு எல்லாம் தெரியும் என்று கூறிக் கொள்வதில் அவர்களுக்கு மனநிறைவு ஏற்படுகின்றது. 'எவ்வளவு செலவு ஏற்பட்டாலும் கவலையில்லை. வழக்கு மன்றத்துக்கு வந்துவிடு. பார்த்துக் கொள்ளலாம்' என்று பலர் கூறுவதை நாம் கேட்க முடியும்."

" சட்டமும் மருத்துவமும் சமுதாயத்துக்குத் தேவையே. இவை இரண்டும் கல்வியறிவிற் சிறந்த-ஒழுக்கத்திற் சிறந்த சான்றோரல்லாத பிறர்க்குத்

தேவையாகும். ஆனல் நம்மிடையேயுள்ள அறிஞர் பலர் சட்டத்தையும் மருத்துவரையும் நாடி அலேகின்றனர். அவர்கள் தங்களுடைய அறிவாற்றலேயும், உடலாற்றையும் அறிவதில்லே; அறிய விழைவதுமில்லே! இவற்றை எண்ணும்போது கல்வி முறையிலேயே நான் ஐயப்படுகின்றேன். கற்பிக்கப்படும் கல்வி நிலேக்கு ஏற்பத்தானே மனநிலேயும் வளரும். தம்முடைய அறிவை நம்பாமல் தம்மால் நியமிக்கப் படும் ஒருவருடைய அறிவை நம்பி நாடி அலேயும் மனநிலே, சமுதாயத்தின் சிறப்பில்லா நிலேயை அல்லவா காட்டுகின்றது?"

o o o

"இசை இன்பம் பயக்கும் கலே. இசைக்குக் கட்டுப் படாதவரே இல்லே என்னலாம். இசையைச் சுவைக்கத் தெரிந்து கொள்வதும் ஒரு கலேயாகும். மெல்லோசையைக் கேட்டுச் சுவைக்கும் நிலேயில் பண்பட்டு விட்ட செவி கடின ஓசையைக் கேட்காது. கேட்டாலும் வெறுக்கும். எளிய முறையில் பாடப் படும் இசை செவிக்கு உணவாய் அமைவது போலவே எளிய நல்ல உணவு உடலுக்கு விருந்தாய் அமையும்; நோயில்லாப் பெருவாழ்வை அளிக்கும்."

o o o

"சிறு குழந்தைகளே எதிர்காலப் பெரியவர்கள். ஆதலின், அவர்களே வளர்த்து ஆளாக்கும் பெற்றோர்கள் வளர்ப்பு முறையில் கருத்தாக இருக்க வேண்டும். சிறு வயதிலேயே குழந்தைகட்குச் சமுதாய

வேற்றுமைகளைக் கற்பிக்கக்கூடாது. 'அவனோடு சேராதே; அவனுக்கு ஒன்றும் கொடுக்காதே' என்று சில பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு அறிவுரைகள் நல்குவர். இந்த அறிவுரைகளே அவர்கள் வாழ்க்கையைக் கெடுத்துவிடும்; நாளடை வில் பல வேறுபாடுகளைக் கற்பிக்கும். எனவே, குழந்தைகளை வளர்ப்பவர்கள், எந்தவித வேறுபாட்டு உணர்ச்சியும் காட்டாமல் குழந்தைகளை வளர்க்கப் பழக்க வேண்டும். அப்போதுதான் நல்லதொரு எதிர் காலச் சமுதாயத்தைக் காண முடியும்.

"குழந்தைகட்கு எத்தகைய கதைகளைச் சொல்ல லாம் என்று என்னைச் சிலர் கேட்டார்கள். இறை வன் அன்பே வடிவானவன், அறிவே வடிவானவன். அவன் எளியவரிடத்தும் உண்மை உடையவரிடத் துமே இருப்பான். அவன் யாரையேனும் தண்டிக் கின்றான் என்றால் அவர்கள் நலன் கருதியே அவ்வாறு செய்கின்றான் என்றெல்லாம் கதைகளைக் குழந்தை களுக்குக் கூறலாம். சுருங்கக் கூறின் குழந்தைகளுக்குச் சொல்லப்படும் எந்தக் கதையும் அவர்களை நல்ல நெறியில் கொண்டு செலுத்துவதாய் இருக்க வேண் டும் என்னலாம்."

o o o

"கெடுதி செய்ய வேண்டும் என்று எண்ணுபவன் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'கெடுதி செய் வது கெடுதி' என்பவை அவன் எண்ணிப் பார்க்க வேண்டும். கெடுதி செய்வதைவிடக் கெடுதியை அனுபவிப்பது எவ்வளவு கடினமான செயல்

என்பதை நினைத்துப் பார்ப்பதே தீய செயல்கள் செய்யாமலிருப்பதற்குரிய வழியாகும். எனவே, தனி மனிதன் கெடுதி செய்யவும் வேண்டா; அதனால் பிறர் அதனை அனுபவிக்கும் நிலையை உண்டாக்கவும் வேண்டா."

o o o

"மிக்க செல்வமும் மிக்க வறுமையும் மனிதனுக்குத் தீமை பயப்பனவாகும். செல்வம் படைத்தவன் செலவழிக்க வகையறியாமல் திணறுவான். பின்னவன் பொருள் ஈட்ட வழிவகைகளை ஆராய்வான். மிகுந்த நிலையில் உள்ள செல்வமும் வறுமையும் சமுதாயத்தில் ஒழுக்கம் குறைந்தவர்களையும் திறமையற்றவர்களையும் உண்டர்க்கி விடுகின்றது என்னலாம்."

o o o

"சமுதாயம் நல்ல வளர்ச்சியைப் பெறவேண்டுமாயின் அவரவர் எல்லைக்குரிய கடமைகளைச் செய்ய வேண்டும். அவர்கள் தம்மால் செய்ய முடியாத செயல்களைப் பற்றி எண்ணிக் காலத்தை வீணுக்கக் கூடாது. தமக்கும் தம்மைச் சார்ந்தவர்க்கும் நன்மை தரத்தக்க செயல்களை விரைந்து செய்து முடிப்பின் எண்ணற்ற நல்ல செயல்கள் செய்து முடிக்கப்படும். இங்ஙனம், அவரவர் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்துவரின் அவர்களைக் கொண்ட சமுதாயம் உயர்ந்த சமுதாயமாக விளங்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?"

# III. பிளேட்டோ

## 1. அமைதியற்ற சூழ்நிலை

### மக்கள் நிலை

ஏதென்ஸ் நகரைப் பற்றிய வரலாற்றினைச் சென்ற பகுதியில் கண்டோம். அந்நகர மக்கள் செம்மறியாட்டு மந்தைபோல் உணர்வற்று இருந்தனர். அவசரத்திலும் ஆத்திரத்திலும் அவர்கள் செய்த செயல்கள் அறிவுக்கு அப்பாற்பட்டவையாக இருந்தன. அவர்கள் முரட்டுத்தனமாகவும் ஒழுங்கீனமாகவும் நடந்து கொண்டார்கள்; சொல்லில் வல்லவர்களும் செயலில் வல்லவர்களும் விரும்பியவாறெல்லாம் அவர்களைத் தங்கள் வயப்படுத்திக் கொண்டனர். எடுத்துக் காட்டாக, நிகழ்ச்சியொன்றினைக் காண்போம்.

ரோமாபுரியின் முடிசூடா மன்னனாக விளங்கிய சீசர் சூழ்ச்சிக்காரர்களால் கொல்லப்பட்டான். சீசர் கொல்லப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் கொதிப்படைந்த மக்கள் திரளாகக் கூடினர். சீசரை நேர்மையான சில காரணங்களை முன்னிட்டே கொன்றோம் என்று புருட்டஸ் என்பவன் சொற்பொழிவாற்றினான். இவனுடைய சொற்பொழிவைக் கேட்ட

அளவிலேயே அமைதிபெற்றுச் சீசர் கொல்லப் பட்டது சரியே என்றும் முடிவுக்கு மக்கள் வந்து விட்டனர். பின்னர் அந்தோணி என்பவன் பேசினான். அவன் சீசருடைய நண்பன். சீசர் நல்லியல்புகள் வாய்ந்தவன் என்றும், மக்கள்பால் அன்புடையவன் என்றும், மக்கள் நலனுக்காக விருப்ப ஆவணம் ஒன் றைத் தயாரித்து வைத்துள்ளான் என்றும், இங்ஙனம் சிறந்த ஒரு பேரரசனைப் புரூட்டஸும் அவனைச் சார்ந்தவர்களும் அநியாயமாகக் கொன்றுவிட்டார் கள் என்றும் அந்தோணி பேசியவுடன் மக்கள் கொதிப்படைந்தனர்; 'சீசரைக் கொன்றவர்களைக் கொல்லுங்கள்' என்று குரலெழுப்பிக் கிளம்பினர்; சதிகாரர்தம் இல்லங்களைத் தீக்கு இரையாக்கினர். அப்போது அங்கு ஒருவர் வந்தார். கலகக்காரர்கள் அவரை நிறுத்திப் பெயரைக் கேட்டனர். அவர் தமது பெயர் 'சின்னா' என்று கூறினார். உடனே கலகக்காரர் கள் கொதித்தெழுந்து "சின்னா" சதிகாரன். அவனைக் கொல்லுங்கள்' என்று கூவினர். இதைக் கேட்டதும் நடுங்கியவாறே சின்னா என்பவர் "ஐயோ, நான் சதி காரச் சின்னா அல்ல. நான் ஒரு புலவன். என்னை விட்டுவிடுங்கள்," என்றார். கலகக்காரர்கள் அவ ருடைய கூற்றுக்குச் செவிசாய்க்கவில்லை. அவருள் ஒருவன், 'சிந்திக்க வேண்டா இச் சின்னா யார் என் பது பற்றி. இவன் எந்தச் சின்னாவாக இருந்தால் நமக்கென்ன? இவன் பெயர் சின்னா; அதுபோதும். இவனை அணு அணுவாகக் கிழித்து எறியுங்கள்,' என் றான். அவ்வளவில் புலவர் சின்னா கொல்லப்பட்டார். உண்மை எது என்பதைப் பகுத்துணரும் ஆற்றலற்ற

நிலையில் மக்கள் சமுதாயம் இருந்தது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

## எல்லாம் குறை

மக்கள் நிறைந்த அறிவுடையவர்களாய் இருந்தாற்றான் அவர்களைக்கொண்ட சமுதாயம் சிறப்புடையதாய் விளங்கும். சிறந்த அறிவும் நிறைந்த புலமையும் உடையவர்களே ஆட்சிக்கு உரியவர்கள். இத்தகுதியினைச் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனி மனிதனும் பெறவேண்டும் என்று எண்ணித்தான் சாக்ரடீஸ் முயன்றார். ஆனால் பழையனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் மனமும் பிற்போக்கான இயல்புகளும் கொண்ட மக்களும் ஆட்சியாளரும் சாக்ரடீஸை வாழவிடவில்லை. "உன்னை நீ எண்ணிப்பார்; சிந்திக்கத் தெரிந்துகொள். சிந்தித்திக்கொண்டே இருக்கப் பழகிக்கொள்," என்றெல்லாம் அறிவுரைகள் கூறிய சாக்ரடீஸ் மரண தண்டனை பெற்றார்.

அறங்கூறவையத்திற்கு உறுப்பினர் பொது மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்களின் பெயரில் உள்ள முதல் எழுத்துக்களின் மூலமே உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த விசித்திரமான போக்கு நல்லாட்சிக்கு வழிவகுக்கவில்லை. உண்மையான கட்டுப்பாடுகள் இல்லாமையால் எந்தப்பதவிக்கும் நிலையாக எவரையும் அமர்த்தக் கூடவில்லை. இளைஞர் சமுதாயம் கொண்ட புரட்சிக் கருத்துக்களால் பழைய நம்பிக்கைகளும் மூடக் கருத்துக்களும் மறையத் தொடங்கின. இடைவிடாமல் நடைபெற்ற

போர்களினுல் மக்களுடைய ஆற்றலும் பண்புகளும் குறைந்தன. ஆராய்ச்சி அறிவு கொண்ட இளைஞர்களுக்குக் கடவுள்மீதும் மக்கள்மீதும் நம்பிக்கை குறைந்துவிட்டது. அவர்கள் மூட நம்பிக்கைகளையும் மதச்சடங்குகளையும் அரசியலையும் எள்ளிப்பேசினர். கல்வியறிவற்ற மக்கள் எதனை ஏற்பது எதனை விடுவது என்று புரிந்து கொள்ள முடியாமல் திணறினர். இந்த நிலையில் குடியாட்சி முறை பயன்தரவில்லை.

## கலைகளின் பிறப்பு

எண்ணற்ற சமய நம்பிக்கைகள் மக்களிடையே நிலவின எனினும் அறிவுடைய சான்ருேர்கள் எதிலும் நம்பிக்கை வைக்காமல் மக்களுடைய வளர்ச்சிக்குரிய வழிமுறைகளை ஆராயத்தொடங்கினர்; பல்வேறு நாட்டு விஞ்ஞான முறைகளைக் கற்கலாயினர். நாணய மாற்றின் அடிப்படையில் நாட்டில் **கணிதக் கலை** வளர்ந்தது; திரைகடலோடி வாழ்ந்த நிலையில் **வானசாத்திரக்கலை** வளர்ந்தது. சிந்தனையாளர் கடவுளையும் ஆன்மாவையும் ஆராயத்தொடங்கினர். இதனுல் **தத்துவக்கலை** வளர்ந்தது.

பலகலைகளையும் தன்னுள் கொண்ட சிறந்தவொரு பல்கலைக் கழகத்தை முதன் முதலாகக் கண்ட **பிளேட்டோ** மேற்கூறப்பட்ட சிந்தனையாளருள் ஒருவராவார். இனி, அவரைப் பற்றி அறிவோம்.

# 2. பிளேட்டோ

## பிளேட்டோ

அரிஸ்டோக்ளீஸ் என்பது பிளேட்டோவின் இயற்பெயராகும். இவர் இளமையில் ஆர்வத்துடன் கல்வி கற்ருர். எதனையும் நன்கு ஆராய்ந்த பின்னரே ஏற்கும் மனம் இவர்க்கு இளமை முதலே இருந்தது. ஆசிரியர்களை அடுத்துத் தம் ஐயங்களைக் கூறி நன்மை பெறுவதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தார். இவர் கல்வி கற்ற பின்பு, அப்போது நடைபெற்றுக்கொண்டிருந்த போலப்பனேசியப் போரில் பங்குகொண்டு தொண்டாற்றினர். இவரது தோள்வலிமையைக் கண்டுதான் மக்கள் இவரைப் '**பிளேட்டோ**' என்று அழைத்திருக்க வேண்டும். பிளேட்டோ என்ருல் 'அகலம்' என்று பொருள். காலப்போக்கில் இவருடைய இயற்பெயர் ஏட்டளவில் நின்றுவிட்டது. இவர் தம்முடைய மனச்சான்றுக்கு மாறுபட நடந்ததில்லை; தம்முடைய இருபதாம் வயதிற்குள் அவல நாடகங்கள் பலவற்றை எழுதினர். அரசியலில் பங்கு கொள்ள வேண்டும் என்னும் விழைவு இவருக்கு இளமை முதலே இருந்தது. தாம் எழுதிய நாடகங்களைச் சாக்ரடீஸின் நட்பு ஏற்பட்டதும் அழித்து விட்டார்.

## நல்ல குடும்பம்

பிளேட்டோ கி. மு. 427-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது குடும்பம் ஒரு பல்கலைக் கழகமாய் அமைந்தது. இவர் தந்தையார் பெயர் அரிஸ்டோன்[1] என்பது. தாயாரின் பெயர் பெரிக்டியோன்[2] என்பதாகும். இவருடன் பிறந்தவர் மூவர். கிளாக்கோன்[3] அடிமாண்டஸ்[4] என்னும் இருவரும் சகோதரர்கள். போட்டோன்[5] என்பவள் தங்கையாவாள். போட்டோனுடைய மகன் ஸ்ப்பூஸிப்பஸ்[6] என்பவனே பிளேட்டோவுக்குப் பின்னர் அவருடைய பல்கலைக் கழகத் தலைவனாக விளங்கினான்.

## அரசியல் துறவு

ஏதென்ஸில் நடைபெற்ற மக்களாட்சி முறை மக்களால் விரும்பப்படாமல் இருந்தது. குடியாட்சி பயனற்றது என்றும் குடியாட்சியால் நன்மை தரத் தக்க பெருஞ்செயல்களைச் செய்து முடிக்க முடியாதென்றும் "சிலர் ஆட்சிக் கட்சி"யினர் எதிர்த்தனர். சிலர் ஆட்சிக் கட்சியின் தலைவன் கிரிட்டியர்ஸ் என்பவன். இவன் பிளேட்டோவின் உறவினன்; சாக்ரடீஸின் மாணவனுமாவான். குடியாட்சிக்கு எதிராகப் புரட்சி செய்தவர்களுள் இவனும் ஒருவனாவான்; ஏதென்ஸின் கடற்படை ஸ்பார்ட்டாவின் கடற்படையால் முறியடிக்கப்பட்டபோது இவனுடைய தலைமையில் எதிர்ப்புப்படை ஒன்று கிளம்பியது. ஆனால் தோல்வி ஏற்பட்டது. கிரிட்டியர்ஸ் கொல்லப்பட்டான்.

---

1. Ariston 2. Perictione 3. Glauecon
4. Adeimantus 5. Potone 6. Speusippus

கிரிட்டியர்ஸும் மற்றும் பலரும் தங்கட்குத் துணையாக நிற்குமாறு பிளேட்டோவை வேண்டினர். நாட்டு நலனில் பெருவிருப்பம் கொண்ட பிளேட்டோ, அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றினர். ஆனால் காலப்போக்கில் அறிவுடையவர்கள்-சான்றோர்கள் அரசியலை விரும்பமாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்; அரசியல் துறையில் ஈடுபட்டால்தான் நாட்டுக்கு நன்மைகள் செய்ய முடியும் என்று அது காறும் எண்ணியிருந்த எண்ணத்தை மறந்தார்; அரசியலில் ஈடுபடாமலேயே தனித்த நிலையில் மக்களோடு உறவு கொண்டு நல்ல தொண்டாற்ற முடியும் என்பதை நம்பினர்; அரசியலிலிருந்து வெளியேறிவிட்டார்; ஆயினும் இடைவிடாமல் நாட்டின் நன்மைக்கு உரியனவற்றைப் பற்றிச் சிந்தித்து வெற்றி காணுவதில் ஈடுபட்டார்.

இவர் தம்முடைய 18-ஆம் வயதுமுதல் 23-ஆம் வயது வரையிலும் ஏறத்தாழ ஐந்தாண்டுக் காலம் பொலப்பனேசியப் போரில் ஏதென்ஸின் குதிரை வீரராகப் பணியாற்றி இராணுவப் பாராட்டுப் பெற்றார் என்பதும் நாட்டுப் பற்றுடையவராகத் திகழ்ந்தார் என்பதும் இங்குக் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

## பன்னிரண்டு ஆண்டுகள்

பிளேட்டோ தம் ஆசிரியர் சாக்ரடீஸிடம் பெருவிருப்பமும் பெருமதிப்பும் கொண்டவர். சாக்ரடீஸ் சிறையிலிருந்தபோது அவரைக் காப்பாற்ற முயன்றதாகப் பிளேட்டோவின்மீது குற்றம் சாட்டப்பட்டது. அதனல் அவர் ஏதென்ஸை விட்டுக்

கடத்தப்பட்டார். ஏதென்ஸ் நகரம் நாடுகடத்த ஆணை பிறப்பித்தது. அது பிளேட்டோவின் நெடுநாளைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளத் துணையா யமைந்தது. அவரது நெடுநாளைய விருப்பம் யாது? உலக நாடுகளைச் சுற்றிக் காணவேண்டும் என்பதே அவர் விருப்பமாகும். அவர் அந்நாடுகளின் அரசியல் அமைப்பினை அறிய விரும்பினர்; (கி. மு. 399-ஆம் ஆண்டில் ஏதென்ஸை விட்டுப் புறப்பட்டார்; இத்தாலி, சிசிலி, எகிப்து, வடஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றார். சிசிலியிலும், இத்தாலியிலும் பித்தாகோரஸ் அறிஞர் குழு பொதுவுடைமைக் கொள்கையுடன் தனி இனமாக வாழ்வதைக் கண்டார்; ஒவ்வொரு நாட்டின் சமயக் கொள்கைகளையும் மக்கள் பண்பாட்டையும் அறிந்தார்; சுற்றுப்பயணக் கலை பயன் தரத்தக்க வொன்ருகும் என்பதை உணர்ந்தார்; அரசியலில் ஈடுபட்டுள்ளவருள் தேர்ந்த அனுபவம் பெற்றவர்களும் பிற பொதுத் துறைகளில் வல்லவர்களும் ஒன்றுகூடிக் குடியரசு முறையில் நாட்டை ஆள வேண்டும் எனத் துணிந்தார்.

பிளேட்டோ பன்னிரண்டு ஆண்டுகள் வெளிநாடுகளில் இருந்தார்; கி. மு. 387-இல் ஏதென்ஸ் திரும்பினர்.

## முதல் பல்கலைக் கழகம

பல கலைகளைப் பற்றிய அறிவை உண்டாக்கும் இடம் பல்கலைக் கழகம் என்பது. பல கலைகளை மாணவர்க்குக் கற்பித்து அவர்களை வல்லவராக்கப் பிளேட்டோ விரும்பினர்; அதனல் மிகுந்த பரப்புள்ள

நிலத்தை வாங்கினர்; எழில் மிக்க கட்டடங்கள் அமைத்தார்; பலகலைகளைக் கற்பித்தார்; கணிதக் கலை, வான சாத்திரக்கலை, தத்துவக்கலை முதலிய பல கலைகளை மாணவர்கள் ஆர்வமுடன் கற்கத் துணை யாய் அமைந்தார்; அப்பல்கலைக் கழகத்திற்கு "அக டெமி" என்று பெயரிட்டார். பிளேட்டோ தாம் அமைத்த பல்கலைக் கழகத்தில் ஏறத்தாழ நாற்ப தாண்டுகள் பணியாற்றினர்.

மாணவர்கள் அவரைப் பெரிதும் விரும்பினர். தாம் கற்றவற்றையெல்லாம் மாணவர்கள் உள்ளங் களில் திணிக்கவேண்டும் அல்லது தாம் கற்றவற்றை யெல்லாம் கூறி, மாணவர்கள் தம்முடைய பேராற் றலைக் கண்டு போற்றவேண்டும் என்று எண்ணி முயலும் ஆசிரியர்களைக் காட்டிலும், மாணவர்கள் மனம் அறிந்து அவர்கள் நிலைக்கேற்ப கற்பிப்பவனே "நல்லாசிரியன்" என்று அறிஞர் கூறுவர். பிளேட்டோ அறிஞர் கருதும் நல்லாசிரியர் இலக்கணம் கொண்டு திகழ்ந்தார். தனி ஒரு மாணவனது குறையைக் கண்டு அவன் கல்லாது திறமையில்லாமல் இருப்பதற் குரிய காரணத்தை ஆராய்ந்து அதைப் போக்குவதற் குரிய முறைகளை எண்ணிச் செயல்பட்டார். அவர் மேற்கொண்ட முயற்சிகள் சிலரைச் சிறப்பித்தன; பலர்பால் அன்பு கொண்ட நிலையில் எண்ணற்ற மாணவர்களை உருவாக்கின. சுருங்கக் கூறின், பிளேட்டோ மாணவர்களின் நண்பராகவும், அவர் களின் ஆசிரியராகவும் பகுத்துணரும் திறமை கொண்டவராகவும் தத்துவப் பேரறிஞராகவும் விளங்கினர்

## சிசிலியில் சில அனுபவங்கள்

சிசிலியின் மேற்பகுதியில் கிரேக்கர்கள் குடியேறி வாழ்ந்தனர். அங்கு அரசனுக இருந்தவன் டையோனி சையஸ் என்பவன். இவன் மக்கள் வெறுக்கும் கொடுங்கோலனுக விளங்கினுன். இவன் மைத்துனன் டியோன் பிளேட்டோவுக்கு நண்பன்.

டியோன் என்பவன் தன் மைத்துனனது கொடுங் கோலாட்சி ஒழிவதற்குரிய வழிகளைப்பற்றி அறிய லாஞன். பிளேட்டோவின் அறிவுரைகள் துணையாய் அமையுமென எண்ணினுன். அவருடைய உதவியை நாடினுன். நாடு நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று விரும்பிய பிளேட்டோ டியோனுக்குப் பல நல்ல கருத்துக்களைக் கூறினுன். டியோன் அவரையே கொண்டு மன்னனுடைய மனத்தை மாற்ற முயன்றுன்.

பிளேட்டோ அதற்கு இசைந்தார்; மன்னனேடு பழகினுர்; வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் நல்லறிவு புகட்டினுர்; 'அறம் பிறழாமல் வாழவேண்டும், மக் களுக்காகத்தான் மன்னவன்' என்று அறிவுரை கூறி னுர்; எங்கும் அமைதியாக இருக்கும் இன்ப நிலையைக் காணுவதில் இன்பம் பிறக்க முடியும் என்று தெளிவு படக் கூறினுர். 'மனித உடல் அழிந்த பின்னும் அவர்தம் நற்செயல்கள் நிலைபெற்று நிற்கும். உலகம் அவற்றையும், அவற்றைச் செய்தவனையும் மறவாமல் எண்ணிப் போற்றும். அரசன் குடிகள் நலத்தையே கருதவேண்டும் என்றும், தான், தன் மனைவி மக்கள்

என்றெல்லாம் எண்ணிச் சுயநலவாழ்வு வாழக் கூடாது' என்றும் பிளேட்டோ வற்புறுத்திக் கூறி வந்தார்.

'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' அன்ருே? மன்னன் மனம் ஓரளவு மாறியது. அந்த அளவுக்குச் சில நற்செயல்களும் நாட்டில் இடம்பெற்றன. நாளடைவில் மன்னன் மனம் மாறியது. அறமே உணராத அவன் பிளோட்டோவின் அறம் பற்றிய அறிவுரைகளையெல்லாம் கேட்க விரும்பினுன்; போற்றினுன். ஆயினும், பழையபடி அவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டான். அவர்பால் வெறுப்புக்கொண்டான். ஏதென்ஸின் வளர்ச்சியில் அழுக்காறு கொண்ட ஸ்பார்ட்டாவை வென்றவர்களிடம் பிளேட்டோவை ஒப்படைத்தான்; அடிமையாக விற்று விடுமாறு ஆணை பிறப்பித்தான்; அவர்கள் பிளேட்டோவை எஜினு[1] தீவிற்கு அழைத்துச் சென்று அடிமைச் சந்தையில் நிற்க வைத்து விலைகூறினர். அடிமைச் சந்தையில் விலைகூறி விற்கப்பட்ட பிளேட்டோவை அவருடைய மாணவன் ஒருவன் பணத்தைக் கொடுத்து விட்டு மீட்டான்; ஏதென்ஸுக்கு அவரை அனுப்பினுன். அப்போது பிளேட்டோவுக்கு வயது நாற்பது.

## மீண்டும் தோல்வி

டையோனிஸியஸ் இறந்த பின்பு அவன் மகன் இரண்டாவது டையோனிஸியஸ் என்னும் பெயருடன் அரசனுனுன். இவன் தந்தையைப் போலில்லாமல் மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்று

1. Aegina

எண்ணினான். இவனுடைய எண்ணத்தை வளர்த்துத் துணைசெய்ய டியோன் என்பவன் முயன்றான்; தோல்வி கண்டான். எனவே, அவன் பிளேட்டோவை வேண்டி அழைத்தான். பிளேட்டோ டியோனுடைய வேண்டுகோளை ஏற்றுச் சென்றார். இரண்டாண்டுகள் அங்குத் தங்கி இருந்தார்; மன்னன் மனத்தை நல்வழிப் படுத்த முயன்றார்; தந்தையைப் போல இவனும் மனம் மாறி நற்றொண்டு செய்வதைக் கண்டு மகிழ்ந்தார். ஆயின், மன்னனுடைய மனமாற்றம் நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து இருக்கவில்லை. அமைச்சர்களும், பிற காவலர்களும் மன்னன் மனத்தை மாற்றினர். நல்ல செய்திகளைவிடத் தீய செய்திகள்தாம் விரைவில் வலுப்பெறும் என்பதற்கேற்ப பிளேட்டோவின் நல்லுரைகளுக்கெதிராக தீயவர்களால் சொல்லப்பட்ட உரைகள் மன்னன் மனத்தில் பதிந்தன. அவன் பிளேட்டோவை வெறுத்தான்; டியோனைச் சினந்தான்; அவனை நாடு கடத்துமாறு ஆணையிட்டான். பிளேட்டோ மனம் வருந்தினர்; நல்ல எண்ணங்களும், நல்ல செயல்களும் நிலையான ஆட்சி பெறுமற் போகின்றனவே என்று எண்ணி வருந்தினர்; ஏதென்ஸுக்குத் திரும்பினர்.

<u>அப்போது அவருக்கு வயது அறுபது.</u>

டியோன் என்பவன் பிளேட்டோவின் பல்கலைக் கழகத்து உறுப்பினனாய் இருந்தான். காலப்போக்கில் டையோனிஸியஸிடம் டியோன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொண்டான். மன்னனது மனம் மாறுவதற்கு அது துணையாய் அமைந்தது.

ஸைரக்யூஸ் செல்லுமாறும் எவ்வாறேனும் அங்கு நல்லதொரு சமுதாயத்தை அமைக்குமாறும் டியோன் பிளேட்டோவை வேண்டினான். அதனால் பிளேட்டோ கி. மு.362.இல் மீண்டும் ஸைரக்யூஸுக்குச் சென்றார். அப்போது அவருக்கு வயது அறுபத்தைந்து.

## நீண்ட உறக்கம்

பிளேட்டோவின் பல்கலைக் கழக மாணவர்களுக்குள் ஒருவருக்குத் திருமணம் நடக்க விருந்தது. தம்முடைய திருமணத்துக்கு வந்திருந்து நல் வாழ்த்துக் கூறவேண்டும் என்று அம்மாணவர் பிளேட்டோவை வேண்டினார். மாணவரது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகப் பிளேட்டோ அத்திருமணத்துக்குச் சென்றார்.

அவர் வயது மிகுதியின் காரணமாக மிகத் தளர்ந்திருந்தார். ஓய்வில்லாமல், அலுப்பில்லாது அலை மோதும் கடல்போலப் பல்கலைக் கழக வளர்ச்சிக்கும் மாணவர்தம் புலமைக்கும் தம் உழைப்பைப் செலவிட்டதால் அவர் தொடர்ந்து தம் கடமைகளை செய்ய முடியவில்லை. இந்நிலையில்தான் அவர் தம்முடைய மாணவர் திருமணத்துக்குச் சென்றார்.

திருமணம் சிறப்பாக நடைபெற்றது. எங்கும் பொங்கும் மகிழ்ச்சி நிலவியது. பிளேட்டோ மிகக் களைத்து விட்டார். அப்படியே சோர்ந்து அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார். நெடுநேரமாகியும் ஆசிரியர், மகிழ்ச்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமையைக் கண்ட மாணவர்கள் விரைந்து நாற்காலியில் உறங்கியிருந்த பிளேட்டோவை எழுப்ப முயன்றனர்.

அப்போதுதான் அவர்கள் தங்கள் ஆசிரியர் இறந்து விட்டார் என்பதை உணர்ந்தனர்; மனம் பொருது கதறி அழுதனர்.

பிளேட்டோவின் ' எதிர்பாராத இந்த மறைவு இளைஞர் உலகைப் பெரிதும் தாக்கியது. அறிஞர் உலகுக்கு அது பேரிழப்பாய் அமைந்தது. எங்கும் அமைதி காண வேண்டும்—எல்லோரும் நல்வாழ்வு வாழ்வதைக் காணவேண்டும் என்று துடிப்புடன் செயல் புரிந்த பிளேட்டோவின் உடல் அவரது பல்கலைக் கழகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது

அப்போது அவருக்கு வயது எண்பது.

## அவர் திருப்பெயர் வாழ்க

பிளேட்டோ மணம் ஆகாதவர்; எல்லோரிடமும் அன்பாகப் பழகியவர்; பலகலைகளில் வல்ல பேரறிஞர்; தம்முடைய ஆசிரியர்பால் அன்பும் மதிப்பும் கொண்டு அவருடைய நெறியில் சென்றவர்; இடைவிடாது மக்கள் நல்வாழ்வையே கருதித் தொண்டாற்றியவர்; தம்முடைய சமுதாயப் பணிகளில் ஓரளவு ' வெற்றி கண்டவர்; கல்விப் பணிகளில் நல்ல வெற்றி கண்டவர்; சொல்லால் சொல்லிப் பிறரை உணர்ந்து கொள்ளச் செய்ய முடியாத நிலையில் அமைந்த பல பொருள்கள் குறித்து எண்ணற்ற நூல்களை எழுதியவர்; நன்றி மறவாமல் தம்முடைய ஆசிரியரை அப்படியே படம் பிடித்துக் காட்டிய பெருமைகொண்டவர்; பிளேட்டோவினால்தான் பேரறிஞர் சாக்ரடீஸை நாம் உணர முடிகின்றது.

இலக்கியத் துறையிலும், கல்வித் துறையிலும், சமுதாயத் துறையிலும், நல்ல தொண்டுகள் புரிந்த சிந்தனைச் செல்வர் பிளேட்டோ கி. மு. 347-இல் மறைந்தார். ஆயினும் இவரது திருப்பெயர் உலகம் உள்ளளவும் நிலைபெற்று வாழும்.

# 3. எழுத்துத் தொண்டு

## எழுத்து வடிவில் கருத்துக்குவியல்

*தாமே நேரடியாகக் கூறி வெற்றி காண முடியாத எண்ணற்ற கருத்துக்களைப் பிளேட்டோ நூல் வடிவில் அமைத்துத் தந்துள்ளார் என்பது முன்னர்க் கூறப்பட்டதன்றோ? பிளோட்டோவின் கருத்துக் குவியல்கள்* **ஐம்பத்தாறு நூல்களாக** *உருக்கொண்டன. மொழி பற்றியும், கவிதை பற்றியும், தத்துவம் பற்றியும், கல்விமுறைகள் பற்றியும், பகுத்றியும் திறன் பற்றியும், மக்கள் உறவு பற்றியும் அவருடைய நூல்கள் தெளிவாக ஆராய்கின்றன. பிளேட்டோவின் உரையாடல் நூல்கள்—நாடகமுறையில் அமைந்தவை அனைத்தும் பிற்காலத்தில் தோன்றிய தத்துவக் கலை வளர்ச்சிக்கு முன்னுரையாக அமைந்தன என்று அறிஞர் கூறுவர். குடியரசு, ஆத்மீகக் காதல், சட்டங்கள், அப்பாலஜி, கிரிட்டோ, டிமெயாஸ், கிரிட்டியாஸ் என்பன அவருடைய நூல்களுள் சிலவாகும் கிரிட்டியாஸ் என்னும் நூலில், கவிஞர்களைப் பற்றியும் கூறியுள்ளார். பேரறிஞர் பிளேட்டோவின் நூல்களைப் படிக்க வேண்டுமென்றால் அவரோடு— அவருடைய கருத்துக்களோடு இயைந்து கற்கும் முறையைக் கற்கவேண்டும். அப்போதுதான் அவரு*

டைய சிறந்த மன இயலை நாம் நன்குணர முடியும். பிளேட்டோவின் கருத்துக்களும் அப்போதுதான் சிறந்த பயனைத் தரும். இனி, நாம், அவருடைய நூல்களில் உள்ள உயர்ந்த கருத்துக்களுள் சிலவற்றைக் காண்போம்:

## நூலைக் கற்கும் முறை

எந்த ஓர் ஆசிரியர் எழுதிய நூலாயினும் நூல் தோன்றிய காலம், ஆசிரியர் வாழ்ந்த சமுதாய அமைப்பு முறை என்னும் இரண்டையும் மனத்துட் கொண்டு கற்க முயலவேண்டும். மனம்போன போக்கில் நூலைப் படித்து முடிப்பது பொழுதுபோக்கப் பயன்படுமே தவிர, அறிவு வளர்ச்சிக்குத் துணையாய் அமையாது. ஆசிரியர் உள்ளத்தோடு இயைந்து கற்றால்தான் அவருடைய படைப்புக்களை நாம் உள்ளவாறு உணர முடியும்.

## தத்துவ நூல்கள்

பிளேட்டோவின் தத்துவ அறிவை விளக்குவனவாய் பாயடோ, தியாடெட்டஸ், பாயட்ரஸ் என்னும் மூன்று நூல்களும் அமைந்துள்ளன. இயற்கை மதமே சிறந்தது என்றும் இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்வே இன்பம் பயக்கும் என்றும் பிளேட்டோ தத்துவ வாழ்வின் உயர்நிலையைப் பற்றிக் கூறுகையில் கூறுகின்றார்; நிலம்-வானம், மனிதத் தன்மை-தெய்வத்தன்மை, உடல்-உயிர், இப்பிறவி-மறுபிறவி பற்றியெல்லாம் தம்முடைய நூல்களில் தெளிவுபட ஆராய்ந்துள்ளார்.

உயிரைப் பற்றிய செய்திகள் **பாயடோ** என்னும் நூலில் பேசப்படுகின்றன. (சாக்ரடீஸ் தம் இறப்பிற்கு முன்னால் கூறிய பல உயர்ந்த கருத்துக்களே இந் நூலில் இடம் பெற்றுள்ளன. "தத்துவ அறிவுடைய வன் தற்கொலை செய்துகொள்ள மாட்டான். ஆனால் அவன் மரணத்தைக் கண்டு அஞ்சவும் மாட்டான். மனிதனுக்குச் சிறையாக இருப்பது உலக வாழ்க்கை அரங்கம்தான். அவனுடைய உடல் உயிர்க்குரிய சிறை யாக உள்ளது. உயிரை உடலாகிய சிறையிலிருந்து விடுபடச் செய்வதுதான் தத்துவ ஞானமாகும். மனிதனுடைய பண்பும் சிறப்பும் அவனுடைய அச் சம், கவலை, காமம், பிணி முதலிய பலவற்றால் அழிந்து விடுகின்றன. இவற்றையெல்லாம் விட்டுவிட்டு உண் மையான பண்பையும் அறிவையும் பெற்றாலொழிய மனிதன் தீய விளைவுகளிலிருந்து விடுபட முடியாது") என்பன போன்ற அரிய கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

கடவுளையும் மனிதனையும் இணைத்து ஆராய்ச்சி செய்யும் நூல் **தியாட்டெட்டஸ்** எனப்படும். கடவுளு டைய தன்மைகளையெல்லாம் கூறி, அவற்றைப் பெறு பவனே சிறந்தவனாவான் என்பது பிளேட்டோவின் கொள்கையாகும். அந்நூலில் இக்கருத்துப் பற்றி யுள்ளதொரு பகுதியைக் காண்போம்: "கடவுள் தூய்மையானவர்; மெய்யறிவுடையவர்; அறம் பிறழா தவர். மனிதன் கடவுள் தன்மை பெறவேண்டு மாயின், இறைவனுடைய தன்மைகளான தூய்மை நிலை, மெய்யறிவு, அறம் பிறழா நிலை முதலியவற்றைப் பெறவேண்டும். மனிதனிடம் இருவகைப் பண்புகள்

உள்ளன. அவற்றுள் ஒன்று தெய்வீகத் தன்மை. மற்றொன்று தெய்வீகமற்ற தன்மை. தெய்வீகத் தன்மை கொண்டவன் நல்ல பண்புகளின் உறைவிடமாகத் திகழ்வான்; அவன் தன்னைப் போலவே பிறரும் வாழவேண்டும் என்று எண்ணுவான்; தன்னைச் சார்ந்துள்ள மக்களிடம் அன்பும் இரக்கமும் கொண்டு ஒழுகுவான்; தான் வாழவேண்டும், தன் உயிர் வாழ வேண்டும், தன் நாடு வாழவேண்டும் என்று எண்ணுவான். இத்தன்மைகள் இல்லாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று ஒழுகும் தன்மைதான் தெய்வீகமற்ற தன்மையாகும். எனவே, மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பெறும் சிறப்புநிலை பெறவேண்டுமாயின், தெய்வீகத் தன்மைகள் உடையவனாகவே இருக்கவேண்டும். அவனால்தான் நாடும் மொழியும் சமுதாயமும் நலம் பெறமுடியும்.”

பிளேட்டோ அறிவையும் அழகையும் பற்றி ஆராயும் நூல் **பாயட்ரஸ்** எனப்படும். அவர் பிறவிகளைப் பற்றியும் இந்நூலில் ஆராய்ந்து ஒப்பிட்டுக் காணுகின்றார். அழகு துன்பம் தரத்தக்க ஒன்று என்பது பிளேட்டோவின் கருத்து. “அழகு உலக மக்களைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் கொண்டது. ஆனால் அழகின் புறத்தோற்றத்தை மட்டும் கண்டு மயக்கம் கொள்பவன் எண்ணற்ற இன்னல்கட்கு ஆளாக நேரிடும். அழகைக் காண்பவன் அதனைப் போற்ற அறிய வேண்டும். அவனே அதன் வளர்ச்சிக்குரிய வழிவகைகளை மேற்கொள்வான்’ என்று பிளேட்டோ இந்நூலிற் கூறுகின்றார்.

(பிளேட்டோவின் தத்துவ நூல்களுள் பரம் பொருள் உண்மை பற்றியும், ஆன்மாவின் நிலைமை பற்றியும் நிறைந்த கருத்துக்கள் அடங்கியிருக்கும். பாதிரியார்களின் உள்ளங்களைப் பிளேட்டோவின் தத்துவக் கருத்துக்கள் கொள்ளைகொண்டன. அவருடைய கருத்துக்களுள் பல விஞ்ஞான வளர்ச்சிக்குத் துணையாய் அமைந்தன. அவை, **ஸ்பென்ஸர், ஷெல்லி** போன்ற பிற்காலக் கவிஞர் உள்ளங்களையும் ஈர்த்தன. மேனுட்டுச் சிந்தனையாளர்கள் பலரது வளர்ச்சிக்கும், நிலைத்த தொண்டுக்கும் பிளேட்டோவின் நூல்கள் தக்க துணையாய் அமைந்தன என்னல் தவருகாது.)

## "சிம்போசியம்"

(பிளேட்டோ எழுதிய நூல்களுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படும் சிறப்புடையது 'சிம்போசியம்' என்னும் பெயருடைய நூலாகும். சிம்போசியம் என்பதற்குக் 'கூடிக் களித்தல்' என்றும் 'ஆத்மீகக் காதல்' என்றும் பொருள் கூறுவர்.) இந் நூல் ஒரு கவிஞருடைய மாளிகையில், நண்பருடைய விருந்துடன் தொடங்குகின்றது. நகைச்சுவையாளர், மருத்துவர், அரசியல் தலைவர், இலக்கிய அறிஞர் ஆகியோரும் மற்றும் இருவரும் கூடி நடத்தும் உரையாடல் ஒன்றின் முழுவுருவமாக இந்நூல் அமைந்துள்ளது.

காதல், மனிதத் தன்மையையும் கடவுள் தன்மையையும் ஒன்றுகப் பிணைக்கும் ஆற்றல் கொண்டது. நல்ல ஒன்றை நிலையாகக் கைக்கொள்ள விரும்புவதே காதலின் இயல்பாகும். இதன் உண்மையைக் காத

லன்-காதலியரிடம் காணலாம். அவ்வாறே அடிய வர்-ஆண்டவனிடமும் காணலாம். இருதிறத்திலும் பொதுத்தன்மையாக அன்பு அமைகின்றது. இவை போன்ற கருத்துக்களைக் கொண்ட இந்நூல் தத்துவ வல்லுநர்கட்கும், ஆராய்ச்சியாளர்க்கும், துறவியர்க் கும் பெரிதும் பயன்பட்டது; இன்றும் பயன்பட்டு வருகிறது;

"சட்டங்கள்"

சட்டங்கள் என்னும் நூலில் பிளேட்டோ பல தலைப்புக்களில் சிறந்த பல கருத்துக்களைக் கூறியுள் ளார். அவற்றுள் சிலவற்றைப் பற்றி இங்கு அறி வோம்.

"குழந்தைகளே நாட்டின் வருங்கால வீரர்கள். எனவே, அவர்கட்குக் கல்வி கற்பிக்க வேண்டும். அவர்களுக்கு விருப்பமான நிலையில், மனம் அறிந்து, விரும்பும் பாடங்களைக் கற்பிக்க வேண்டும். அவர்கள் விரும்பும் பாடங்களை ஊக்கமுடன் கற்பித்தால், நாள டைவில் அந்தத் துறையில் அவர்கள் வல்லுநர்களாக விளங்க முடியும். இத் தொடக்கக் கல்வியினைக், கதை களைச் சொல்வது போன்று கற்பிக்கவேண்டும். எதனை யும் கட்டாயப்படுத்திச் சொல்லிக்கொடுக்கக் கூடாது. கட்டாயப் படுத்திச் சொல்லித் தரப்படும் செய்திகள் எல்லாம் குழந்தைகளின் மனத்தில் தங்குவதில்லை. குழந்தைகளைப் பெற்றோர்களின் சொத்தாகக் கருதப் படும் நிலைமாறி அரசாங்கத்தின் சொத்தாகக் கருதப்படும் நிலை வருதல் வேண்டும்."

## கல்வியின் இன்றியமையாமை

எந்த ஒரு நாட்டில் பெரும்பாலான மக்கள் கற்றவர்களாக இருக்கின்ருர்களோ - அந்த நாடே சிறந்த நாடு என்று உலக அரங்கில் மதிக்கப்படும். ஒவ்வொரு நாட்டு இலக்கியங்களும் கல்வியின் சிறப்பை வற்புறுத்தியுள்ளன. மனித வாழ்வின் உயிர் நாடியாக இருந்த கல்வியைக் கற்க எண்ணற்ற போராட்டங்கட்கு உலக நாடுகளின் பல சமுதாயங்கள் ஈடுபட்டன. தமிழகக் கவிஞரான திருவள்ளுவர், அதிவீரராம பாண்டியர், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முதலானேர் கல்வியின் சிறப்புப் பற்றியும் இன்றியமையாமை பற்றியும் தெளிவாகக் கூறியுள்ளனர்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று பின்வருமாறு கல்வியின் சிறப்பைக் கூறுகின்றது:

"ஒரு குடியில் பிறந்த பலருள்ளும் கற்றவனே சிறப்புடையவனுகக் கருதப்படுவான். அரசனும் குடும்பத்து மக்களுள் மூத்தவனே அழைக்காமல், அவருள் கற்று வல்லவனேயே அழைத்துப் பேசுவான். தன்னுடைய மக்கள்தாம் என்ருலும், தாயின் மனமும் கற்றவனேயே பெரிதும் நாடும். எனவே, ஒவ்வொருவரும் எப்பாடு பட்டேனும் கற்கவேண்டும்."

இக்கல்வி பற்றிப் பிளேட்டோ கூறுவதைக் காண்போம்: "கல்வியை உரிய காலத்தில் கற்காமல், காலத்தைப் பகட்டான ஆடம்பரங்களில் செலவிடுபவன்

முடவனுகக் கருதப்படுவான். உரிய காலத்தில் கற்று, கற்ற கல்வியின் மூலம் தெளிந்த கருத்துக்களைப் பெறுபவன் முதுமை வந்துற்ற போதும் நிலை கலங்கா மனமுடையவனுக இருப்பான். எல்லோரும் கல்வி கற்க வேண்டுமாயின்—நோயாளிகளையும் ஆண்மையற்றவர்களையும் உடலுரம் இல்லாதவர்களை யும் பெருத நாடாக ஒன்று விளங்கவேண்டுமாயின் அந் நாட்டிலுள்ள எல்லோர்க்கும் கட்டாய இலவசக் கல்வி கற்பிக்க வேண்டும்; அவர்களுக்கு நல்ல உடற் பயிற்சி அளித்து உடற்குறை இல்லாதவராகச் செய்ய வேண்டும்; நோயற்றவரும், ஆண்மையாளரும், உட லுரம் வாய்ந்தவருமான குடிகளிடமிருந்தே சிறந்த அரசியல் அமைதல் கூடும். தந்தை செய்த தொழிலைத் மகன் செய்யவேண்டும் என்று சொல்லும் எந்நாடும் உலக நாடுகளில் ஒன்ருக வாழமுடியாது. அதனுல் சாதிகள் மிகுதியாகும்; வழக்குகள் உண்டாகும்; நாடே இடுகாடாகும்.

"பெண்கள் கல்வியறிவு உடையவர்களாய் விளங்க வேண்டும். அவர்கள் கல்வியற்றவர்களாய் இருப்பின், அவர்களுடைய குழந்தைகள் அறிவுடைய வர்களாய் இருத்தல் இயலாது. நாட்டைப் பற்றியும், மொழியைப் பற்றியும், உலகைப் பற்றியும் ஒவ்வொரு பெண்ணும் அறிந்திருத்தல்வேண்டும். ஆண்மகனுக்கு அளிக்கும் கல்வியே பெண்ணுக்கும் உரியது. ஆண் களைப் போலவே பெண்களும் படைப் பயிற்சியும், நாடு காவற் (போலீசுப்) பயிற்சியும் பெறுதல் வேண் டும். அப்போதுதான் நாட்டில் தற்காப்பு நிலைத் திருக்கும். இவ்விரண்டு பயிற்சிகளும் இல்லாத

பெண்களைக் கொண்ட நாடு ஐம்பது விழுக்காட்டளவே பயனுள்ள நாடாகக் கருதப்படும்”

## குடியரசு[1]

‘ரீபப்ளிக்’ அல்லது குடியரசு என்னும் நூல் உலகப் பெருமக்களால் வியந்து போற்றப்படுவதாகும். அரசியலறிவு பெற விரும்புவோரெல்லாம் இந்நூலை ஆவலுடனும் கருத்துடனும் கற்பர்.

“ஐவகை அரசியல் அமைப்புக்கள் ஆட்சி முறையில் உண்டு. அவையாவன:—1. தம்மாட்சி[2], அல்லது மேன்மக்களுடைய ஆட்சி[3], 2. படை ஆட்சி[4], 3. சிலர் ஆட்சி[5] அல்லது செல்வராட்சி[6], 4. குடியாட்சி[7], 5. வல்லாட்சி[8] அல்லது கொடுங்கோலாட்சி[9] என்பனவாகும்.

**தம்மாட்சி**யின் தோற்றத்துக்குக் காரணம் யாது? கடவுள் தங்களை மக்கள் கூட்டத்தை ஆள்வதற்கென்றே படைத்துள்ளார் என்ற எண்ணமே தம்மாட்சி தோன்றுவதற்குக் காரணமாயமைகின்றது, நாட்டை ஆள்வதற்குரிய எல்லாப் பண்புகளையும் கொண்ட அவர்கள் நல்ல மனமும் நேர்மை நெறியும் கொள்ளாதவராதலின் அவர்களுடைய ஆட்சிமுறை பயனற்றுப் போகின்றது. அதிகார வெறி, சுயநலம், பேராசை போன்ற தீய பண்புகளால் அவர்கள் உந்

---

1. Republic 2. Autocracy 3. Aristocracy.
4. Military State 5. Oligarchy 6. Plutocracy
7. Democracy 8. Despotism 9. Tyranny

தப்படுவதால் எந்தவொரு நல்ல செயலும் செய்ய அவர்களால் முடிவதில்லை. தங்கள் பரம்பரையினரே தொடர்ந்து ஆளவேண்டும் என்னும் வரம்பு முறையை அமைத்துக்கொள்வதால் அவர்கள் ஆட்சி முறை பயனற்றதாகி விட்டது. மக்களுடைய தொகை மிகுதிப்படத் தம்மாட்சி அரசாங்கம் வலுக் குன்றும்.

அறிவுக்குச் சிறப்பிடம் இல்லாமல், உணர்ச் சிக்கே சிறப்பிடம் தந்து நடைபெற்ற ஆட்சியே **படை ஆட்சி** எனப்பட்டது. இந்த ஆட்சியில் அறிவு ஒதுக் கப்பட்டது; கலை புறக்கணிக்கப்பட்டது; உடல் வளர்ச்சிக்கும் உணர்ச்சிக்குமே இடம் தரப்பட்டது. அதனால், மனிதப் பண்பாடு அழிந்தது. எனவே, படை ஆட்சி முறையும் தம்மாட்சி போலவே மக்க ளால் விரும்பப்படாமல் அழிந்து போகும்.

**செல்வராட்சி** என்பது செல்வம், சொத்துடைமை என்னும் இரண்டையும் அடிப்படையாகக் கொண் டது. செல்வர்களே நாட்டாட்சியை மேற்கொள்ளு வதால் நாட்டில் உள்ள பாட்டாளி இனத்தினர் குறைகள் கவனிக்கப்படாமல் போயிற்று; செல் வர்க்கே மேலும் மேலும் உயர வாய்ப்பளிக்கப் பட்டது; சாதாரண நிலையிலிருந்தவர்கள் பொதுத் துறைகளில் சிறப்பிடம் பெறுதவாறு ஒதுக்கப்பட்ட னர். அத்தகைய புறக்கணிப்பு அவர்களுக்கு வெறுப்பை அளித்தது. பொதுமக்களின் மனம் வருந்த வருந்தச் செல்வம் படைத்தோரின் ஆட்சி நாளடைவில் அழிந்து போகும்.

**குடியாட்சி** என்பது யாது? நாட்டாட்சியில் யாரும் எந்தப் பொறுப்பையும் ஏற்கலாம் என்னும் உரிமையுடன் விளங்குவதுதான் குடியாட்சி. இந்த ஆட்சி முறை சிறப்புடையதுதான் என்ருலும், சில வேளைகளில் பயன்தராமலும் போகும். இதற்குக் காரணம் என்னவெனில், ஆட்சிப் பீடத்தில் அமர இருப்போரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய பொது மக்களில் பெரும்பாலோர்க்குக் கல்வியறிவில்லாமையேயாகும். கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் பொறுப்புணர்ச்சியும் இல்லாதோரைக் கொண்ட ஆட்சி முறை அவலமாகி விடும். ஆட்சிப் பீடத்தில் அமர்பவர்கள் தங்களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொள்வதிலும் பதவியை உறுதி செய்து கொள்வதிலுமே காலத்தைச் செலுத்துவார்கள். அதனுல், பிற துறைகளில் கருத்தையும் மனத்தையும் செலவிடுவதால், அவர்கள் பொது மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாதவராகின்றனர். தங்களைப் பற்றியே பெரிதும் எண்ணி எண்ணிக் காலத்தைச் செலவிடுவோரைக் கொண்ட அரசாங்கம் மக்களுக்குப் பல வகைகளில் இன்னல் தருவதாக அமையும். அவ்வாட்சியினர் மக்கள் நலனைக் கருதார்; மக்களால் தாங்கமுடியாத வரிகளை விதிப்பர்; உலக அரங்கில் பல நெருக்கடிகளை உண்டாக்கிவிட்டு ஓய்வு கொள்வர். இந்த நிலையிலேயே குடியாட்சி முறை தொடர்ந்து செல்லுமானுல் அது மக்களால் வெறுக்கப்பட்டு அழிந்து போகும்.

# அமுதமொழிகள்

## வழிபாட்டின் சிறப்பு

"உலகில் உள்ள மக்கள் ஒவ்வொருவரும் தங்களை அறிவுடையவர்கள் என்று கூறி வியந்து கொள்வதை நாம் காணலாம். அவர்களை அடுத்து நாம் அவர்தம் ஆற்றலை உணர முயல்வோமாயின், அவர்தம் நடிப்பை உணரலாம். தங்களைத் தாங்களே வியந்து அதனால் தங்கள் வாழ்வையே ஏமாற்றிக் கொள்ளும் எண்ணிறந்தோரை நாம் காணலாம். அறிஞர் என்பவர் யாவர்? உண்மையை ஆராய எண்ணி அதற்குரிய செயல்முறைகளை மேற்கொள்பவரையே அறிஞர் என்னலாம். கடவுளுக்குப் பலி முதலிய காணிக்கைகளைக் கொடுத்து நம் வசமாக்கி விடலாம் என்று எண்ணுவது அறியாமையாகும். கடவுள் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றி வாழ்வதையே சிலர் வாழ்வாகக் கொண்டுள்ளனர். அத்தகையோர் தங்கள் வாழ்க்கை முறையையோ மனப்போக்கையோ மாற்றிக் கொள்ளல் வேண்டும். அவர்கள் அறியாமை மிகுந்தவர்கள் என்றும் வாழும் வழியைச் சரிவர உணராதவர்கள் என்றுமே கூறவேண்டும்.

"உலகில் நடைபெற்றுவரும் நன்மைக்கும் தீமைக்கும் இடைப்பட்ட போராட்டங்களைத் தெய்வங்கள்

நடுவு நிலையுடன் கவனிப்பதாகத் தெரிகிறது. (**அறம், அமைதி, அறிவு** என்னும் முப்பெரும் பண்புகள் மனித வாழ்வின் உயர்ந்த பண்புகளாகும்.) அவன் வாழ்வின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்த இயல்புகள் தாம் யாவை? அவை நேர்மையின்மை, செருக்கு, இயற்கைக்கு முரணான போக்கு என்பவையே யாகும்.

"கடவுளுடைய அன்புக்கு உரியவனாக ஒருவன் விளங்கவேண்டுமாயின், அவன் வழிபாட்டில் கருத்துடையவனாக இருக்க வேண்டும். **வழிபாடு** ஒன்றின் மூலமாகத்தான் மன அமைதியையும் ஒருமையையும் பெற முடியும். வழிபாடுதான் மனிதனுடைய 'யான்' 'எனது' என்னும் செருக்கைப் போக்குகின்றது. அவன் இறைவனோடு இரண்டறக் கலக்க வழிபாடே துணை செய்கின்றது."

## கலைகள்

**கலை** என்பது அளவும் பொருத்தமும் தன்னுள் அடக்கி நிற்பது. கலை, உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது; உள்ளத்தைத் தன்பால் ஈர்ப்பது. கலையாற்றல் உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படலாம்; கண்ணையும் கருத்தையும் தன்பால் ஈர்க்கும் கட்டடமாகவும் கண்ணைக் கவரும் ஓவியமாகவும், சிற்பமாகவும், பிறவாகவும் தோன்றலாம். பழைய கற்கால மனிதன் தான் வாழ்ந்த குகைகளின் பாறைகளின் மீது ஓவியங்கள் தீட்டினான். அவனுடைய உள்ளத்திலிருந்து எழுந்த கலை உணர்வே அவனை ஓவியப் புலவனாக்கியதென்னலாம். சிறிதளவு மரப்பட்டையைச்

சீவி, சீவப்பட்ட இடத்தில் எழில் மிக்க இறைவன் திருவுருவைச் செதுக்குகின்ருன் கல்லாத மகன் ஒரு வன். இங்ஙனம், மனிதனுள் இருக்கும் கலையாற்றலே பல வடிவங்களில் வெளிப்படுகின்றது.

அறிஞர், கலைகளை அறுபத்துநான்கு வகையாகப் பிரித்துள்ளனர். அவை யாவை? அவை: 1. ஆடல், 2. பாடல், 3. இசைக்கருவிகள், 4. வீணை-தமரு வாத்தியம், 5. ஓவியம், 6. கவிதை, 7. நிகண்டு, 8. யாப்பு, 9. அணியிலக்கணம், 10. நாடகம் ஆடுதல், 11. செய்யுளின் ஓரடியைக் கொண்டு மற்ற அடிகளை நிரப்பிச் செய்யுள் செய்தல், 12. போட்டியில் ஒருவர் சொல்லும் செய்யுளின் இறுதி எழுத்தில் தொடங்கும் வேருெரு செய்யுளைச் சொல்லுதல், 13. புதிர்போல் அமைந்த பாக்களைச் செய்தல், 14. எளிதில் ஒலிக்க முடியாத கடினம் அமைந்த பாக்களைப் படித்தல், 15. மறை பொருளாகச் செய்யுளில் பொருள்களை அமைக்கும் புதிர்வகை, 16. பிறரை ஏமாற்றுவதற்கான செய்யுள் செய்தல், 17. பல நாட்டு மொழிகளைக் கற்றல், 18. கீழோர் மொழிகளை அறிதல், 19. நூல்களை அழகாகவும் தெளிவாகவும் கற்றல், 20. முன்பு படிக்காத நூலை ஒருவருடன் கூடிப்படிக்கும் திறமை. 21. மனத்தில் ஒரு செய்யுளை வைத்துக்கொண்டு சில குறிப்புக்களை மட்டும் ஒருவர் தர, மற்றவர் அச் செய்யுளைச் சொல்லுதல், 22. மனப்பாடம் செய்வதற்குரிய முறைகள், 23. மனையடி சாத்திரம், 24. தச்சுக்கலை, 25. பருவங்களின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்பத் தரையை மாற்றி அமைத்துக் கொள்வது, 26. தோட்டக்கலை, 27. அரிசி, பூ முதலியவற்ருல் ஆன

கோலங்கள், 28 பலவகைத் தின்பண்டங்களைத் தயாரிப்பது, 29. பலவகைக் குடிநீர்களைத் தயாரிப்பது, 30. நூல் நெசவும் தையலும், 31. பிரம்பு பின்னல், 32. பூ வேலைகள், 33. மாலை கட்டுதல், 34. தலைக் கொண்டை முடிச்சு அலங்காரங்கள். 35. உடை அலங்காரம், 36. காதணிகள், 37. வாசனைப் பொருள்கள், 38. நகைகள், 39. உடம்பு பிடிப்பது, தலைமயிரைக் கோதி விடுவது, 40. உதட்டிற்கு வண்ணம் தீட்டுவது, முகம் முதலிய உறுப்புக்களுக்கு ஏற்ப மணநிறப் பெர்டிகளைப் பயன்படுத்துதல், 41. இலைகளில் தன் எண்ணத்தைத் தெரிவிக்கும் ஓவியங்களைத் தீட்டி அவற்றைக் காதற்செய்தி அனுப்பப் பயன்படுத்துதல், 42-43. ஆண்களும் பெண்களும் சேர்ந்து நீராடும் பொழுது விளையாட்டாக நீரில் மிருதங்கம் போல் ஒலிகளைக் கிளப்பும் கலைகள் இரண்டு, 44-47. படுக்கை தயாரிப்பது முதல் இன்புற்றிருப்பதற்கு உதவியான கலைகள், 48. உலோகம், நாணயம், இரத்தினங்கள் இவற்றை மதிப்பிடுவது, 49. இந்திரசாலம், 50. பொருள்களைக் கையில் மறைப்பது, 51. பொருள்களைத் துணியில் கொண்டு மறைப்பது, 52. இரசவாதம், 53. உலோகம். மணிகள் இருக்கும் நிலத்தைக் கண்டறிவது, 54. சகுன அறிவு, 55. எந்திரங்களைச் செய்வது, 56. வீட்டில் கிளி, மைனா முதலியவற்றைப் பேசப் பழக்குவது, 57. சூதாட்டம், 58. சொக்கட்டான், 59. ஆடு, கோழி முதலியவற்றைச் சண்டையிடச் செய்வது, 60. பொம்மைகளைக் கொண்டு குழந்தைகளுக்கு உரிய விளையாட்டுக்களைச் செய்து காட்டுவது, 61. கயிற்றைக் கொண்டு விளையாடுவது,

62. நல்ல நடத்தைக்குரிய பயிற்சிகள், 63. யானை யேற்றம், குதிரையேற்றம் முதலியன, 64. படைப் பயிற்சியும் வேற்படைப் பயிற்சியும்[1] என்பனவாகும்.

நாம் கண்ட அறுபத்துநான்கு கலைகளுள் ஒன்றான 'இசைக்கலை'யைப் பற்றிப் பிளேட்டோ கூறுவதைக் காண்போம்:

"மனிதனுடைய மனத்துக்கு மகிழ்ச்சியை அளிப்பது இசைக்கலை. அது அவனுடைய மனத்தைத் துன்ப நிலையிலிருந்து மீட்டு இன்ப நிலையாக இசைவிக்கும் ஆற்றலுடையது. இசை என்பதற்கு இசைவிப்பது என்பது பொருள். 'குழந்தை இசையை அறிந்த நிலையிலேயே பிறக்கின்றது. இறக்கும்போதும் இசையைக் கேட்ட நிலையிலேயே இறக்கின்றது' என்று அறிஞர் கூறுவர். நல்ல அறிவுடையவர்களையும் சிறந்த பண்பாடு கொண்டவர்களையும் மகிழ்விக்கச் செய்வது தான் இசை.

"உரைநடையை விட மக்கள் மனத்தைக் கவரக் கூடிய ஆற்றல் கவிதைக்குத்தான் உண்டு. கவிதையில் கற்பனையும் பொருந்தியிருக்கவேண்டும். கவிதையில் சொல் பற்றியோ ஓசை பற்றியோ நாம் கவலைப்படக் கூடாது. சிறந்த கருத்துத்தான் கவிதையின் உயிர் நாடியாக இருக்கவேண்டும் என்னும் கருத்து எல்லோர்க்கும் இருக்க வேண்டும்."

## நல்லன வளர்க

"கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நெடுங் கதைகள் ஆகிய எல்லாம் மக்கள் வாழ்வில் ஒருவகைப்

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி--3. பக்கம் 339..349

புத்துணர்வை அளிக்க வல்லன. உண்மையை ஓரளவு துணையாகக் கொண்டு கற்பனையைப் பெரும்பாலும் கொண்டு எழுதப்படுவனவே சிறுகதைகள். கதைகளில் வரும் உறுப்பினர்தம் வளர்ச்சி எழுதுவோரின் மனநிலைக்கும் அவர் இருக்கும் சமுதாயச் சூழ்நிலைக்கும் ஏற்ப இருக்கும். சமுதாயச் சீர்திருத்தங்கள், பொருளாதாரச் சூழ்நிலைகள், அன்றாட வாழ்வின் போராட்ட நிலைகள் முதலியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு கதைகள் அமையுமாயின், அவற்றால் நன்மை உண்டாகும். கட்டுரைகளால் பெரும்பயன் விளையும். உணர்ச்சி மிக்க நிலையில் எதுகைமோனைகளைப் பயன்படுத்தி எழுதினால் படிப்பவர்க்கு விறுவிறுப்பு உண்டாகும்; படிப்பவர் மனம் அதில் ஈடுபாடு கொள்ளும்; ஆசிரியர் விரும்பிய அன்பும் அறமும் விளையும்.”

## கட்டுப்பாடு வேண்டும்

பெரும்புலவர்களால் எழுதப்படும் எல்லாக் காவியங்களும் நாடகங்களும் கதைகளும் அரசாங்கத்தின் பார்வைக்கு வரவேண்டும் என்று பிளேட்டோ விரும்பினார். அரசாங்கத் தணிக்கைக் குழுவினர் அவற்றை ஆழ்ந்து படித்துத், தள்ள வேண்டுவனவற்றைத் தள்ளியும், நல்லனவற்றைச் சேர்த்தும் இசைவு வழங்க வேண்டும் என்றும் பின்னரே அந்நூல்கள் பொதுமக்கள் முன்பு வைக்கப்பட வேண்டும் என்றும் அவர் விரும்பினார். ஹோமர் என்னும் பெருங்கவிஞர் உள்ளிட்ட பல பெருங்கவிஞர்கள் கடவுளர்களுடைய பிறப்புக்களையெல்லாம் எழுத்துவடிவில் அமைத்தனர்.

மனித இயல்புக்கு அப்பாற்பட்ட தன்மைகளையெல்லாம் மனிதத் தன்மையெனக் கூறிக் காவியம் எழுதினர். இங்ஙனம் கற்றுவல்ல நல்லவர்களால் எழுதப்படும் நூல்கள் வளரும் சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்களது உள்ளங்களைப் பாழ்படுத்திவிடும் என்று பிளேட்டோ கூறினர்.

நல்லன-அல்லன என்பதை அறிந்து-ஆராய்ந்து, நல்லன மட்டுமே மக்கள் கற்கும் நிலையில் செய்யத் தணிக்கைக்குழு என்று ஒன்று இருக்கவேண்டுவது இன்றியமையாதது என்று அவர் கருதினர்.

## நல்ல சுவை

நல்ல சுவை **நகைச்சுவை.** சுவைகள் எட்டு வகைப்படும். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. சுவைகள் எட்டனுள் அவலமும் நகையும் சிறந்தன. அறிஞர் நகைச்சுவையை அறிவு வளர்ச்சிக்குப் பயன் படுத்த வேண்டும் என்பர்.

நல்ல கருத்துக்களைக் கேட்பவர் உள்ளங்களில் தங்குமாறு கூறுவதுதான் உண்மையான நகைச்சுவையாகும் என்பார் பிளேட்டோ. அவர் பல கருத்துக்களை நகைச்சுவையோடு கூறியுள்ளார். ஏதேனும், ஒன்றைக் கண்டித்துக் கூறவேண்டும் என்ருலும், அவர் அக்கண்டிப்பில் நகைச்சுவையைக் கலக்கத் தவறியதில்லை. அவர் மருத்துவ முறையை நகைச்சுவையோடு கண்டித்துள்ள முறையைக் காண்போம்:

"நம்முடைய மருத்துவர்கள் நோய்களைப் போற்றுகின்றார்கள். அவர்கள் நோய்களைப் போக்குகின்றவர்களாக இருக்க வேண்டும். ஆனால் புதிய புதிய பெயர்களிட்டு நோய்களைப் போற்றித்தான் அவர்கள் வளர்க்கின்றார்கள். அந்த அளவில்தான் நம்முடைய மருத்துவ நாகரிகம் வளர்ந்துள்ளது.

"மனிதன் நோயில்லாமல் வாழத் தெரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு தெரிந்து கொள்ளாதவனுக்கு மருத்துவ உதவி செய்வதனால், அவனுக்கோ நாட்டிற்கோ நன்மை விளையாது. நம்மில் பலர் நேர்மையைப் பற்றியே எப்போதும் எண்ணுகின்றனர்; இது தவறாகும். இதனால் நோயில்லாதவனும் எளிதில் நோயாளியாக முடியும். உடல் நலத்துக்குத் தேவையான அளவு கருத்துச் செலுத்துதல் போதும். அதற்கு மிகுதியாகச் செலுத்தினால் தீமைகள்தான் எஞ்சும். அளவுக்கு மிகுதியான கருத்து அவனுடைய சிந்தனைக்கும் தொழிலுக்கும் துன்பத்தையே கொடுக்கும்.

"சட்டங்கள் எவற்றிற்கு இருக்கவேண்டும் என்ற வரன்முறையே இல்லாமல் போய்விட்டது. அரசினர் சாதாரணமானவற்றிற்கெல்லாம் சட்டம் இயற்றத் தொடங்கிவிட்டார்கள். அறிவுடையவர்கள் இவ்வாறு செய்கின்றார்கள் என்பதைக் கொண்டே அவர்களை நாம் குறைவாக மதிப்பிடக் கூடாது," என்று பிளேட்டோ நகைச்சுவையாகச் சட்டங்கள் செய்வோரின் மனநிலையையும் செயலையும் கண்டிக்கின்றார்."

"கல்வி நாட்டில் உள்ள ஒவ்வொருவர்க்கும் உரிய பொதுச் சொத்தாகும். கல்வியைக் கற்காதவர் அறியாமையில் ஆழ்ந்து விடுகின்றனர். அவர்களால் நாட்டின் வளர்ச்சிக்குரிய துறைகளில் நன்மைகள் விளைவதில்லை. எனவே, எல்லோரும் கற்கவேண்டும். கற்றவர் கல்லாதவர்க்கு இந்த நல்லெண்ணத்தை உண்டாக்க வேண்டும்; நாட்டில் கல்லாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முயலவேண்டும்."

"பலர் உண்மை இன்பம் எது என்பதை அறியாமலே இன்பத்தை நாடி அலைந்து அதனைப் பெறமுடியாமல் துன்புறுகின்றனர். இன்பத்தின் இயல்பையும் அதனைப் பெறத்தகும் முறைகளையும் பற்றி எண்ணுமல், இன்பம் பெறவேண்டும் என்று எண்ணுபவர்கள் எப்படி அதனைப் பெறமுடியும்? **(அறிவு, அநுபவம், இயற்கை)** என்னும் மூன்றுமே இன்பம் இன்னது என்பதை உறுதிப்படுத்தவல்லவை என்பதை அறிபவர்கள்தாம் உண்மையான இன்பத்தைப் பெறமுடியும்."

"சமுதாயத்தில் ஒருவரிடம் ஒருவர் எப்படிப் பழகவேண்டும் என்பதை அறிய வேண்டுவது இன்றியமையாதவொரு கலையாகும். நம்முடன் ஏற்ற நிலையில் இருப்பவர்களிடம் நாம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்; நமக்குக் கீழ்ப்பட்டவர்களிடம் மிக்க நேர்மையுடன் நடந்துகொள்வது பாராட்டத் தக்கதாகும். அப்போதுதான் நாம் அவர்களை நம் நிலைக்குக் கொண்டு வருகின்றேம் என்பது உண்மையாகும்."

“அரசாங்கத்துக்குரிய கடமைகள் பலவாக இருக்கலாம். அக்கடமைகளுள் தலையாயது என்று சொல்லத்தகும் சிறப்புடையது, மக்களுக்குப் புலனடக்கமும் நல்லறிவும் கல்வியும் ஏற்படுத்துவதேயாகும்.”

“பிற நாடுகளைப் போல நாமும் முன்னேற்றமடைய வேண்டும் என்று ஒவ்வொரு நாட்டரசாங்கமும் எண்ண வேண்டும். அயல்நாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்யும் நாடு, உள்நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்யுமளவில் முன்னேற வேண்டும் என்று எண்ண வேண்டும். உலகமே எண்ணங்களின் கூட்டமைப்புத்தான் என்றும் கூறலாம். எண்ணமே வாழ்க்கையின் வெற்றிக்குரிய அடிப்படைகளுள் ஒன்றாகும். ஆதலாற்றான் ஒன்றைப்பற்றி எண்ணும்போது நன்றாக ஆராய்ந்து எண்ணவேண்டும்; எண்ணித் துணிய வேண்டும்; அவ்வாறு எண்ணித் துணிந்த பின்பு அச்செயலில் பின் வாங்குதல் கூடாது.”

“ஒரு நாட்டில் இன்பம் நிலைத்திருக்க என்ன வழி என்பதைப்பற்றி நாம் எண்ண வேண்டும். நாட்டு இன்பத்துக்கு அடிப்படையாய் இருப்பவர்கள் நாட்டு மக்கள். எனவே, அவர்கள் பொறுப்புள்ளவர்களாக இருக்கவேண்டும். உடலின் இன்ப துன்பங்களை உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்பும் அநுபவிப்பது போலவே நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் அந்நாட்டு இன்ப துன்பங்களை ஒரே அளவில் ஏற்கும் மனமுடையவர்களாய் இருக்கவேண்டும். அப்போதுதான் அந்நாட்டில் எல்லையற்ற இன்பம் நிலவும்.”

"ஆண்கள் மட்டும் கற்று வல்லவர்களாகிவிட்டால் போதாது. அவர்களைப் போலவே அவர் தம் மனைவியரும் ஒத்த கல்வியும் ஒத்த திறமையும் ஒத்த மனப்பண்பும் உடையவரா யிருத்தல் வேண்டுவது அவசியம்."

"திருமணம் செய்துகொள்ளும்போது ஆண் மகன் தனக்கு மனைவியாக வாய்க்கக் கூடியவள் அன்புடையவளா அறிவுடையவளா அழகுடையவளா பணமுடையவளா என்று வரிசையாகக் காண வேண்டும். ✓ இவற்றுள் **அன்பும் அறிவுமே** முக்கியமானவை. (அன்பும் அறிவுமே ஒருவர்க்குப் புற எழிலைக் காட்டிலும் அக எழிலை வளர்க்கின்றன.)"

"அறிவும் உண்மையும் நெருங்கிய தொடர்புடையன. ஒருவனிடம் அறிவு வளர்ச்சி தடைபடும் போது, தீயபண்புகள் தலைகாட்டும். அதனால் உண்மையுடைமை வலிமை இழக்கும்."

"எதனையும் ஆராயும் மனம் எவர்க்கும் இருக்க வேண்டும். ஒரு பொருளின் மெய்த்தன்மையைப் பகுத்து அறிதலே சிறந்த அறிவாகும். அந்த அறிவாற்றலைப் பெற்றவன் பிறர்க்கு அடிமையாக மாட்டான். அறிவின் முன்னர் அறியாமை தலைவணங்குதல் இயல்பு. அறியாதவன் தன்னை அறிந்தவனாக நினைத்தல் பெருந்தவறு. அந்த எண்ணம் அவன் வாழ்க்கையையே அழித்துவிடும்."

"ஒரு நாட்டு மக்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமாயின், அந்நாடு மிகப் பெரியதாகவோ

மிகச் சிறியதாகவோ இருத்தல் கூடாது. அந்நாடு ஓர் அளவுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அந்நாட்டில் அமைதியும் மனநிறைவும் அரசோச்சுவதைக் காணலாம்.''

''எதிலும் ஓர் அளவு இருக்கவேண்டும். வறுமையற்றவர்களிடத்தில் நல்ல பண்புகள் இருக்கக் காணலாம். வறுமையால் வாடுபவர்களிடத்தும் செல்வத்தில் திளைப்பவரிடத்தும் நல்லியல்புகளைக் காணல் அரிது. அளவுக்கு அப்பாற்பட்ட வறுமையால் எண்ணற்ற தீயபண்புகள் வளரும். பிறரது வாழ்க்கையைக் கண்டு பொறாமைப்படுதல், தன் வாழ்க்கையில் வெறுப்புறுதல், புரட்சிகள் செய்ய முனைந்தெழுதல் என்பன அவர்களிடம் சாதாரணமாகக் காணப்படும் குறைகளாகும். செல்வத்தில் திளைப்பவரிடத்து ஆடம்பரமும் செல்வமும் காணலாம். எனவே, இவ்விருதுருவங்கட்கும் இடைப்பட்ட வாழ்வே நல்வாழ்வாகும்.''

''நினைவாற்றலும், எதனையும் உயர்ந்த மனநிலையில் நோக்கும் தன்மையும், எதனையும் விரைவில் அறிந்து கொள்ளும் ஆற்றலும், நேர்மையும், ஒழுங்கும், உண்மையும், அஞ்சாமையும், அடக்கமும், அன்பும் பெற விரும்பும் ஒருவன் எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் அந்தத் தொழில் நல்ல வளர்ச்சியைப் பெறும். ஒவ்வொருவரும் தமக்கு விருப்பமான தொழிலில் ஈடுபடுவதுதான் அறிவுடைமையாகும். 'இவர் இதைச் சொன்னார்—அவர் அதைச் சொன்னார்—இவர் எல்லாம் அறிந்தவர்—எனவே, இவர்

பேச்சை நாம் கேட்டு நடப்போம்' என்று எண்ணு வது தவறு. நம்முடைய அறிவை நன்கு பயன்படுத்தி நல்லன அறிந்து செய்வதே அறிவுடைமையாகும்."

"வாழ்நாள் முழுவதும் இன்பமாக இருக்க வேண்டுவோர் **நேர்மை** உடையவராக இருக்கவேண் டும். நேர்மையான வாழ்க்கை வாழ்பவர் இளமை யிலும் முதுமையிலும் இன்பமாகவே இருப்பர். தீய பண்புகளை உடையவர்கள் இளமையிலும் முதுமை யிலும் துன்ப நிலையிலேயே இருப்பர் என்பதை கூறவும் வேண்டுமோ?"

"இரவில் அச்சந்தரத்தக்க கனவுகளைப் காண் பவர் அந்த நிலையிலிருந்து விடுபட வேண்டுமாயின், என்ன செய்ய வேணடும்? வாழ்க்கையைத் தூய்மை யாகவும் அமைதியாகவும் நடத்திச் செல்லுபவன் அளவோடு உண்ண வேண்டும்; மனத்தில் உள்ள விருப்பு வெறுப்புக்களை அகற்றிவிட வேண்டும். உறங்கச் செல்லுகையில் அமைதியான மனம் உடை யவன் தீயகனவுகள் காண வழியில்லை."

"நல்ல பண்புகளைப் பெறுவதிலும் பிறர்க்குப் புகட்டுவதிலும் ஆர்வம் காட்டுவோர் தொகை பெருக வேண்டும். ஒருவன் தன் தீய பண்புகளின் அளவிற்கு ஏற்பவே துன்பத்தை நுகர்வான்; பிறரைத் துன்புறுத்தும் அளவிற்குத் துன்பப்படுவான். ஆத லால் தீய பண்புகளை வளரவிடாமல் நல்ல பண்புகளை வளர விடுதலே நல்லது."

"**துன்பம்** என்பது எல்லோர் வாழ்க்கையிலும் வந்து போகும் ஒன்றுதான். எனவே, துன்பம் உண்

டாகும்போது நாம் மன அமைதியைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் அப்பொழுதுதான் பொறுமையை மேற்கொள்ள வேண்டும். பொறுமையில்லாமலும் அமைதி இல்லாமலும், உணர்ச்சி வயப்பட்டு நடப்பதால் பெறக்கூடிய பயன் ஒன்றுமே இல்லை. இந்த மனநிலையே இன்பம் வந்தபோதும் இருக்கவேண்டும்.''

“அளவுக்கு மேற்படுவது எதுவும் ஆபத்தைத் தான் கொடுக்கும். உண்ணல், உறங்கல், நுகர்தல் முதலியவற்றில் ஒவ்வொருவனும் தன்னடக்கத்துடன் இருப்பது இன்றியமையாதது. எல்லாவற்றிலும் ஓர் அளவு இருப்பதே நல்லது. அப்பொழுதுதான் ஒருவன் நல்ல வளர்ச்சியோடு இருக்க முடியும். அந்நிலையிற்றான் ஒருவனுக்கு உடல் வளர்ச்சியுடன் உள்ள வளர்ச்சியும் உயர்ந்தோங்கி யிருக்கும்.''

“உடல் அழகாக இருக்க வேண்டும் என்று விரும்பாதவர் யார்? அழகு, வலிமை இவற்றை யுடைய ஓர் உடல் வளம் பெற்றுச் சிறப்புற்று விளங்கும். நல்ல உணவுப் பொருள்களை உட்கொள்ளுவதும் திறந்த வெளிகளில் உலாவுவதும் தேவையான அளவுக்கு உழைப்பதும் நல்ல கவர்ச்சியான உடலுக்குத் துணையாக அமைவனவாகும். உடல் அழகுற்று விளங்க வேண்டும் என்று எண்ணுவதைப் போலவே ஆன்மாவும் அழகுற்று விளங்க வேண்டும் என்று எண்ணவேண்டும். அறிவு, அஞ்சாமை, தன்னடக்கம், நேர்மை முதலிய பண்புகள் ஆன்மா சிறப்புற்று விளங்குவதற்கு துணைபுரிவனவாகும்.''

"எவ்வளவுதான் அறிவாற்றல் கொண்ட இன மாயினும் **அறிஞர்களுடைய நல்லுரைகள்** துணையாக இருக்க வேண்டுவது தேவையாகும். அறிஞர் யோசனைகள் ஆற்றுப் பெருக்கு உயர்வதும் தணிவதும் போலும் இரா. அவை என்றும் ஒரே நிலையில் இருப்பவை. அறிஞர் தகுதியானவையும் நேர்மையானவையுமாகிய நல்லுரைகளையே கூறுவர். அவர்தம் கூற்றுக்களில் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும், இனப்பற்றும் கலந்திருக்கக் காணலாம்."

"நம்மில் சிலர் சிலரைச் சுட்டி, 'அவர் பெருந்தன்மையில்லாதவர்' என்று குறை சொல்வதைக் காணலாம். பெருந்தன்மை இல்லாமை குறையுடைமை எனின், பெருந்தன்மை என்பதுதான் யாது என்பதை நாம் அறிய வேண்டாவா?

"பிறர் நமக்கு இழைத்த இன்னல்களுக்காக அவர்களைக் கடுமையாகத் தண்டியாமல் விடுதலும், மனிதர் இயல்பாகச் செய்யும் தவறுகளைப் பொறுப்பதும், நமக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை மறந்து நன்மைகளை மட்டும் எண்ணுவதும் **பெருந்தன்மை** யாகும்."

✓"நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். (படிப்பதற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுதும் பழகுவதற்குரிய நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும்போதும் விழிப்பாக இருப்பது நன்மை தரும். நல்ல நூல்கள் நமக்கு நல்லறிவைப் புகட்டும். நல்ல நண்பர்கள் நமக்கு

ஏற்படும் துன்பங்களைப் போக்குவதற்குரிய வழிகளைக் கூறுவர்; என்றும் நம் வாழ்வில் கருத்துடையவராய் இருப்பர். இப்பண்புகட்கு மாறுபட்டவர்கள் தீய நண்பர்கள் ஆவர்."

"பிள்ளைகளைப் பெறுவதைப் பெருமிதமாகக் கருதுவதைப் போலவே பிள்ளைகளை வளர்ப்பதையும் பெருமிதமாகக் கருத வேண்டும். பெரியோர்களைப் பார்த்தே பிள்ளைகள் பலவற்றைக் கற்றுக் கொள்ளுகின்றனர். எனவே, பிள்ளைகளுடைய நல்வாழ்வில் கருத்துடைய பெற்றோர்கள் நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டவராய் இருத்தல் இன்றியமையாததாகும்."

"ஒரு நாட்டின் வாழ்வு அல்லது தாழ்வு அந்த நாட்டு இளைஞர்கள் பெறும் கல்வியின் தரத்தையே பொறுத்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம்."

---

ஆர். கே. நூலகம்